# தமிழரசு

1-3-1987 ரூ. 1




சின்னஞ்சிறு குழந்தைகளின்
எண்ணத்தில் எப்பொழுதும்
எதிரொலிக்கும்
சுற்றுலாப் பொருட்காட்சி
TIDCO



# எல்லாருக்கும் நல்வாழ்வு

# அரசின் ஏற்றமிகு திட்டங்கள்!

## சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர்

## திரு எஸ்.எல். குரானா உரை

மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே!

உங்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டு, தமிழ்நாட்டிற்கும் தமிழக மக்களுக்கும் மேலும் வளம் சேர்க்கும் ஆண்டாக அமையும் என நான் நம்புகிறேன்.

2. 1987ஆம் ஆண்டு, மாநிலத்தின் வரலாற்றிலேயே உன்னதமான ஆண்டாகத் திகழ வேண்டும். இப் புத்தாண்டின் தொடக்கத்தில் மாநில அரசின் நெடுநாளைய உறுதிமொழிகளில் ஒன்று நிறைவேறியது. ஏழைமக்களின் துயர் துடைக்கவும், அரசியலமைப்பில் மாநிலத்திற்குள்ள நெறிமுறைக் கோட்பாடுகளைக் கருத்திற் கொண்டும் 1—1—1987 முதல், கள், சாராயம்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018 மலர் : 17 இதழ் : 17

அட்சய - மாசி 17 1-3-1987

ஆகியனவற்றைத் தயாரிப்பதையும், விற்பனை செய்வதையும், அருந்துவதையும் அரசு தடை செய்துள்ளது. புத்தாண்டு மலர்ந்தபோது மாநிலத்தில் உள்ள கள், சாராயக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. அதேசமயம், கள் இறக்குவோர் சுமார் 30,000 பேருக்கு புதுவாழ்வு அளிக்கும்வகையில் அரசு ஒரு திட்டத்தை வகுத்துள்ளது. அதன்படி, முன்பு கள் இறக்கியவர்கள் இப்பொழுது பதநீர் இறக்கவும், பனைவெல்லம் தயாரிக்கவும் வேண்டிய கருவிகளையும் சாதனங்களையும் வாங்கிக் கொள்ள அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 ரொக்க உதவி அளிக்கப்படுகிறது. இவ்வாறாக, இப் புத்தாண்டு மக்களின் மனதில் நம்பிக்கையை மிளிரச் செய்யும் வகையில் நல்ல ஆண்டாக மலர்ந்தது.

**3.** இந்த ஆண்டு பொங்கல் திருநாள் ஒரு வகையில் தமிழக மக்களுக்கு முக்கியமான நன்னாளாகும். அன்றுதான் கோடைக்கானலில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் தொடங்கி வைக்கப்பட்டு, மாநிலத்தின் பல பகுதிகளில் உள்ள மக்கள் தொலைக் காட்சியினைக் காண வழி வகுக்கப்பட்டது. மாநிலத்தில் பெரும் பகுதியினர் இப்பொழுது வட்டாரத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கின்றனர்.

**4.** ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாம் ஆண்டு, விரைவில் நிறைவடையப் போகிறது. முன்பிருந்ததைப் போலவே மாநில அரசின் திட்டச் சாதனைகள் பாராட்டும்படியாக உள்ளன என்பதை உங்களிடத்தில் மகிழ்ச்சியுடன்



தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1986–87ஆம் ஆண்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ரூ. 1,153 கோடிக்கு மாறாக, எய்தும் திட்டச் செலவு ரூ. 1,200 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேகத்தில் பொருளாதார நிலையை வளர்ச்சியடையச் செய்ய மாநில அரசு மூன்றாம் ஆண்டில் ரூ. 1,250 கோடி ஒதுக்கக் கருதியுள்ளது. ஆயினும், இந்த அளவிற்குச் செலவிட நிதி ஆதாரத்தில் ரூ. 86 கோடி அளவிற்குப் பற்றாக்குறை இருப்பதாக மையத் திட்டக் குழு கணித்துள்ளது. தொடர்ந்து வறட்சி நிலையும் வடகிழக்குப் பருவ மழை பெய்யத் தவறியதும் மதுவிலக்கைக் கொண்டு வந்ததன் காரணமாக வருவாய் இழப்பும் அரசுப் பணியாளர்களுக்குக் கருணைக்கொடை வழங்கியதும் அவர்களுக்கு மத்திய அரசு அறிவித்ததற்கு ஏற்ப அகவிலைப் படி வழங்குவது குறித்த நடைமுறையைத் திருத்தியமைத்தது போன்றவற்றால் மாநில அரசின் வருவாய் வெகுவாகப் பாதிக்கப்பட்டதும் இதற்கு முக்கியக் காரணங்களாகும். அடுத்த ஆண்டு நிதிப் பற்றாக் குறையை ஈடுசெய்யவும், திட்டச் சாதனையில் நமக்கு ஏற்கெனவே கிடைத்துள்ள வெற்றியைத் தொடர்ந்து நிலைநாட்டவும் மாநில அரசுக்கு இயலும்பொருட்டு ரூ. 86 கோடியை மத்திய

சிறப்பு நிதியுதவியாகவோ, திட்டப் பணிக்கு முன்கூட்டியே அளிக்கப்படும் உதவியாகவோ வழங்கும்படி மத்திய அரசை நாம் ஏற்கனவே கேட்டுக் கொண்டுள்ளோம்.

**5.** பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமான மின்சக்தித் துறை 1987–88ஆம் ஆண்டில் திட்டப் பணிக்கான முதலீட்டில் முக்கிய அங்கம் வகிக்கிறது. 1986ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் இச் சட்டமன்றத்தில் நான் உரையாற்றியபோது, வெளி அமைப்பு உதவியுடன் மின் உற்பத்தித் திறனைப் பெருக்க அரசு பரிசீலித்து வருவதாகக் குறிப்பிட்டேன். வட சென்னையில் அனல் மின் நிலையம் அமைக்க மாநில அரசுக்கு 150 மில்லியன் டாலர் நிதியுதவி வழங்க அரசு, ஆசியா வளர்ச்சி வங்கியுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளதை உங்களிடத்தில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இதற்கிடையில் பல புதிய மின் திட்டங்களை மேற்கொள்வதன் வாயிலாக மாநிலத்தின் மின் உற்பத்தித் திறனையும் நாம் பெருக்கி வருகிறோம். மேட்டூர் அனல் மின் நிலையத்தின் முதல் கட்டப் பிரிவு ஏற்கெனவே செயல்படத் தொடங்கிவிட்டது. இரண்டாவது பிரிவு விரைவில் செயல்படத் தொடங்கும்.




இவ்விரு பிரிவுகளும் 420 மெகாவாட் மின் சக்தியை உற்பத்தி செய்யும். இதுபோலவே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மூன்றாவது விரிவாக்கத் திட்டப் பணியும் தொடங்கியுள்ளது. இதிலிருந்து 420 மெகாவாட் மின்சக்தி உற்பத்தியாகும். தூத்துக்குடியில் உள்ள அனல் மின் நிலையங்களுக்குப் போதுமான அளவிற்கு நிலக்கரி வழங்கச்செய்ய மாநில அரசுக்குச் சொந்தமான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடிக்கு நிலக்கரியை ஏற்றிவர தன்னுடைய கப்பல்களைப் பயன்படுத்தி வருகிறது. புதிதாக வாங்கியுள்ள மூன்று கப்பல்களும் இக் கழகத்தினால் இப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் உள்ள ஐந்து பிரிவுகளைக் கொண்ட அனல் மின் நிலையத்தைக் கடலூரில் படிப்படியாக அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதுகுறித்த தொழில் நுட்ப ரீதியிலான அனுமதிக்கும், நிலக்கரி தேவைக்கும் திட்ட அறிக்கை ஒன்று மத்திய மின்சக்தி அதிகார மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**6.** பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் வருங்காலத்தில் தமிழ்நாட்டில் முக்கியப் பங்காற்றும் என்பதை அரசு நன்கு அறியும். எனவேதான், மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் முதலாவது சுரங்கத்தின் இரண்டாவது விரிவாக்கத் திட்டத்தை மேற்கொள்ளவும், ஆண்டுக்கு 11 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்க மூன்றாவது சுரங்கத்தைத் தோண்டவும் மாநில அரசு தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கும். பழுப்பு நிலக்கரியைக்




கொண்டு உற்பத்தி செய்யப்படும் இந்த மின் சக்தியைத் தமிழ்நாட்டிற்கு அளிக்கும்படி நாம் மத்திய அரசை கேட்டுக் கொள்கிறோம். இதுபோலவே, நவீன எரிசக்தி வாயில்களைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டி தமிழ்நாடு மின்சார வாரியம், தூத்துக்குடியில் உள்ள முல்லைக் காட்டில் 55 கிலோ வாட் திறன்கொண்ட 16 காற்றாலை மின் உற்பத்தி இயந்திரங்களை நிறுவியுள்ளது. அங்கு இதே திறனுள்ள மேலும் நான்கு காற்றாலை மின் உற்பத்தி இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

**7.** சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு நான் உரையாற்றியபோது, மாநில அரசு நிறுவனங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதில் நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டேன். இந்த வகையில் அரசு ஏற்கெனவே பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) சீரமைக்கப்பட்டிருப்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர். இதே வழியில் தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனத்தையும் (டாசெல்) சீரமைக்க அரசு முடிவு செய்துள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள் பொருளாதார வகையில் தனித்து இயங்குவதோடு மட்டுமல்லாமல், தொழில் வளர்ச்சிப் பணியிலும் ஈடுபட வேண்டுமென்பதை அரசு நன்கு அறியும். ஆகவே, அரசுத் துறை நிறுவனங்கள் இவ்விரு நோக்கங்களையும் இணைத்து செயல்பட அனைத்து நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

**8.** தொழில் துறையில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அரியலூர் சிமிட்டித் தொழிற்சாலையை நவீனமயமாக்கவும், விரிவுபடுத்தவும் ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. 100 சதவீதம் ஏற்றுமதியையே நோக்கமாகக் கொண்ட ''டாமின் கிரானைட்ஸ்'' என்கிற தமிழ்நாடு கனிம நிறுவனத் தொழிற்சாலை மணலியில் தொடங்கப்பட்டுள்ளது. கிராபைட் தாதுப் பொருளைச் செய்முறைப் படுத்தும் தொழிற்சாலை ஒன்று, சிவகங்கையில், வெளிநாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் நிறுவப் பட உள்ளது. சுழல்பொறி சூளையிலிருந்து கிடைக்கிற எரியுண்ட மாக்னசைட், இரசாயன செய்முறைப்படுத்துத் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கிற உயர்ரக மெக்னீசியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தனி உயர் வெப்ப செங்கற்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 52 கோடி மதிப்பீட்டுச் செலவில் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் நிறுவக் கருதியுள்ளது. அண்மை ஆண்டுகளில் அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத்தில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அவ்வாறு முதலீடு செய்வதை இந்த அரசு தொடர்ந்து வரவேற்பதுடன் அவர்களுக்குத் தகுந்த ஊக்கமும் அளிக்கும்.

9. இம் மாநில அரசு மேற்கொண்ட முயற்சியின் பயனாக சிறு தொழில் துறையும் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. நிலையான பதிவு வழங்கப்பட்டுள்ள சிறு தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, 1986–87 மத்தியிலேயே 77,382 ஆக உயர்ந்துள்ளது. இவை திரட்டியுள்ள மூலதனம், நடப்பு நிதியாண்டுத் தொடக்கத்திலேயே சுமார் ரூ. 950 கோடியை எட்டிவிட்டது.

10. மத்திய அரசு அறிவித்துள்ள புதிய சர்க்கரைக் கொள்கையை இம் மாநில அரசு கருத்திற்கொண்டு, மாநிலத்தில் இயன்ற அளவுக்குப் புதிதாக சர்க்கரை ஆலைகள் தொடங்க முயன்று வருகிறது. இவ்வகையில் மத்திய அரசு முன்பு ஆதரவு அளித்ததுபோல தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம். சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு நான் உரையாற்றியபோது, உதகமண்டலத்தில் ரூ. 170 கோடி செலவில் 'எக்ஸ்' கதிர் படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவவேண்டுமென மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டேன். இத் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கிவிட்டதென்பது மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். சென்னை, எண்ணெய் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை மணலியில் ரூ. 600 கோடி செலவில் அமைக்கக் கருதியுள்ள 'அரோமாட்டிக் சேர்மங்கள்' தயாரிப்புத் தொழிற்சாலைக்கு மத்திய அரசு இசைவளித்தமைக்கு இத் தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இத் தொழிற்சாலை சார்ந்த தொழில்கள் ஏராளமாக உருவாக இதனால் ஏதுவாகும். சென்னை உர நிறுவனத்தின் உற்பத்தித் திறனை இரு மடங்காக்கும் திட்டத்திற்கு அனுமதி அளிக்கும்படியும், ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அமைக்க உத்தேசித்துள்ள 15 உரத் தொழிற்சாலைகளில் ஒன்றினைத் தமிழ்நாட்டில் அமைக்கும்படியும் மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளோம்.

11. கைத்தறி, துணித் தொழில் துறைகளுக்கும் மாநில அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மூடப்பட்ட நலிந்த ஆலைகளுக்குப் புத்துயிரளிப்பது பற்றி சில காலமாகவே அரசு தீவிரமாகச் சிந்தித்து வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள சோமசுந்தரம் நூற்பாலையை 1986 ஆகஸ்டில் மாநில அரசு அரசுடைமையாக்கியது. பிறகு கோயம்புத்தூரிலுள்ள பவானி ஆலையை உதவிபெறும் நிறுவனமாக அரசு அறிவித்து 1986 அக்டோபரில் அதை மீண்டும் திறக்க ஏற்பாடு செய்தது. ஸ்ரீ ஹரி ஆலையும் கூட்டு நிர்வாக அடிப்படையில் அரசின் உதவியுடன் 1986 அக்டோபரில் மீண்டும் திறக்கப்பட்டது.



மூடப்பட்ட ஏனைய சாத்தியமான ஆலைகளுக்கும் புத்துயிர் அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. மத்திய அரசின் புதிய துணி ஆலைக் கொள்கையின் ஒரு பகுதியாக இம் மாநிலத்திலுள்ள விசைத் தறிகள் அனைத்திற்கும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கவும் மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

12. கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கைத்தறித் தொழிலைப் பாதுகாப்பதும், கைத்தறி நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் அரசின் கொள்கையாகும். இம் மாநிலத்தில் இயங்கி வருகின்ற 5.56 இலட்சம் கைத்தறிகளில் 3.84 இலட்சம் கைத்தறிகள் 1986 நவம்பர் திங்களுக்குள் கூட்டுறவு ஏற்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 60 சதவீத தறிகளைக் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று மத்திய அரசு வரையறுத்துள்ள தேசிய இலக்கினை தமிழகம் ஏற்கனவே தாண்டிவிட்டது.

13. நம்முடைய பொருளாதாரத்தில் வேளாண்மை மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பாதகமான பருவ நிலை இருந்தபோதிலும் அரசு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் இடையறாது மேற்கொண்டதன் பயனாக உரிய அளவுக்கு உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் எட்ட முடிந்தது. சம்பா பருவத்தில் இயல்பான உற்பத்திக்கு மேலாக எக்டேர் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 750 கிலோ கிராம் நெல்லைக் கூடுதலாக உற்பத்தி செய்வதெனும் இலக்கை எய்த, நடப்பாண்டில் '5 முனை அணுகு முறை' பின்பற்றப்பட்டு வருகிறது. வேளாண்மைத் துறை முழுவதையும் நவீன மயமாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உழவுக் கருவிகளைக் கையாளுவதில் தேவையான பயிற்சியளித்து பண்ணை இளைஞர்களை இத் தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுத்தச் செய்ய அதிக நாட்டம் செலுத்தப்படும். உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிருக்குத் தேவையான உழவுத் தொழில் நுட்ப உத்திகளைக் கற்றுக் கொடுக்க 'உழவுத் தொழிலில் தமிழ்நாட்டு மகளிர்' என்னும் புதியதொரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.




14. இம் மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளாகப் பெய்த மழையளவு, இயல்பான மழை அளவைவிட மிகவும் குறைவாக இருந்து வருவது நமக்கு ஆழ்ந்த கவலை தருவதாக உள்ளது. இதனால், மாநிலத்தில் பாசன நீர் வளமும், குடிநீர் வளமும் குறைந்து வருகின்றன. இந் நிலைமையைச் சமாளிக்க அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பிரச்சினையை அரசு எதிர்கொண்டு குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கவும், குறைந்துவரும் பாசன வளத்தை

ஈடு செய்யவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. எனவேதான், கடந்த ஆண்டுகளில் செய்ததைப் போலவே குடிநீர் வழங்குத் திட்டங்களுக்கு இப்பொழுதும் கணிசமான நிதி ஒதுக்கப்படுகிறது. குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின்கீழ் 1986–87-ல் ரூ. 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டிலும் இதே அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 1986–87ஆம் ஆண்டிலும் 1987–88ஆம் ஆண்டிலும் விரைவுபடுத்தப்பட்ட கிராமப்புற குடிநீர் வழங்குத் திட்டம், குறைந்த அளவு தேவைகள் திட்டம் ஆகியவற்றை 2,225 குடியிருப்புப் பகுதிகளில் செயல்படுத்தி முடிப்பது என்று திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன் வறட்சித் துயர் தணிக்க 1986 டிசம்பர் வரை 5,339 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 1986–87, 1987–88ஆம் ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு நகர்ப் பகுதிகளில் 14 குடிநீர் வழங்குத் திட்டங்களைச் செயல்படுத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் குடிநீர் வழங்கலை அதிகரிக்க அனைத்து நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (UNDP) II-ஆம் நிலை ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் நீரைத் தூய்மைப்படுத்தும் நிலையத்தைக் கட்டுதல், கீழ்ப்பாக்கம் நீர் வழங்குப் பணிகளில் நீரேற்றும் திறனை அதிகப்படுத்துதல், பூண்டி, கொற்றலையாறு, கன்னிகைபேறு ஆகிய இடங்களில் நிலத்தடியிலிருந்து நாள் ஒன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் நீர் எடுக்கும் திட்டம் ஆகியவை ரூ. 15 கோடி மதிப்பீட்டுச் செலவில் நிறைவேறி வருகின்றன.

**15.** கடந்த சில ஆண்டுகளாகக் குறைந்த அளவு மழை பெய்ததனால் தெளிப்பு மற்றும் சொட்டு நீர்




பாசன முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, ஒருங்கிணைந்த பயிர் வளர்ப்புத் திட்டமொன்றை அரசு பரிசீலித்து வருகிறது. இதன் மூலம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த இயலும். நம்முடைய மாநிலத்தில் இம்முறைகளைக் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட முன்னோடி முயற்சிக்கு நல்ல பலன் கிட்டியுள்ளது. உழவர்கள் இந்த நவீன முறைகளைக் கையாண்டு, பயிர் விளைச்சலைப் பெருக்கி, அதிக ஆதாயத்தை ஈட்ட விரும்புகின்றனர். இந்த வகையில் அவர்களுக்கு மேலும் ஊக்கமளித்து அடிப்படைத் தேவையாக உள்ள நீர் வளத்தைப் பெருக்க, தெளிப்பு மற்றும் சொட்டு நீர் பாசன முறைகளை மக்களிடையே பிரபலப்படுத்தும் பெருந் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசு கருதுகிறது. இத்திட்டத்தைச் செயற்படுத்த, தேவைப்படும் அளவிற்கு வெளி அமைப்பு உதவியும் கேட்கப்படும். சிறு உழவர்களும், சொற்ப நில உழவர்களும் இத் திட்டத்தினால் பயனடைய வேண்டி, அவர்களுக்கு உதவித் தொகையும் கடன் உதவியும் அளிக்கப்படும். பாசன நிலையில் நீர் வழங்கும் முறையைச் சீரமைக்கும் மேலும் ஒரு நடவடிக்கையாக தேசிய நீர் நிர்வாகத் திட்டம் எனப்படும் திட்டப் பணி ஒன்றை மத்திய அரசு தயாரித்துள்ளது. இது உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும்.




ரூ. 58.87 கோடி மதிப்பீட்டுச் செலவில் தமிழ் நாட்டில் பாசன ஏற்பாடுகள் பலவற்றை இத் திட்டத்தின் கீழ் கொண்டுவரக் கருதப் பட்டுள்ளது. 1,09,149 எக்டேர் பரப்பளவு நிலம் இத் திட்டத்தினால் பயனடையும்.

**16.** மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசு கணிசமான அளவிற்கு நிவாரணமும் அளித்து வருகிறது. அடுத்தடுத்த ஆண்டுகளில் வெள்ளமும் வறட்சியும் ஏற்பட்டதையடுத்து, விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்க, அரசு, 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி இருந்த வேளாண்மைக் கடன்கள் குறித்த வட்டி, அபராத வட்டி, காலங்கடந்த நிலுவைகள் குறித்த வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தது. பெரு வாரியான உழவர்கள் இந்த நிவாரணத்தைப் பெற வேண்டி நிலுவையாக உள்ள கடன் தொகையில் 50 சதவீதத்தைத் திருப்பிச் செலுத்த அரசு1986ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாளிலிருந்து 1987ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28ஆம் நாள் வரை கால நீட்டிப்பு அளித்துள்ளது. இவ்வாறு தள்ளுபடி செய்ததனால் விவசாயிகளுக்கு அளிக்கப் படும் நிவாரணம் ரூ. 125 கோடி அளவிற்கு இருக்கும். காலங்கடந்த நிலுவைத் தொகையால் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்த கூட்டுறவு அமைப்புகள் குறிப்பாக வேளாண்மைக் கடன் வழங்குத் தொடக்கச் சங்கங்கள், தொடக்க நிலவள வங்கிகள் இந்த நடவடிக்கையால் வலுப் பெறும். ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த முறையில் கடன் வசதி, விற்பனை வசதி, ஏனைய பணிகள் ஆகியவற்றை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், பெரிய அளவிலான பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பழங்குடியினருக்கு வசதிகள் செய்து கொடுக்க, கூட்டுறவு இயக்கமும் முடுக்கி விடப்பட்டு வருகிறது. 1986ஆம் ஆண்டில் 13 சங்கங்கள் இருந்ததற்கு மாறாக, 1987ஆம் ஆண்டு இறுதிக்குள் பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 17 இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1985ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் இம் மாநிலத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் விரிவான பயிர் காப்புறுதித் திட்டம், விவசாயிகளுக்குப் பயன் தரும் மற்றொரு நடவடிக்கையாகும். இத் திட்டம் நடப்பு நிதியாண்டில், கம்பு, சோளம், கேழ்வரகு, எள் ஆகிய பயிர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**17.** மக்களுக்கு நலம் தரும் பணித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டம், பாடப் புத்தகங்களையும் சீருடைகளையும் இலவசமாக வழங்கும் திட்டம் ஆகியவற்றின் பயனாக அதிகமான குழந்தைகள் பள்ளிக்கு வருவதுடன், படிப்பைப் பாதியில் விட்டுவிடுபவர்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. தொடக்கப் பள்ளி அளவில் படிப்பைப் பாதியில் விட்டுவிடுபவர்களின் எண்ணிக்கை வீதம்

1977–78ஆம் ஆண்டில் 40 சதவீதமாக இருந்தது, 1984–85ஆம் ஆண்டில் 23 சதவீதமாகக் குறைந்து உள்ளது. 1986–87ஆம் ஆண்டில், கூடுதலாகப் பள்ளியில் சேர்ந்த 6 முதல் 14 வயது தொகுதியிலான மாணவர்களின் எண்ணிக்கை 2.84 இலட்சமாகும். 20 அம்சத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை இம்மாநிலம் மிஞ்சிவிட்டது. 1986–87ஆம் ஆண்டில் அரசு 100 உயர் நிலைப் பள்ளிகளையும், 79 மேல்நிலைப் பள்ளிகளையும் திறந்துள்ளது. இலவசமாகச் சீருடை வழங்கும் திட்டத்தினால் தையல் சங்கங்களிலும், மகளிர் மன்றங்களிலும், தொண்டு நிறுவனங்களிலும் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள சுமார் 40,000 மகளிருக்கு வேலைவாய்ப்புக் கிட்டியுள்ளது. ஆரம்பக் கட்டத்தில் அரசிடமிருந்து கிடைக்கும் உரிய நிதியுதவியுடன் வருவாய் திரட்டும் திட்டங்களை மேற்கொள்ள தொண்டு நிறுவனங்களுக்கு அரசு ஊக்கம் அளித்துவருகிறது. ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலத்துறையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத்துறையும் நடத்தும் மாணவரில்லங்களில் தங்கியிருப்பவர்களுக்கான உணவுக்கட்டண வீதம் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், அத்தகைய மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் சுமார் 80,000 மாணவர்கள் பயனடைவர்.




**18.** சிறார்களின் பணி நிலைமைகளை மேம்படுத்தவும், அவர்களுக்குச் சத்துணவு, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கவும், சிறாரை வேலைக்கமர்த்தும் முறையைப் படிப்படியாக ஒழிக்கவும், மாநில அரசு மத்திய அரசின் நிதி உதவியுடன் 1986–87ஆம் ஆண்டு முதல் சிவகாசி பகுதியில் 3 ஆண்டு முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இம் மாநிலத்தில் சிறார்க்குப் பயன் அளிக்கக் கூடிய மற்றொரு திட்டம், ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுப் பணித் திட்டமாகும். நடப்பாண்டில், புதுக்கோட்டை மாவட்டத்தில், மேலும் 13 கிராமப்புற ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுப் பணித் திட்டங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன. மேலும், இதுபோன்று 13 திட்டங்களைத் தொடங்கக் கருதப்படுகிறது. உடல் ஊனமுற்ற சிறார்களுக்கும் வயது வந்தோருக்கும் உதவ வேண்டுமென்ற நோக்கத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 2 வளர்ச்சி வட்டாரங்களில் மாவட்ட மறு வாழ்வு நிலையங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன. இது 5 ஆண்டுகளில் செயற்படுத்தக்கூடிய முன்னோடித் திட்டமாகும். இத் திட்டம் நன்கு பலனளிப்பதைப் பொறுத்தும் அனுபவத்தின் அடிப்படையிலும் ஏனைய பகுதிகளுக்கும் நீட்டிக்கப்படும். பழங்குடியினருக்காக ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் முழுமூச்சுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு வளர்ச்சி வட்டாரத்தில், மலிவு விலையில் உணவுதானியங்கள் வழங்கும் மத்திய திட்டத்தைச் செயற்படுத்துகையில் மாநில

அரசும் அரிசிக்கு கூடுதலாக உதவித் தொகை வழங்கி, ஒரு கிலோ அரிசியை ரூ. 1.40-க்கு வழங்கி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் அரிசியும் கோதுமையும் வழங்குவதால் 38,000 குடும்பங்கள் பயனடைகின்றன.

**19.** சத்துணவு, கல்வி, வேலை வாய்ப்பு போன்ற துறைகளில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள ஆக்கப் பூர்வமான வளர்ச்சியை நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினாலும், 1988ஆம் ஆண்டில் முடிவடையக்கூடிய தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தினாலும் கிடைக்கும் பயனை ஒருங்கு சேர்த்து, முன்மாதிரியான ஒரு திட்டத்தை அதாவது, ஒருங்கிணைந்த குழந்தை நல-சத்துணவுத் திட்டத்தைத் தொடங்க அரசு இப்போது திட்டமிட்டு வருகிறது. இவ்விரு திட்டங்களின்கீழ் அளிக்கப்பட்டு வரும் சத்துணவும் சுகாதாரப் பணிகளும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, மாநிலம் முழுவதிலும் உள்ள 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் அளிக்க இத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவு ரூ. 400 கோடியாக இருக்கலாம். இத் திட்டம் பற்றி ஏற்கெனவே, மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களிடமும், மத்தியத் திட்டக் குழுவிடமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இத் திட்டத்தின்பால் காட்டும் ஆர்வம், ஊக்கமளிப்பதாக இருக்கிறது. இத் திட்டத்திற்கு, அனைத்து நாட்டு வளர்ச்சி அமைப்பிடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் எளிய நிபந்தனைக் கடன் பெறும் வாய்ப்பு ஒளிமயமாக உள்ளது.




**20.** தாய்மார்களுக்கும் இளஞ்சிறார்களுக்கும் காலணிகள் :—பள்ளி செல்லும் சிறார்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களையும் சீருடைகளையும் இந்த அரசு வழங்கி வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். 1987–88ஆம் ஆண்டிலிருந்து, பள்ளி செல்லும் சிறார்களுக்கும் கிராமங்களிலுள்ள ஏழைத் தாய்மார்களுக்கும் இலவசமாகக் காலணிகளையும் வழங்கும் திட்டம் ஒன்றினை நிறைவேற்ற அரசு கருதியிருப்பதை உங்களிடத்தில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இத் திட்டத்தினால் நேரடியாகப் பயனடையும் மிக ஏழை எளியோர் தவிர தோல் தொழிலாளர்களைக் கொண்ட காலணிகள் தைப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் அளிப்பதன் மூலமாகப் பலருக்கு வேலை வாய்ப்பும் கிட்டும். மேலும் இத் திட்டத்தினால் மிக ஏராளமானவர்கள் பயனடைய உள்ளதால், இத் தேவையை நிறைவு செய்ய புதிய சங்கங்களும் உருவாகும்.

**21.** சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு நான் உரையாற்றியபோது, இம் மாநிலத்தில் பெருமளவில் வீடு கட்டும் திட்டத்தைச் செயற்படுத்த அரசு

திட்டமிட்டிருப்பதாக அறிவித்தேன். இதனைச் செயற்படுத்தும் பணி ஏற்கெனவே தொடங்கப் பட்டுள்ளது. எனினும், தற்போது ஒரு புதிய அணுகுமுறை உருவாக்கப்பட்டு வருகிறது. அண்ணா மாவட்டத்தில் சமூகப் பொருளாதார வீட்டு வசதி குறித்த முன்னோடி ஆய்வு ஒன்றை மாநில அரசு மேற்கொண்டது. இந்த ஆய்வின் அடிப்படையில், புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய அணுகுமுறையின் அடிப்படை நோக்கம், இத் திட்டத்தினால் கிராமப் பகுதிகள் குறிப்பாக அப் பகுதியிலுள்ள ஏழை மக்கள் நேரடியாகப்




பயன் பெற வேண்டுமென்பதேயாகும். இத் திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்படும் நிதி ஒதுக்கத்தை நேரடியாக வீடு கட்டுவதற்கு மட்டும் பயன்படுத்தாமல், வட்ட, கிராம அளவில் பரவலாக்கப்பட்ட பெருவாரியான கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்யவும், அவை, செங்கல், ஓடுகள், நீர்த்த சுண்ணாம்பு போன்ற கட்டுமானப் பொருள்கள் உற்பத்தி செய்யும் பணியை மேற்கொள்ளச் செய்யவும் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. மாநில அரசுக்குச் சொந்தமான தொழில் பிரிவுகளோ வெவ்வேறு வட்டங்களில் அமைந்துள்ள சிறு அளவிலான கட்டுமான இரும்புக் கடைகளோ வீடுகட்டத் தேவைப்படும் இரும்புப் பொருள்களைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப் புதிய திட்டத்தின்கீழ், கட்டுமானப் பொருள்கள் தயாரிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் பல ஏற்படுத்தப் படும். வரவு-செலவுத் திட்டத்திலுள்ள நிதி ஒதுக்கம், இக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனமாகப் பயன்படுத்தப்படும். இதனால், இச் சங்கங்கள் நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும் வணிக வங்கிகளிடமிருந்தும் 3 : 1 என்ற கடன்-மூலதன வீதாச்சார அடிப்படையில் கடன் பெற உதவும். இவ்வாறாக, வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்தைக் கொண்டு கணிசமான நிதி ஆதாரங்களைத் திரட்ட முடியும். இச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் கட்டுமானப் பொருள்கள் பயனடைவோருக்கு வழங்கப்படும். இவற்றைக் கொண்டு அவர்கள் தம் சொந்த உழைப்புடன் புதிய வீட்டைக் கட்டவோ அவர்களுடைய வீட்டை மேம் படுத்தவோ வேண்டும்.

**22.** கிராமம் முழுவதையும் உள்ளடக்கி, மேம் பாட்டுப் பணிகளை மேற்கொள்ள இயலும் வகையில் தொகுப்பு அடிப்படையில் இத் திட்டம் மேற் கொள்ளப்படும். ஏனைய கிராம வளர்ச்சித் திட்டங்களான குடிநீர் வழங்கல், துப்புரவு, சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு, சமூகக் காடு வளர்ப்பு போன்றவற்றுடன் இத் திட்டத்தையும்

ஒருங்கிணைந்து செயற்படுத்த வகை செய்யப்படும். பெருமளவில் வீடு கட்டும் இத் திட்டத்தைச் செயற்படுத்தும் இப் புதிய அணுகுமுறையால், வீடின்றி வானமே கூரையாக நினைத்து வாழ்ந்து வருவோருக்குக் குறிப்பிட்ட கால அளவிற்குள் வீடு கட்டித் தரவும், கிராமப் பகுதிகளில் பெருமளவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், உள்ளூரில் கிடைக்கக் கூடிய கட்டிடப் பொருள்களைப் பயன்படுத்தி, கட்டுமானப் பணியில் பயனடைவோரையும் ஈடுபடச் செய்யவும் கருதப்படுகிறது. இப் புதிய அணுகுமுறை பற்றி மத்திய அரசிடம் ஏற்கெனவே எடுத்துக்கூறி, கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டம், நிலமற்ற கிராமப்புற தொழிலாளர்களுக்கு பிரதமரின் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகியவற்றின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியை இப்போது வகை செய்யப்பட்டுள்ள முறையில் பயன்படுத்திக்கொள்ள மாநில அரசுக்கு அனுமதி அளிக்குமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நிதியுதவி நிறுவனங்களிடமிருந்தும், வணிக வங்கிகளிடமிருந்தும் போதிய அளவு கடன் பெறுவதற்கு வகைசெய்யுமாறும், இக் கடனுக்கு 4 சதவீத சலுகை வட்டிவீதமும் 3 ஆண்டுகளுக்குப் பிறகு இக் கடனைத் திருப்பிச் செலுத்தவும் அனுமதி வழங்குமாறும் மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையின் மூலம் இத் திட்டத்தினை விரிவுபடுத்தி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பயனடைவோரின் எண்ணிக்கையைப் பெருக்குவதால் நமது குறிக்கோளை எட்ட முடியும்.

**23.** கிராமப் பகுதிகளில், பெருமளவில் வீட்டு வசதித் திட்டத்தைச் செயற்படுத்தும் அதே சமயம், நகர்ப்பகுதிகளிலுள்ள வீட்டுவசதிப் பிரச்சினை குறித்தும், நகர்ப் பகுதிகளை மேம்படுத்துவது குறித்தும் அரசு ஆழ்ந்து சிந்தித்து வருகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் மனைகள்-பணிகள் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாடு, போக்குவரத்து வசதி, நகராட்சிப் பணிகள், தொழில்நுட்ப உதவி போன்றவற்றைச் செயற்படுத்துவதற்கு உலக வங்கி




யின் நிதி உதவியைப் பெற, ரூ. 428 கோடி செலவிலான தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாடு குறித்த புதிய திட்டம் ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்துடன், வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சிக்குத் தற்போது அளிக்கப்பட்டு வரும் முக்கியத்துவம் தொடர்ந்து அளிக்கப்படும்.

**24.** இத் திட்டங்களைச் சிறந்த முறையில் செயற்படுத்துவதற்குப் பொதுமக்களும் இதில் பங்குகொள்ள வேண்டியது அவசியமாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள்




இப் பணியில் முக்கியப் பங்காற்ற வேண்டும். சென்ற ஆண்டு சட்ட மன்றத்தில் நான் உரையாற்றியபோது குறிப்பிட்டிருந்தபடி, நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெற்று, மாநிலத்தில் உள்ளாட்சி மன்றங்கள் மீண்டும் பொறுப்பேற்றுள்ளன. இந்த அரசு மக்களாட்சி மரபுகளைக் கட்டிக் காப்பதுடன், நிருவாக அமைப்பைச் சீர் செய்யவும் பொறுப்பேற்றுள்ளது.

**25.** மாறி வரும் காலத்தின் தேவைக்கு நிருவாகத்தினர் அதிக முக்கியத்துவம் கொடுக்க அரசு பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. சட்ட மன்றத்தில் கடந்த ஆண்டு நான் உரையாற்றிய போது ஏற்கெனவே அறிவித்தபடி மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் செயற்படுத்தப் பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டம் ஏற்கெனவே இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதைத் திறம்படக் கண்காணித்து மேற்பார்வையிட வேண்டி அரசு நிலையில் நவீன நிருவாகத் தகவல் முறையை உருவாக்க சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலக அளவில் தகவல் தொகுக்கப்பட்டு நடைமுறைக்கு ஏதுவாக நிலையான தகவல் தொகுப்பு அடிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக முக்கியமான தகவலைச் சேகரித்து வைத்து, விரைந்து அனுப்புவதற்கு கணக்கீட்டுப் பொறியை அமைக்க தேசிய தகவல் மையக் கணக்கீட்டுப் பொறி அமைப்பின் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது. திட்டப் பணிகளைத் திறம்படக் கண்காணித்துத் தொடர் நடவடிக்கை எடுக்க இதனால் ஏதுவாகும்.

**26.** பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பது பொறுப்புள்ள நிருவாகத்தினரின் முக்கியப் பணியாகும். பொதுமக்கள் குறை தீர்க்கப்படுவதையும், அதனைக் கண்காணிப்பதற்குமான நடைமுறைகள் எளிதாக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் குறைகளைக் கவனிக்க ஒரு பிரிவை அமைக்கக் கருதப்படுகிறது. ஓய்வூதியம் பெறுவோர் குறை தீர்க்கும் பிரிவும் தலைமைச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலும் இதுபோன்று அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**27.** இம்முயற்சிகள் அனைத்தும் அமைதியான சூழ்நிலையில்தான் விரும்பிய பலனை அளிக்கும்

இவ்வகையில் சட்டம்-ஒழுங்கினை அரசு திறம்பட நிலைநாட்டி வருகிறது. ஆயினும், இந்த அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தும் முயற்சியில் அடிப்படைப் பிரச்சினை ஒன்று எழக் கூடும். அண்மையில் சில ஆண்டுகளாக இயற்கைச் சீற்றங்களினால் இம் மாநில அரசு தொடர்ந்து அல்லலுற்று வந்துள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில், வரும் ஆண்டிலும் இம் மாநில அரசு கடும் வறட்சியை எதிர்நோக்கக் கூடும். எனினும், அதனை எதிர்கொள்ளவும் அரசு தயாராகவுள்ளது. நடப்பாண்டில் இம் மாநிலத்தின் வறட்சி நிலைமை மிகத் திறமையாகச் சமாளிக்கப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வறட்சி நிவாரண உதவியாக ரூ.310 கோடி வழங்கக் கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. 1986–87ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசு ரூ. 31.77 கோடி செலவு உச்சவரம்புக்கு ஏற்பளித்திருந்தபோதிலும், மாநில அரசு, குடிநீர் வழங்கல், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தல், ஏனைய வறட்சி நிவாரணத்திட்டங்களுக்கு ரூ. 105.40 கோடிக்கு மேல் செலவிட்டுள்ளது.

**28.** அடுத்த ஆண்டில் கடும் வறட்சி நிலை ஏற்படக் கூடும் என்பதை எதிர்பார்த்து, மாநில அரசு ரூ. 28 கோடி அளவில் உடனடி எதிர்பாராச் செலவுத் திட்டத்தை வகுத்துள்ளது. இந்நிலையைச் சமாளிக்க 8,625 துளைக் கிணறுகள் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சென்னை மாநகருக்கு நீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழலேரிகளில் நீர்மட்டம் குறைந்து வருவதைச் சமாளிக்க, அவசர கால நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டு வருகின்றன. இருக்கின்ற மேற்பரப்பு நீரைச் சேமித்து வைக்கவும், சென்னை நகருக்குப் புறத்தே நீர்வளம் உள்ள பகுதிகளில் மேலும் துளைக் கிணறுகளை அமைத்து அதிக அளவில் நிலத்தடிநீர் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்க, ரூ. 163 இலட்சம் செலவில் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில், சோழவரம், புழலேரிகளில் குறைந்த அளவில் தேங்கியிருக்கும் நீரை மேலேற்றுதல், 14 துளைக் கிணறுகளைப் புதுப்பித்தல், 16 புதிய துளைக் கிணறுகளை அமைத்து அவற்றில் விசையேற்றங்களை நிறுவுதல், 600க்கு மேலாக வடிமுனைக் குழாய்க் கிணறுகளையும், 226 இந்தியா மார்க் II கைப் பம்புகளையும் புதுப்பித்தல், புதிதாக 1,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைத்தல், 120 துளைக் கிணறுகளைத் தோண்டி அவற்றில் இந்தியா மார்க் II கைப்பம்புகளை நிறுவுதல் ஆகியவை அடங்கும்.





இவற்றுடன், ரூ. 15 கோடி செலவில் சென்னை மாநகருக்கு நாளொன்றுக்குக் கூடுதலாக 12 மில்லியன் காலன் நிலத்தடி நீர் பெறும் திட்டமும் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது.

**29**. வறட்சி நிலைமையை எதிர்நோக்குவதுடன் மட்டுமின்றி, அதனால் ஏனைய வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படாமலிருக்கவும் மாநில அரசு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். இவ்வகையில் மற்றொரு நடவடிக்கையாக, இவ்வரசு ரூ. 2,000 கோடி செலவு ஆகக்கூடிய பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி வழங்குமாறு மத்திய அரசிடம் ஏற்கெனவே கேட்டுள்ளது. சத்துணவு-சுகாதாரத் திட்டத்திற்கு உலக வங்கியின் உதவியும், பெருமளவில் வீடு கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசின் உதவியும் கேட்கப்பட்டுள்ளதோடு, மாநில அரசு ரூ. 800 கோடி செலவிலான பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தையும், ரூ. 400 கோடி செலவிலான பாசன ஏரிகளை நவீனப்படுத்தி முதலில் இருந்த நிலைக்குக் கொண்டு வரும் திட்டத்தையும், ரூ. 140 கோடி செலவிலான மாநகர நீர்வழிகளை மேம்படுத்துவதன் மூலம் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தும் திட்டத்தையும் வகுத்து வருகிறது. தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு மத்தியத் திட்டங்களுக்கு அதாவது, விரைவுப் போக்குவரத்துத் திட்டம், கரூர்-திண்டுக்கல்-தூத்துக்குடிக்கு அகல இருப்புப் பாதை அமைக்கும் திட்டம், நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் திட்டம், சேதுசமுத்திரத் திட்டம், கடலூர் துறைமுக மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென மத்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டங்கள், பணித்திட்டங்கள் பலவற்றிற்கு மத்திய அரசு இசைவளிக்கும் என்றும், இதனால், இம் மாநிலத்தில் மொத்த முதலீடு அதிகரித்து, பொருளாதார நிலை உயரும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.



30. முடிவாக, ஆனால் மிகவும் முக்கியமாக, ஸ்ரீலங்காவிலுள்ள இனப் பிரச்சினை குறித்து மாநில அரசு தொடர்ந்து கவலை கொண்டு வருகிறது. ஸ்ரீலங்காவில் பெருவாரியான படுகொலைகள் நிகழ்வதாகத் தெரிவித்திருப்பது மாநில அரசுக்கு பெரிதும் வேதனை அளிக்கிறது. இனப் பிரச்சினைக்கு சுமுகமான முறையில் இன்னும் தீர்வு காணப்படாததும். மாநில அரசுக்கு கவலை தருவதாக உள்ளது. இப்பிரச்சினைக்கு முடிவாகவும் இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலும் தீர்வு காண மத்திய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் மாநில அரசு உதவி வருகிறது. ஸ்ரீலங்காவிலிருந்து இங்கு வந்துள்ள 1.25 இலட்சம் அகதிகள் பாதுகாப்புடனும் கண்ணியத்துடனும் அவர்கள் நாட்டிற்கு திரும்புவர் என்று நம்புகிறோம்.

31. இவ்வளவு இன்னல்கள் இருந்த போதிலும் அரசு எடுத்த பெருமுயற்சிகளின் பலனாக தமிழகம் வளர்ச்சிப் பாதையில் வளமான எதிர்காலத்தை நோக்கி பீடுநடை போடும் என நான் உறுதியாக நம்புகிறேன். இதற்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென இத்தருணத்தில் உங்களனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்

## தொலைபேசி வசதியில் தமிழகம் முதலிடம்

இந்தியாவிலேயே சுமார் 350 ஊர்கள்தான் சந்தாதாரர் நேரடித் தொலைத்தொடர்பு (STD) வசதி பெற்றுள்ளன. இதில் 100 ஊர்கள் தமிழகத்தில் உள்ளன.

தமிழகத்தில் உள்ள 400 கிராமங்கள் தொலைபேசித் தொடர்பு வசதியை விரைவில் பெற உள்ளன. இதன் காரணமாக இந்தியாவிலேயே தொலைபேசித் தொடர்பு அதிகம் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

## ஆதிதிராவிடர்க்கு வேலைவாய்ப்புப் பயிற்சி

ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்பதில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. தமிழக அரசு 1986 ஆம் ஆண்டில் 1500 பேருக்கு இத்தகைய பயிற்சியை வழங்கியது. இதுபோன்ற பேராதரவு வடக்கு, கிழக்கு மாநிலங்களில் இல்லாதது வருந்தத்தக்கது என, மாண்புமிகு மத்தியத் துணை அமைச்சர் திரு பிரேன் சிங் எங்டி 22.2.87 அன்று சென்னையில் தெரிவித்தார்.

## குறைந்த நீரில் அதிக விளைச்சல்

குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு அதிக அளவு நெல் விளைச்சல் செய்து தமிழக விவசாயிகள் சாதனை புரிந்துள்ளனர்.

1985-86இல் தமிழ்நாட்டின் சராசரி விளைச்சல் எக்டேருக்கு 3 ஆயிரத்து 700 கிலோவாக இருந்தது. இது 1986-87இல் 4 ஆயிரத்து 700 கிலோவாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் நிலவும் கடும் தண்ணீர்ப் பஞ்சத்திற்கிடையே விவசாயிகள் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

காவிரி பாசனப் பகுதியில் மட்டும் சாதாரணமாக 360 டி.எம்.சி தண்ணீர் வேண்டும். ஆனால் இந்த ஆண்டு 160 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே பாசனத்திற்குக் கிடைத்தது.

இதனால் பயிர்சாகுபடி பரப்புக் குறைந்தது. எனினும் வேளாண்மைத் துறையின் அறிவுரைகளை விவசாயிகள் ஏற்றுச் செயல்பட்டு விவசாய உற்பத்தியில் சாதனை புரிந்துள்ளனர்.



# சிதம்பரம் கோயில் திருக்குட முழுக்கு

சரித்திரப் பிரசித்தி பெற்ற சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில் எனப்படும் அருள்மிகு நடராசர் கோயில் திருக்குட முழுக்கு 11.2.87 புதன்கிழமையன்று சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

அன்று காலை சரியாக 9.39 மணிக்கு முறைப்படியான திருக்குடமுழுக்கு பூஜை துவங்கியது. அத்துடன் அருள்மிகு தில்லை நடராசருக்குச் சம்ரோட்சணமும் நடத்திவைக்கப்பட்டது.

இக்கோயிலில் இதற்கு முன்பாக 1955-ல், அதாவது 32 ஆண்டுகளுக்கு முன் திருக்குட முழுக்கு நடைபெற்றது. ஃப்ரவரி முதல் தேதியிலிருந்தே வேதம், திருமுறை பாராயணங்கள், யாகசாலை ஏற்பாடுகள் நடைபெற்றன.

இந்த விழாவையொட்டி, தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை அமைத்திருந்த கண்காட்சி அரங்கை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் திறந்து வைத்தார்.

பூலோகக்கைலாயம் எனப்படும் சிதம்பரம் பஞ்சபூத தலங்களில் ஒன்றாகும். இங்குள்ள சிவகங்கை தீர்த்தம் தீர்த்தங்களில் சிறப்பானதாகும். வைணவ சம்பிரதாயத்தில் 'கோயில்' என்ற சொல் திருவரங்கத்தைக் குறிக்கும். அதேபோல சைவ சம்பிரதாயத்தில் 'கோயில்' என்ற சொல் சிதம்பரத்தைக் குறிக்கும்.

பழந்தமிழ்ப் புலவரான சேக்கிழார், தம்து பெரியபுராணத்தில் சிதம்பரம் பற்றி விரிவாகப் பாடியிருக்கிறார். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், உமாபதி சிவம், வடலூர் இராமலிங்க சுவாமிகள் ஆகியோராலும் பாடல் பெற்ற தலமாகும் இது.

விண்தொட நிற்கும் சிதம்பரம் கோயில் கோபுரங்களில் கிழக்குக் கோபுரம் மதுரை சுந்தரபாண்டியனால் (கி.பி.1250) கட்டப்பட்டது. வடக்குக் கோபுரம் கிருஷ்ணதேவராயரால் (கி.பி. 1509-1530) கட்டப்பட்டது; தெற்குக் கோபுரமும், மேற்குக் கோபுரமும் கோப்பெருஞ்சிங்க தேவனால் (கி.பி.1243) கட்டப்பட்டது.

கிழக்கு - மேற்குக் கோபுரங்களில் 108 நாட்டிய வகைகளைக் காட்டும் சிற்பங்கள் உள்ளன. கி.பி.1118-1150இல் கட்டப்பட்ட இங்குள்ள ஆயிரக்கால் மண்டபத்தில்தான் சேக்கிழாரின் பெரிய புராணம் அரங்கேற்றப் பெற்றது. பிரகாரங்கள் அனைத்தும் சோழ அரசர்களால் கட்டப்பட்டவை. நம்பியாண்டார் நம்பிகள், ராஜராஜசோழன் காலத்தில் தான் (கி.பி. 985-1014) திருமுறைகளைக் கண்டெடுத்துத் தொகுத்தளித்தார்.

இங்குள்ள அருள்மிகு நடராசப் பெருமானுக்குரிய ஐந்து சபைகளில் கனக சபையும் ஒன்று. திருமூலநாதரும், உமை அம்மையும் காட்சியளிக்கும் இச்சபை பொன் ஓடு வேயப்பட்டதாகும். இதில் உள்ள மொத்தப் பொன் ஓடுகள் 21,600. அதில் அடிக்கப்பட்டுள்ள ஆணிகள் 72,000.



சிதம்பரத்தில் சிவகாம சுந்தரியுடன் , நடராஜர்.

இச்சபைக்குப் பொற்கூரை வேய்ந்தவன் ,ஆதித்த சோழனாவான்.

சிதம்பரம் கோயில் திருக்குடமுழுக்கையொட்டி, 100 சிறப்புப் பேருந்துகளை விட்டது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், சென்னை, கோவை, ஈரோடு, பழனி, நெல்லை, செங்கோட்டை, தூத்துக்குடி, மார்த்தாண்டம், நாகர்கோயில், திருச்செந்தூர், வேலூர், கன்னியாகுமரி, திண்டுக்கல், மதுரை, ஆகிய இடங்களிலிருந்து அப் பேருந்துகள் சிதம்பரத்திற்கு விடப்பட்டன.

பிப்ரவரி 6-ஆம் நாளன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள், சிதம்பரம் கீழ வீதியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட சுற்றுலா செய்தி மையத்தைத் திறந்து வைத்தார். அந்த அரங்கில் தமிழ்நாடு முழுவதுமுள்ள சுற்றுலா மையங்களின் விளக்கப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. வீடியோ காட்சிகள் காட்டப்பட்டன. நாடிவந்து கேட்போர்க்கு நல்ல பல விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

7, 8, 9 ஆகிய மூன்று நாட்களும் சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்திற்கு அருகே அமைந்துள்ள அரங்கில் தெருக்கூத்து, பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கரக ஆட்டம், காவடியாட்டம் போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அன்று முதல் சமயச் சொற்பொழிவுகள், நாதசுவர இசை, இன்னிசை நிகழ்ச்சிகள் நாள்தோறும் தொடர்ந்து நடைபெற்றன.

திருப்பணிக் குழுச் செயலாளர் திரு ஜீ.வாகீசம்பிள்ளை, திரு எம்.ஏ. சிதம்பரம் அவர்கள், சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு கே.ஆர்.கணபதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாகடா் ஆறு அழகப்பன், சிதம்பரம் நகரயன்றத்தலைவர் திரு துரை கலயமூரத்தி, கலைமாமணி க.வெள்ளை வாரணனார், இநது சமய அறநிலையத்துறை ஆணையர் திரு கே.சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப. சிதம்பரம் நாடாளுமனற உறுப்பினர் டாக்டர் பி.வள்ளல் பெருமான், உள்துறைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப., தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ்.அகத்தியலிங்கம், தெ.ஆ. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டி.தங்கவேலு, இ.ஆ.ப., பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரபபன், தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் டாக்டர் ஆர். நாகசாமி, இலங்கைத் தூதுவரகச் செயலாளர் திரு கே.ஆளுடைய பிள்ளை, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் செயலர் திரு பி.சுகவனேஸ்வரர் இ.ஆ.ப. முதலான பலரும் விழா நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார்கள்.

11-ஆம் தேதி, இக்கோயிலில் பொன் ஓடுகள் வேயப்பட்ட சித்சபை மீதுள்ள 9 கலசங்களுக்கு பூஜை முடிந்தவுடன் கோவில் கொடியைக் காட்டினார்கள். உடனடியாக அதைத்தொடர்ந்து அதிர்வேட்டுகள் முழங்க திருக்குடமுழுக்கு தொடங்கியது. சித்சபைக் கலசங்களுக்குத் திருக்குடமுழுக்கு நடந்த அதே நேரத்தில் கோயிலின் 4 கோபுரங்களுக்கும் ஆயிரங்கால் மண்டபத்திற்கும் திருக்குடமுழுக்கு நடந்தது. கலசங்களுக்குப் பட்டு வஸ்திர அலங்காரத்திற்குப்பின் தீபாராதனை நடைபெற்றது.

இதுவரை காணாத அளவுக்கு சிதம்பரம் கோயில் திருக்குடமுழுக்கு விழாவில் பக்தர்கள் திரண்டிருந்தார்கள்.

## தில்லைக் கோயிலில்... தமிழ் ஒலிக்கிறது!

'தில்லை அம்பலம்' எனப்படுவதும், இந்தியாவில் உள்ள குறிப்பிடத்தக்க சிவன் கோயிலுமான சிதம்பரம் கோயில், தீட்சதர்களின் நிர்வாகத்தின்கீழ் உள்ளதாகும். எனவே, சமஸ்கிருதத்தில்தான் அங்கு சுமார் 1300ஆண்டுக்காலமாக மந்திரம் ஓதப்பட்டு வந்ததே தவிர, தமிழில் தெய்வப் பாடல்கள் பாடத் தடையிருந்தது. இந்தத் திருக்குடமுழுக்கை முன்னிட்டாவது அங்கே தமிழ்ப் பழம் பாடல்கள் பாடப்பட வேண்டும் எனத் தமிழக அரசு மேற்கொண்ட முயற்சிக்குத் தீட்சதர்கள் இணங்கினர்; அதன்படி, 6.2.87 முதல் நாள்தோறும் சிதம்பரம் கோயிலில் தேனினும் இனிய தேவாரம் திருவாசகப் பாட்டால் பரமனைத் தொழும் பணி தொடர்ந்தது. ஓதுவார்களோடு, தீட்சதர்களும் இந்த உயரிய பணியில் ஒன்றுபட்டார்கள்.



# மனிதாபிமான பணிக்கு மகத்தான பாராட்டு

ஒன்பது நாடுகளின் அதிபர்கள் கலந்து கொண்ட ஆப்பிரிக்க நல நிதி மாநாட்டின் இரண்டு நாள் கூட்டம் புதுடில்லியில் 25.1.'87 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டின் இறுதியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் பேசுகையில், ''இந்தியாவில் திரட்டப்படும் இந்தப் புனித நிதித் திட்டத்திற்கு முதன் முதலாகத் தமிழ்நாட்டைச் சார்ந்த வேலூர் பள்ளி மாணவன் ஹேமந்த்ஷமீன், நகரிலுள்ள தனதுஉறவினர்களிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் ரூ. 150 வசூல் செய்து அனுப்பியுள்ளான். அந்தத் தொகையில் ஆரம்பித்து, இந்திய அரசு சார்பில் ரூ. 50 கோடியைச் சேர்ப்பதில் நான் பெருமையடைகிறேன்'' என்று அறிவித்தபோது ஜாம்பியா, ஜிம்பாவ்வே, அல்ஜீரியா, அர்ஜென்டினா, காங்கோ, நைஜீரியா, பெரு, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பலத்த கரவொலி எழுப்பினர்.

12 வயது நிரம்பிய ஹேமந்த்ஷமீன், வேலூர் ஐடாஸ்கடர் பள்ளியில் ஏழாவது வகுப்பு படிக்கும் மாணவனாவான். அவனைச் சந்தித்து, ''உனக்கு இந்த யோசனை எப்படி ஏற்பட்டது? என்று கேட்டபோது, ''நான் தவறாமல் பத்திரிகைகள் படிப்பேன். உலக விஷயங்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் உண்டு. பஞ்சத்தினால் வாடும் அந்த ஆப்பிரிக்க மக்களுக்கு நாமும் எப்படியாவது உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தேன். போன ஆகஸ்டிலிருந்து உறவினர் மற்றும் நண்பர்களிடம் பணம் வசூல் பண்ணினேன். அப்பா தினம் தரும்இரண்டுரூபாயில் பாதியை உண்டியலில் போட்டுச் சேர்த்துவந்தேன். 5 மாதம் ஆனபிறகு மொத்தமாக ரூ. 150 சேர்ந்தது. கடந்த டிசம்பர் மாதம் நடந்த ஒரு விழாவில் தமிழ்நாடு சமூகநல வாரியத் தலைவர் திருமதி தாரா செரியனிடம், ''தென் ஆப்ரிக்காவுக்கு எப்படி, யார் பெயருக்குப் பணத்தை அனுப்புவது என்று தெரியவில்லை. நமது பிரதமர் மூலம் தென் ஆப்பிரிக்க மக்களுக்கு இதுபோய்ச் சேர நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவரும் மகிழ்ச்சியுடன் அந்தத்தொகையைப் பெற்றுக்கொண்டு ஆவன செய்வதாகக் கூறினார்'' என்றான்.

ஒருநாள், மாண்புமிகு பிரதமர் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் இந்த மாணவனுக்கு வந்தது. அதில், ''தென் ஆப்பிரிக்க மக்களுக்கு உதவிட என் தலைமையில் ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு நிதி உதவி வழங்குமாறு வேண்டுகோள் விடுதித்துள்ளேன். அதற்குள் நீ அனுப்பிய பணம் கிடைத்துவிட்டது. இந்தியாவின் சார்பில் தென் ஆப்ரிக்க மக்களுக்கு நிதி வழங்கிய முதல் நபர் என்ற பெருமை உன்னைச்சாரும். உனது உன்னதச் செயல் மற்றவர்களுக்கு ஒரு தூண்டுதலாக அமையும் என நம்புகிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

வேலூர் ஹேமந்த்ஷமீனின் ஈகை உள்ளத்தால், தமிழகம் பெருமை பெற்றதாகவே நாம் உணருகிறோம்.

ஹேமந்த்ஷமீனின் சீரிய செயலைப் பாராட்டிப் பரிசு வழங்க எண்ணம் கொண்டார் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி எஸ்.மாலதி, இ.ஆ.ப. அவர்கள் .மாவட்ட ஆட்சியர் நிதியிலிருந்து ''நினைவுப் பரிசுக் கேடயம் வழங்கவும் ஏற்பாடு செய்தார்.

பிப்ரவரி திங்கள் 9ஆம் நாள், வேலூர் வருகைபுரிந்த தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் திரு ஏ.பத்மநாபன் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் ஹேமந்த்ஷமீனுக்கு நினைவுப்பரிசுக் கேடயம் வழங்கி, ''உனது செயலால் தமிழகம் பெருமையடைகிறது'' என மாணவனை வெகுவாகப் பாராட்டினார்.

**இரா. பா. கார்மேகம்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**வட ஆர்க்காடு மாவட்டம்**
**வேலூர்.**

# வறட்சி நிலையைப் போக்கிட...

பருவ மழை தவறியதால் தமிழ்நாட்டின் பல பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. மழை பொய்த்ததால் குடிநீர்ப் பற்றாக்குறை, உணவு உற்பத்திக் குறைவு, வேளாண்மைப் பணிகள் முடக்கம், அதனால் வேலையின்மை போன்ற பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

வறட்சிநிவாரணப்பணிகளைத் தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் செய்து வருகிறது. இதற்காக நிதி ஒதுக்கி அவசர அவசியப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய அரசின் நிதியுதவி பெறுவதற்கான பணிகளும் நடந்து வருகின்றன.

தமிழ்நாட்டில் வறட்சிநிலை பற்றி மத்திய அரசுக்கு விரைவில் விரிவான அறிக்கை அனுப்பி வைக்கப்படும். மாவட்ட வாரியாக வறட்சிநிலை பற்றி அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதற்கென நியமிக்கப்பட்ட ஆணையர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து நிலைமையை நேரில் அறிந்து வருகிறார்கள். அவர்கள் கொடுக்கும் அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலித்த பின் விவரமான அறிக்கை விரைவில் மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

மாநிலத்தில் வறட்சிநிவாரணப் பணிகளுக்கென்று உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ. 28 கோடி ஒதுக்கியுள்ளார். அதிலிருந்து ரூ. 5 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணப்பணிகளை உடனடியாக மேற்கொள்ளும்படியும் வேலையில்லா மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பல மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 200 குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு ரூ. 50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மேலும் 300 கிணறுகள் அமைக்க வேண்டும் என்று மாவட்ட அதிகாரிகள் கோரியுள்ளனர். இம்மாவட்டத்தில் 38 ஊராட்சி ஒன்றியங்களில் 11-ல் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள 4586 கைப்பம்புகளில் பெரும்பாலானவை சீராக்கப்பட்டுச் செயல்படுகின்றன.

வேலூர் நகருக்குத் தற்போது 30 ஆயிரம் காலன் குடிநீர் வழங்கப்படுகிறது. இதே அளவு அடுத்த 4 மாதங்களுக்கும் வழங்கப்படும்.

வறட்சி காரணமாக வேளாண்மைப்பணிகள் பாதிக்கப்படுவதால் வேலையிழக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவ ரூ. 30 இலட்சம் ஒதுக்குமாறு அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் ரூபாய் 26.94 கோடி மதிப்புக்கு விளைச்சல் பாதிப்படைந்துள்ளது. இந்த மாவட்டத்தில் மொத்தம் 85 ஆயிரம் எக்டேர் நன் செயில் 47 ஆயிரத்திற்கும் அதிகமான எக்டேர் பரப்பில் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. 16ஆயிரம் எக்டேருக்கும் அதிகமான புன் செய் நிலங்களிலும் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட வறட்சி நிவாரணத் திட்டங்களை நிறைவேற்ற ரூ. 8 கோடிக்கும் அதிகமாகச் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

செங்கை மாவட்டத்தில் 10 வட்டங்களில் வறட்சி நிலவுகிறது. ரூ. 25,000 செலவில் ஒவ்வொரு தாலுக்காவிலும் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 207 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்படும். ஊரக வேலைவாய்ப்புத் திட்டப்படி கசிவுநீர்க்குட்டை ஏரிகளைத் தூர் வார ரூ. 424 இலட்சம்





செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிதம்பரனார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியால் ரூ. 150 கோடி மதிப்பு பயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 465 கிராமங்களில் 396 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ரூ. 130 கோடி அனுமதிக்குமாறு மாநில அரசுக்கு திட்டங்களை மாவட்ட நிர்வாகம் அனுப்பியுள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் முழுவதும் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கியுள்ளது. நிவாரணப் பணிகளுக்காக அரசிடம் ரூ. 14கோடி கோரியுள்ளனர். இதில் 913 கைப்பம்புகள் 58 கிணறுகள், 257 உறைக் கிணறுகள், 307 கிணறுகளை ஆழப்படுத்தவும், சில கிராமங்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கவும் ரூ. 2.96 கோடி கோரப்பட்டுள்ளது. சிவகங்கை குடிநீர் மேம்பாட்டிற்கு ரூ. 14.5 இலட்சம் திட்ட யோசனை அரசிடம் அளிக்கப்பட்டுள்ளது.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

அனைத்து மக்களுக்கும் குடிநீர் வசதியளிப்பதற்கும், அதிகபட்ச மக்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

## சென்னை குடிநீர்த் தட்டுப் பாட்டை நீக்கிட....

சென்னை நகரில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய கவலை தரத்தக்க சூழ்நிலை உள்ள போதிலும், போர்க்கால நடவடிக்கை எடுத்து, சென்னை மாநகரில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரின் குடிநீர் ஆதாரப் பகுதிகளான புழலேரி, சோழவரம், பூண்டி ஆகிய மூன்றிலும் சென்ற ஆண்டு பிப்ரவரி மாதத் தொடக்கத்தில் 5357 மில்லியன் கன அடி நீர் நீர்மட்டம் இருந்தது. ஆனால் இன்றைய நீர் மட்டம் 926 மில்லியன் கனஅடி.

சூரிய வெப்பம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மேல் மட்ட நீர் குறைவதால் நிலத்தடி நீரை எடுத்துப் பயன்படுத்தும் நோக்கத்துடன் பூண்டியில் 29 ஆழ் துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் தொடங்கி விட்டன. இதன் மூலம் ஒட்டு மொத்தமாக 12 மில்லியன் காலன் நீர் கிடைக்கும்.

தொழில் நிறுவனங்களைப் பொறுத்த வரையில் தற்போது குடிநீர் வெட்டு இல்லை. இருப்பினும் சிக்கனமாகச் செலவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அந்நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மாநிலத்தில் வறட்சி, குடிநீர்த் தட்டுப்பாட்டைப்போக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதல்வர் நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் மாநிலத்தில் எந்த இடத்திலும் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது என்ற நிலை இருக்கக் கூடாது என்று கூறி அவ்வாறு ஏற்படாமல் நிலைமைகளைச் சமாளிக்க மாநிலம் பூராவிலும் (மாவட்டங்களிலும்) புதிதாக 8 ஆயிரத்து 625 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகளை அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். இதற்காக முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் அகற்று வாரியம் இப்பணிகளை மேற்கொள்ளும் 46 கோடியே 86 லட்சம் ரூபாய் செலவில் அடுத்த ஆண்டில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 4600குடிநீர்த் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

மேற்கண்ட தகவலை மாண்புமிகு தொழிலமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் 9-2-87 அன்று செய்தியாளர்களிடம் கூறினார்.



# தருமபுரிப் பெருமை

தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றாக தருமபுரி மாவட்டம் கருதப்படுகிறது. இம்மாவட்டம் 1965-ஆம் ஆண்டு சேலத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி மாவட்டமாக ஆக்கப்பட்டது. மாவட்டத்தின் பரப்பளவு சுமார் 9 ஆயிரத்து 600 சதுர கிலோ மீட்டராகும். தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு, அரூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, ஒசூர், டெங்கனிக்கோட்டை ஆகிய 8 வட்டங்களைக் கொண்டது. 1,164 குக் கிராமங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இயற்கை எழில் நிறைந்த காடுகளும் உயர்ந்த மலைகளும், காணும் இடமெங்கும் காட்சி தரும் குன்றுகளும் இம்மாவட்டத்தின் தனிச் சிறப்பாகும். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை சுமார் 20 இலட்சமாகும்.

பயிர்த் தொழில் சம்பந்தப்பட்ட வேலையில் ஈடுபட்டுள்ளோர், கூலி வேலை செய்வோர் அதிகமாக வாழ்கின்றனர். நகர்ப்புறத்தில் வாழகின்ற மக்கள் தொகை மிகக் குறைவேயாகும்.

தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள சுற்றுலா இடங்கள் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, கிருஷ்ணகிரி அணை, லிட்டில் இங்கிலாந்து எனப்படும் தளி, தீர்த்தமலை ஆகியவையாகும். தமிழக-கர்நாடக எல்லையில் தருமபுரியில் இருந்து 48 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது தான் ஒகேனக்கல் நீர் வீழ்ச்சி.

குடகு மலையில் உற்பத்தியாகும் காவேரி அன்னை, தமிழகத்தில் நுழையும் இடம் தான் இந்த ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி. பிற நீர்வீழ்ச்சிகளைக் காட்டிலும் தனிப் பெருமையும் உண்டு. சில நீர்வீழ்ச்சிகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் சீசன் துவங்கி முடியும். ஆனால் இங்கு ஆண்டு முழுவதும்நீர்வீழ்ச்சியில் தண்ணீர் கொட்டும். இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்தும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்து நீர்வீழ்ச்சியில் குளித்து ஆனந்தம் அடைகிறார்கள்.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இந்த நீர்வீழ்ச்சியை மேன்மைப்படுத்த மத்திய அரசு உதவியுடன் தமிழக அரசின் சுற்றுலாத்துறை, தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் ஆகியவை ரூ. 1.5 கோடி செலவில் ஒரு சிறப்பான திட்டம் தயாரித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் நீர்வீழ்ச்சியை சுற்றுலாப் பயணிகள் முழுமையாகக் கண்டுகளிக்க பார்வை கோபுரம், தொங்கு பாலம், சிறுவர்கள் பூங்கா, ஆகியவை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒகேனக்கல்லில் வனத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் முதலைப் பண்ணை, சிறுவர் பூங்கா, சுற்றுலாப் பயணிகளையும, சிறுவர்களையும் கவர்ந்து இழுக்கின்றன.

தர்மபுரி மாவட்டத்தில் முதன் முதலில் கட்டப்பட்டது கிருஷ்ணகிரி அணையாகும். இநத அணையில் அமைக்கப்பட்டுளள பூங்கா அனைவரது கவனத்தையும் ஈர்க்கிறது. இந்தப் பூங்காவில் சுற்றுலாப் பயணிகள் தங்கி ஒய்வு எடுக்க வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இங்கு மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் ஒன்று செயல்படுகிறது. கிருஷ்ணகிரி அணையில் மீன் வளர்க்கப்படுகிறது. இங்கிருந்து மீன்கள் வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

'லிட்டில் இங்கிலாந்து' என்று ஆங்கிலேயரால் அழைக்கப்பட்டது 'தளி' ஆகும். இவ்வாறு அழைக்கப்படுவதற்குக் காரணம், இப்பகுதி இங்கிலாந்தில் என்ன தட்பவெப்ப நிலை உள்ளதோ

அதே நிலை இருப்பதால் ஆங்கிலேயர்கள் இவ்வாறு அழைத்தார்கள். மேலும் இங்கு ஒரு பெரிய ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியில்தான் காட்டு யானைகள் வந்து தண்ணீர் குடிப்பது வழக்கம். மேலும் இந்த ஏரிக்கு வெளிநாட்டுப் பறவைகள் வந்து சில மாதங்கள் தங்கி இருக்கும்.

அரூரிலிருந்து 17கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது தீர்த்த மலை. மலை அடிவாரத்தில் இருந்து 3 கி.மீ. தூரம் நடந்து சென்றால் மலை உச்சியில் அமைந்துள்ளது ஈஸ்வரன் கோவில். இந்த மலையில் 5 புனித தீர்த்தங்கள் விழுகின்றன. இந்த தீர்த்தங்கள் எங்கிருந்து விழுகின்றன என்று யாருக்கும் தெரியாது. இந்த புனித தீர்த்தத்தில் குளித்தால் அவர்களது பிணிகள் போகும் என்று கூறப்படுகிறது. இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் இங்கு தினசரி வந்து 5 தீர்த்தத்தில் குளித்துவிட்டு ஈஸ்வரன் கோவிலில் வழிபட்டுச் செல்கிறார்கள். இந்தத் 'தீர்த்தமலை' மலைகளால் சூழப்பட்ட இயற்கை வனப்புமிக்க இடமாகும்.

மேலும் இம்மாவட்டத்தில் காணப்படும் சுற்றுலா இடங்கள் அனுமன் தீர்த்தம், தருமபுரி கோட்டைக் கோயில், தூவல் அருவி, காவேரி பட்டினத்தில் உள்ள தட்டக்கல் மலை, நெடுங்கல், யானைகள் மிகுந்து காணப்படும் அஞ்செட்டி யானைக் காடு ஓசூர் கால்நடைப் பண்ணை ஆகியவையாகும்.

அரூர் வட்டத்தில் ஜலகண்டேஸ்வரர் நதயன் தெனகரையில் தெனகரை, கோட்டை அமைந்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தல் முற்றிலும் அழியாத கோட்டைகளில் இது முதன்மையானதாகும். 40 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள இக்கோட்டையில் அனுமார்கோவல், பிள்ளையார் கோவல், பட்டாபி ராமர் (கல்யாணராமர்)கோவில், நஞ்சுண்டேஸ்வரர் (சிவன்) கோவில் ஆகியவை இருந்தாலும் கல்யாணராமர் கோவல்மட்டுமே கட்டிட, சிற்பக் கலை அம்சத்துடன் காணப்படுகிறது. கோவல் கருவறையில் ராமா, சீதை, லட்சுமணன், வசிஷ்டர், வால்மீகி, பரதன், சுக்கிரீவன், அனுமன் ஆகிய சிற்பங்கள் உள்ளன. வீணை ஏந்திய சுக்கிரீவன் சிலை சிறப்புடையதாகும். கோவில் மண்டபத் தூண்களில் வேலைப்பாடு அமைந்த சிற்பங்கள் சுற்றிலும் செதுக்கப்பட்டுள்ளன. திருமாலின் பல்வேறு அவதாரங்களை இக்கோவிலில் பார்க்கலாம். இங்குள்ள தூண்களில் நாதங்கள் வருவதை கேட்கலாம்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்தக் கோட்டையை சீலி நாய்க்கன் என்ற குறுநிலமன்னர் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு கட்டியதாகத் தெரிகிறது.

இன்று தருமபுரி என்றுஅழைக்கப்படும் தகடூர் நாட்டை ஆண்ட அதியமான் பெயருடன் தொடர்புடையதாக அதியமான் கோட்டை உள்ளது. முட்டை வடிவமுள்ள இக்கோட்டையைச் சுற்றிலும் மதிலும் அகழியும் அழிந்தநிலையில் இன்றும் காணலாம். இங்குள்ள சோமேஸ்வரர் கோவில், சென்றாய பெருமாள் கோவில், காளியம்மன் கோவில் பண்டையகால வரலாற்றை உணர்த்தி வருகின்றன.

விஜய நகர பேரரசர் காலத்தில் அதாவது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டுள்ள சென்றாய பெருமாள் கோவிலில் மண்டப விதானத்தில் மகாபாரதம், இராமாயணம், பாகவதம் ஆகியவற்றின் இதிகாச நிகழ்ச்சிகளைக் குறிக்கும் ஓவியங்கள் பல வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

அதியமான் கோட்டையில் பார்சுவநாதர் சிலையும் இருப்பதால் சமண மதமும் இங்குச் சிறப்புடன் இருந்துள்ளது. இச்சிலை கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஓசூரில் சந்திர சூடேசுவரர் ஆலயம் என்ற பிரசித்தி பெற்ற ஆலயம் ஒன்று உள்ளது. இவ்வாலயம் மலையின் மேல் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் மூலவர் இருக்கும் எதிர் திசை சுவரில் துவாரம் ஒன்று கிழக்கே பார்த்தவண்ணம் உள்ளது.காலையில் சூரிய உதயம் ஆகும்பொழுது துவாரத்தின் வழியாக சூரிய ஒளி சென்று மூலவரின் மேல் படும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றார் மகாகவி பாரதியார். இம்மாவட்டத்தில் வேர் ஊன்றி வரும் பட்டுத்தொழில் இவ்விரண்டையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

பட்டு தொழில் கிராம மக்களுக்கு அதிக வேலைவாய்ப்புத் தரும் முக்கிய தொழிலாகும். ஏறத்தாழ 21,600 ஏக்கர் பரப்பளவில் சுமார் 32,400 விவசாயிகளினால் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் சுமார் 1,08,000 நபர்கள் பகுதி நேர மற்றும் முழு நேர வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்.

பட்டுவிவசாயிகளுக்குத்தொழில் நுட்ப ஆலோசனை கூற ஓசூர், தேன்கனிக்கோட்டை, கோலட்டி, கிருஷ்ணகிரி, தருமபுரி, பென்னாகரம் ஆகிய இடங்களில் மையங்கள் இயங்கி வருகின்றன.

பைவோல்டைன் திட்டத்தை ஊக்குவிக்க, சிறப்புச் சலுகைகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. பட்டு விவசாயிகளுக்குத் தேவையான தரமான பட்டு முட்டைகள் வின்யோகம் செய்ய ஓசூர், கிருஷ்ணகிரி, பென்னாகரம் மற்றும் தேன்கனிக் கோட்டை ஆகிய இடங்களில் வித்தகங்கள் உள்ளன. தொழில்நுட்ப ஆலோசனை வழங்க சேவை மையங்கள் 32, கிராமிய இளம் புழு மையங்கள் 20, பட்டுஅபிவிருத்தி மையங்கள் 6 இம்மாவட்டத்தில் உள்ளன. உற்பத்தி செய்கின்ற பட்டுக் கூடுகளை விற்பனை செய்ய ஓசூர், தேன்கனிக் கோட்டை, கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் பென்னாகரம் ஆகிய



தென்கரைக் கோட்டையிலுள்ள கல்யாண ராமர் திருக்கோயில் தருமபுரி மாவட்டம்

இடங்களில் பட்டுக் கூடு அங்காடிகள் உள்ளன.

கோலட்டி என்ற கிராமத்தில் 850 ஏக்கர் பரப்பளவில் உள்ள பட்டுப்பண்ணை சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. ஓசூரில் பட்டுப் பயிற்சிப்பள்ளி அரசால் நடத்தப் பட்டு வருகிறது. எனவே பட்டுத் தொழிலின் பெரும் வளர்ச்சி கிராமத்தின் மறு மலர்ச்சி என்று இம்மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சொல்லலாம்.

சமுதாய நலக் கூடம் அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

சேலம் மாம்பழம் என்றுசொல் கிறோம் அல்லவா? அது தருமபுரி மாம்பழம்தான். இம்மாவட்டத் தில் குறிப்பாக கிருஷ்ணகிரி வட் டத்தில் மாமரச் சாகுபடி சிறந்து விளங்குகிறது. மாவட்டத்தில் மொத்தம் 26,460 ஏக்கர் பரப்பளவில் மாந்தோப்புகள் உள்ளன.

அதேபோல் சீத்தா பழம் இம் மாவட்டத்திற்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகும். வறட் சிக்கு இலக்காகும் கிருஷ்ணகிரி வட்டத்தில் பாறைகள் நிறைந்த குன்றுகளில் இயற்கையாகவே சீத்தாப் பழ மரம் சிறப்பாக வளர்கிறது. பஞ்சாயத்துக் காடு களில் சீதா மகசூல் எடுக்கும் உரிமை ஊராட்சி ஒன்றியங் களால் ஏலம் விடப்படுகிறது. அவ் வாறு விடப்படும் ஏலத்தை ஊர்ப் பொது மக்கள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டாக எடுத்து, அதில் கிடைக் கும் நிகர லாபத்தை ஊர்ப் பொதுக் காரியங்களுக்குப் பயன் படுத்துகின்றனர். உதாரணத் திற்கு ஐகுந்தம் புதூரில் பள்ளிக் கட்டிடம், ஜகதேவியில் கோவில், மசூதி ஆகியவை இந்த ஏலத்தால் கிடைத்த லாபத்தால் கட்டப் பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் தொப்பை யாறு அணைத்திட்டம், நாகவதி அணைத்திட்டம், கேசரி குழி அல்லி அணைத்திட்டம், சூளகிரி சின்னாறு அணைத் திட்டம், பாம்பாறு நீர்த் தேக்கத்திட்டம், கெலவரப்பள்ளி நீர்த் தேக்கத் திட்டம், தும்பல அள்ளி நீர்த் தேக்கத் திட்டம், ஈச்சம்பாடி அணைத் திட்டம், வாணியாறு அணைத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் சின்னாறு நீர்த் தேக்க திட்டம் ஆகியவற்றால் சுமார் 60ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுவது இம்மாவட்டத்தின் சிறப்பு அம்ச மாகும்.



தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்தில் இலங்கை அகதிகளுக்கு இலவச வீடுகள்

தருமபுரி மாவட்டம் ஓசூரில் தமழக அரசு தொழிற்பேட்டை ஒன்று நிறுவி உள்ளது. இங்கு சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் துவககப்பட் டுள்ளன. இதில் அசோக் லேலாண்டு, டி.வி.எஸ், பிரிமியர் மில், லட்சுமி ஆட்டோமாடிக் லூம்ஸ் ஆகிய பெரிய நிறுவனங் கள் உள்பட பல்வேறு தொழிற் சாலைகள் மூலம் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்று வரு கிறார்கள்.

அரசியல் மாமேதை மூதறிஞர் ராஜாஜி பிறந்த தொரப்பள்ளி யில் உள்ள அவர் வாழ்ந்த வீட்டை அரசு விலைக்கு வாங்கி நினைவகமாக ஆக்கியுள்ளது. இவ்வில்லத்தில் அவர் வாழ்க் கையைச் சித்திரிக்கும் புகைப் படக் கண்காட்சியும், வரைந்த எழுத்தோவியங்களும் பொது மக்கள் காணும் வகையில் அரசால் உருவாககப்பட்டுள்ளன.

பாப்பாரப்பட்டியில் மறைந்த விடுதலை வீரர் தியாகி சுப்பிர மணிய சிவாவின் சமாதியும் ஆசிர மும் உள்ளன. இவரது பெயரில்



இம்மாவட்டத்தில் உள்ள தரும புரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் என்ற தமிழக அரசின் நிறுவனம் 1980-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு மத்திய - மாநில அரசுகளின் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், கிராமப் புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டம் (டோக்ரா), சுய வேலைவாய்ப்புத் திட்டம், மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் போன்ற அரசின் திட்டங்களைச் செவ்வனே செய லாற்றி வருகிறது.

# கொடுமையின் எல்லை

**கோ. செல்வின் தங்கத்துரை,**
காவல்துறைத் துணைக்
கண்காணிப்பாளர்,
மதுரை.

திருப்பூர், கோவை ஊரக மாவட்டத்தில் ஒரு தொழில் மையம்!

பனியன் தொழிற்சாலைகள் இல்லாத தெருக்களே இல்லை எனும் அளவிற்கு இந்தியத் துணைக்கண்டத்து யேபனியன் தொழிற்சாலைகள் நிறைந்த இடம். நகரின் எப்பக்கம் நோக்கினும் சுறுசுறுப்போடு வேலை செய்யும் மக்கள் கூட்டம். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற பிழைப்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் இந்த சூழ்நிலையின் மத்தியில் 2-7-82 அதிகாலை திருப்பூர், தென்னம்பாளையம், இராமசாமி முதலியார் காம்பவுண்டில் மட்டும் மாறுபட்டுக் காட்சியளித்தது.

பேராசிரியை நாகம்மாள் வீட்டின் முன்பாக, திருப்பூர் மகளிர் கல்லூரி மாணவிகள்பலர், கல்லூரி முதல்வர், பேராசிரியைகள், மற்றும் சிலரும் சோகமே உருவாய் முகத்தில் கேள்விக் குறிகளைத் தாங்கி நின்றுகொண்டிருந்தனர். நேற்று வரை தங்களுடன் பல ஆண்டுகளாக உடன் பேராசிரியையாகப் பணியாற்றிய நாகம்மாள் இன்று அவர்களோடு இல்லை என்ற இதய பாரம்!

உள்ளத்தில் உறுதியும், எதிர்கால வாழ்க்கையில் அசையாத நம்பிக்கையும் கொண்டிருந்த அவர் தற்கொலை செய்து கொண்டார் என்பதை உள்ளத்தால் ஏற்றுக் கொள்ள முடியவில்லையே, இது மகளிர் கல்லூரி முதல்வர், உடன் பேராசிரியைகளின் அங்கலாய்ப்பு!

ஒழுக்கத்தின் உறைவிடமாய், எப்போதும் புன்னகையோடு மாணவிகளைக் கவர்ந்த அன்பான பேராசிரியை நாகம்மாள் தற்கொலை செய்து கொள்ள அவர்கள் உள்ளத்தின் ஆழத்தில் ஏதேனும் மறைந்திருந்ததா? அவர்கள் முகத்தில் சோர்வைக்





காண முடியாதே! 'அவர்கள் தற்கொலை செய்திருக்க மாட்டார்கள்'. இது மாணவிகளின் முகத்தின் பிரதிபலிப்பு. அப்படியானால் பேராசிரியை நாகம்மாளுக்கு என்ன நேர்ந்தது? 'நீயும் ஒரு பேராசிரியைதானே! உன் காலில் நிற்க உனக்கு மன வலிமை இல்லையா?' எனக் கேட்டபோது "அப்படியல்ல மேடம், ஒரு மனைவி கடைசி வரை தன் கணவனோடு வாழ்வது தான் ஒரு பெண்ணுக்குப்பெருமை கணவனை விட்டுப் பிரிந்து வாழ்வது ஒரு பெண்ணுக்கு இழுக்கு" என நாகம்மாள் அன்றொரு நாள் கூறும்பொழுது அவரது தளராத உறுதியை வியந்ததை நினைந்து மனம் கலங்கினார் கல்லூரி முதல்வர் செல்வி இராஜலட்சுமி.

முந்திய நாள் (1-7-82) நாகம்மாள் கல்லூரிக்கு வந்திருந்த போது மஞ்சள் நிறப்புடவையும், அதற்கு இணையான மஞ்சள் நிற ஜாக்கட்டும் அணிந்து குதூகலமாகக் காட்சியளித்த போது 'என் கணவர் புதிதாக, அவரே எடுத்து வந்த புடவை, இந்தப் புடவையோடு வெற்றிலை பாக்கும், பத்து ரூபாயும் மடித்து வைத்து நீ மங்களகரமாக இருக்க வேண்டும் என்று சொல்லி இதைக் கொடுத்தார். என் கணவர் இப்போதெல்லாம் ரொம்பவும் மாறிவிட்டார். என்னிடம் ரொம்பவும் அன்பாயிருக்கிறார்' என்று நாகம்மாள் பெருமிதத்தோடு கூறியதை உடன் பணியாற்றும் பேராசிரியை திருமதி பொன்னாத்தாள், திருமதி வசந்தாமணி ஆகியோரின் நினைவில் தோன்றி கண்ணீர் மல்க நின்று கொண்டிருந்தனர்.

'தன் கணவரோடு சேர்ந்து வாழ வேண்டுமென்று நாகம்மாள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் முழு நேர விரதமும் இருந்து நினைத்த நேரமெல்லாம் பத்திரகாளியம்மன் கோவிலுக்குப் போய் பிரார்த்தனை செய்து வந்தார்களே! அவர்கள் எண்ணம் நிறைவேறிய பின் ஏன் தற்கொலை செய்ய வேண்டும்?' பேராசிரியை திருமதி, வசந்தாமணிக்கு அந்தக் கேள்வி புதிராக நின்றது.

'என் கணவர் என்னோடு வாழ எனக்கு உதவுங்கள்' என்று தனது வெட்கத்தையும் விட்டுத் தனது கணவர் முனியப்பன் பேராசிரியராகப் பணியாற்றும் திருப்பூர், சிக்கனா ஆண்கள் கல்லூரி முதல்வரின் அறைக்குச் சென்று நீதி கேட்ட சம்பவத்தை நினைந்து கண் கலங்கினார், ஆண்கள் கல்லூரி முதல்வர் திரு நாச்சிமுத்து.



கணவர் விவாகரத்துக்கோரி வழக்குத் தொடர்ந்தபோதும், நீதிமன்றம் சென்று தானே நீதிபதியிடம் 'நான் வாழ்ந்தால் அவரோடு வாழ்வேன். விவாகரத்துக்கு நான் சம்மதியேன், எங்களை இணைத்து வையுங்கள், இல்லையேல் அவரது வழக்கை நிராகரித்து விடுங்கள்' என்று நீதிமன்றத்தில் முறையிட்டவரல்லவா நாகம்மாள், அவர் எண்ணம் நிறைவேறிய பின் தற்கொலையா? 'எங்களை இணைத்து வையுங்கள்' என்று ஊர் பெரியவர் செங்கோடக் கவுண்டரிடம் தானே சென்று முறையிட்டவரல்லவா நாகம்மாள். அவர் தற்கொலை செய்து கொண்டாரா? கேள்விகள் அடுக்கடுக்காய்த் தோன்றின.

'நாகம்மாளுக்கு என் குழந்தை மேல் ரொம்ப இஷ்டம், நேற்று இரவு 8 மணிக்குக் கூட என் குழந்தையோடு கொஞ்சி மகிழ்ந்தாளே. அவள் முகத்தில் எந்தக் கலக்கமும் இல்லையே' இது பக்கத்து வீட்டுத் தாயின் கூற்று. உட்பக்கமாகப் பூட்டப்பட்டிருக்கும் நாகம்மாளின் வீட்டின் முன் பாகந்தான் இந்தச்சோகக்காட்சி. 'ஏன் கதவை உடைத்து உள்ளே போய்ப் பார்க்க வேண்டியது தானே' வந்தவர்களில் சிலர் ஆத்திரப்பட்டனர். 'புருஷனுக்கே உடைத்து உள்ளே போகனுமுனு தோணலை, போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருக்கிறார், அவர்களே வரட்டும்' அதே காம்பவுண்டில் குடியிருக்கும் பெரியவர் இராமசாமி முதலியார் கூறினார்.

கதவைத் தட்டித் திறக்கலாம் என்று கதவண்டை நெருங்கிய போது, நாகம்மாளின் கணவர் முனியப்பன் வாசலின் குறுக்கே நின்றுகொண்டு திறக்கவிடாமல் தடுத்தாரே, அதற்கு ஏதாவது காரணம் இருக்குமோ என்று சந்தேகம் தோன்றியது, பேராசிரியை திருமதி வசந்தாமணிக்கு. ஜெயலட்சுமி நாகம்மாளின் பால்ய சிநேகிதி. நாகம்மாளின் பிரிவைத் தாங்க இயலாமல் கதறி அழுதார். சில தினங்களுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சி அவர் கண் முன்தோன்றியது. தனது மகனோடு நாகம்மாளைப் பார்க்கச் சென்றிருந்த போது அவர்களது வீட்டில்தனது மகனும், முனியப்பனின் தங்கையின் மகளும் தீப்பெட்டிகளை வைத்து ரயில் பெட்டிகள் செய்து விளையாடும்போது, ஒரு ரயிலுக்கு மாமா (முனியப்பன்) ரயில் என்றும், ஒரு ரயிலுக்கு அத்தை (நாகம்மாள்) ரயில் என்றும் பெயரிட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அத்தை ரயில் கீழே விழுந்துவிடவும் பிள்ளைகள் 'அத்தை ரயில் கவிழ்ந்துவிட்டது' எனச் சொல்லிச் சிரித்தனர். அப்போது முனியப்பன் 'அத்தை ரயில் கவிழ்கிற ரயில்தான், அது தண்டவாளத்தில் ஓடாது' என்று சொன்னார். அவர் இவ்வாறு சொன்னதற்கும், இந்தச் சம்பவத்திற்கும் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகம் அவர் உள்ளத்தில் எழுந்தது.

இராமசாமி முதலியார் காம்பவுண்டில் விடியற்காலை பால்காரன் சைக்கிள் மணி அடித்ததும் கதவைத் திறந்து முதலில் வந்து பால் வாங்குவது நாகம்மாளாகத்தான் இருக்கும். காம்பவுண்டில் குடி இருக்கும் மற்றவர்கள் பால் வாங்கியாயிற்று, ஆனால் அன்று மட்டும் பால்காரன் எத்தனை மணியடித்தும் நாகம்மாள் மட்டும் பால் வாங்க எழுந்து வராதது எல்லோருக்கும் வியப்பாயிருந்தது. கணவர் முனியப்பன் அன்று விடியற்காலை வீட்டிற்கு வெளியே திண்ணையில் படுத்திருந்தார். அவர் நாகம்மாளைக் கூப்பிட்டுக், கதவைத் திறக்காததால் மற்றவர்களுக்குப் பதட்டம் ஏற்பட்டது. கணவர் முனியப்பன் இராமசாமி முதலியார் பேரன் ரங்கநாதனைச் சமையலறைப் பக்கம் கூரை ஓட்டைப் பிரித்துப் பார்க்க சொன்னார். அவன் கூரையில் ஏறி ஓட்டைப் பிரித்துப் பார்த்த போது, நாகம்மாள் கூரைச் சட்டத்தில் கயிற்றில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டுகூச்சல் போட்டான். கூட்டம் கூடியது.

கணவன் முனியப்பன் வீட்டினுள் செல்ல முயற்சிக்காமலேயே போலீஸ் ஸ்டேஷன் புறப்பட்டார். கணவனும், மனைவியும் மட்டும் குடியிருக்கும் வீட்டில் கணவன் ஏன் வெளியே படுத்திருக்கிறார்? பார்க்க வந்தவரில் ஒருவருக்கு ஏற்பட்ட நியாயமான சந்தேகம். 'நாகம்மாள், வீட்

டிற்கு விலக்கம், அதனால் வெளியே படுத்திருக்கிறேன்' என்று முனியப்பனே சொன்ன தாக அதே காம்பவுண்டில் குடியிருக்கும் கந்தசாமி கூறினார். கந்தசாமியும் அவர் மனைவி ரேணுகா தேவியும் தங்களது உறவினரின் வீட்டுத் திருமணத்திற்குப் போய்விட்டு முந்திய நாள் இரவு 11 மணி அளவில் வீட்டிற்குத் திரும்பியபோது, பேராசிரியர் முனியப்பன் வெளியே படுத்திருக்கவில்லை என்பது அவருக்குத் தெளிவான விஷயம். ஆனால் இரவு சுமார் 2 மணியளவில் இரண்டாவது காட்சி சினிமா பார்த்து விட்டு அதே காம்பவுண்டில் குடியிருக்கும் திருப்பதியும், சோமசுந்தரமும் திரும்பியபோது பேராசிரியர் முனியப்பன் வெளியே படுத்திருந்ததைக் கண்டனர். அப்படியானால் இரவு 11 மணிக்குமேல் 2 மணிக்குள் வெளியே வந்து படுத்தாரா?

பேராசிரியை திருமதி வசந்தாமணி, நாகம்மாள் கணவரைப் பிரிந்து வாழ்ந்த காலத்தில் அதே வீட்டில் ஒன்றாய் வாழ்ந்தவர்கள். இணைபிரியா தோழிகள். நாகம்மாள் முனியப்பன் சொல்லியது போல் முந்திய நாள் வீட்டிற்கு விலக்கமில்லை. வீட்டிற்கு விலக்கமான நாட்களில் நாகம்மாள் புதுப்புடவை உடுத்தும் பழக்கமில்லை என்பதை உள்ளத்தில் உணர்ந்தார், பேராசிரியை திருமதி வசந்தாமணி - நாகம்மாளின் கணவர் முனியப்பன் எதையோ மூடிமறைக்க முயற்சிக்கிறாரா? ஒன்றுமே புரியவில்லை. ஆனால் எதையுமே வெளிப்படையாகச் செல்ல முடியாத அச்ச உணர்வு.

'என் மனைவிக்கு மாதவிடாய் ஏற்படும் காலங்களில் தாங்க முடியாத வயிற்றுவலியால் அதிக வேதனைப்படுவதுண்டு. அதன் காரணமாக, அவள் நேற்று இரவு வீட்டின் சமையலறையில் கயிற்றில் தொங்கி தற்கொலைசெய்து கொண்டாள்' இது கணவர் புகாரின் சுருக்கம்.

வழக்குப் பதிவு செய்து காலை 10 மணியளவில் திருப்பூர் தெற்குக் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் சம்பவ இடத்திற்கு வந்து சேர்ந்தார். உட்பக்கமாகப் பூட்டப்பட்டிருந்த கதவைக் காலால் உதைத்துத் திறந்தார். சமையலறையில் கயிற்றில் நாகம்மாளின் பிரேதம் தொங்கிக் கொண்டிருந்தது. சப்-இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து கல்லூரி முதல்வர், பேராசிரியைகள், சில மாணவிகள் சென்று பார்த்துவிட்டு, தொங்கிய அலங்கோல நிலையைக் கண்டு பயந்து வெளியேவந்துள்ளனர். அவர்களுக்குச் சந்தேகம் வலுப்பெற்றது.

தலை முடித்துக் கட்டப்படாமல் அவிழ்ந்து தொங்குகிறது. அணிந்திருந்த ஜாக்கெட்டும், பிராவும், திறந்திருக்கின்றன. புடவை முறையாகக் கட்டப்படாமல் உடம்பைச் சுற்றிச் செருகி வைத்தது போல் உள்ளது. ஆடைகள் ஒழுங்காக அணிவதில் அக்கறையோடிருக்கும் நாகம்மாளா இப்படித் தொங்குகிறார்? தற்கொலை செய்து கொள்ளும் எந்தப் பெண்ணும், தன்னுடைய உடைகளைச் சீராகத்தான் வைத்திருப்பாள். இந்தக் காட்சியை நம்பவே முடியவில்லையே, சம்பவ இடத்தின் அருகில் ஒரு பெட்டியின் மேல் 'சாவுக்கு நானும், வயிற்றுவலியும் காரணம் - நாகம்மாள்' என்று எழுதப்பட்ட துண்டுத் தாள் இருந்ததை சப் - இன்ஸ்பெக்டர் கண்டெடுத்தார். அதை வைத்து தற்கொலைதான் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் வேரூன்றுகிறது.

நாகம்மாளின் முகத்தில் தீச்சுட்ட காயங்கள் போன்று முகத்தில் இரண்டு சிறு காயங்கள் காணப்பட்டன. சப்-இன்ஸ்பெக்டருக்குச் சந்தேகம் எழவில்லை. தகவல் அறிந்து ஈரோட்டிலிருந்து நாகம்மாளின் பெற்றோர், தம்பி பூசப்பன் ஆகியோர் வந்து சேர்ந்தனர். தகப்பனார் சாமிக்கவுண்டர், ஓய்வு பெற்ற இரயில்வே பாதுகாப்புப் படைக் காவலர். தன் மகளைப் படிக்க வைத்து, அவரைக் கல்லூரியில் பேராசிரியையாகப் பார்த்து மகிழ்ந்தவர். அவருக்கு இணையான வரன்தேடி, பேராசிரியர் முனியப்பனுக்குத் திருமணம் செய்து கொடுத்து மகிழ்ச்சியில் திளைத்தவர். இந்நிலையில் தன் மகளைப் பார்த்து நிலை தடுமாறினார்.



தம்பி பூசப்பன் ஈரோடு உயர்நிலைப்பள்ளியில், பி.ஏ., பி.எட்; ஆசிரியர். அவர் சம்பவ இடத்தையும், பிரேதத்தையும் பார்த்துவிட்டு என் அக்காள் தற்கொலை செய்து கொள்ளவில்லை. அவரது கணவன் முனியப்பன் அவளைக் கொலைதான் செய்திருக்கிறார். என்று சப் - இன்ஸ்பெக்டரிடம் முறையிட்டார். சப் - இன்ஸ்பெக்டர் அவரது முறையீட்டை ஏற்றுக்கொள்வதாக இல்லை. தற்கொலை என்றால் தீச்சுட்ட காயங்கள் முகத்தில் எப்படி ஏற்பட்டது? கழுத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கயிற்றுக் காயங்கள் எப்படி ஏற்பட்டது? பிரேதத்திற்கு அருகிலுள்ள பெட்டியின் மேல் ஏறி நின்றால் கூரைச் சட்டம் கயிற்றைக் கட்ட எட்டாத உயரத்தில் உள்ளதே என்றெல்லாம் அவருக்குத் தோன்றிய காரணங்களைச் சொல்லி வாதாடிப் பார்த்தார். எனினும் அவரது வாதங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

சப் - இன்ஸ்பெக்டர் பிரேதத்தைப்பரிசோதனைக்குத்திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் விஜயலட்சுமி, 'நாகம்மாள் கயிற்றில் தொங்கி தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்' எனச் சான்றுரைத்தார். இந்தச் சூழ்நிலையில் கல்லூரி முதல்வர், பேராசிரியைகள், அக்கம்பக்கத்திலுள்ளோர் யாவரும் தங்களது உள்ளத்திலுள்ள உணர்வுகளை வெளியே சொல்ல அஞ்சியவர்களாய் வாய் மூடியானார்கள். ஆனால் தம்பி பூசப்பன் மட்டும் நீதி கேட்டு அன்றே உயர் காவல் துறை அதிகாரிகளுக்குத் தன் அக்காள் கொலை செய்யப்பட்டிருக்கிறார். சப் - இன்ஸ்பெக்டர் இதை மூடி மறைக்க முயற்சிக்கிறார் எனத் தந்திகள் அனுப்பினார். நாகம்மாளுக்கு ஏற்பட்ட கொடுமை, சமுதாயத்திற்கு இழைத்த கொடுமை எனப் பெண்ணுரிமைச் சங்கங்கள் நீதி கேட்டன. பத்திரிகைகள் இச்சம்பவம் குறித்து செய்திகள் வெளியிட்டன.

வழக்கு கோவை குற்றப்பிரிவு, புலனாய்வுத் துறை தீவிர விசாரணைக்கு மாற்றப்பட்டது. இத்துறை விசாரணை மேற்கொண்டது. பேராசிரியை நாகம்மாளின் மரணம் தற்கொலையா? கொலையா? தற்கொலையானால் ஏன்? கொலையானால், ஏன், யாரால், எப்படி? என்ற கேள்விக் கணைகளுடன் விசாரணை துவங்கியது.

நாகம்மாளின் உடன் பிறந்தோர் மூன்று சகோதரர்கள். குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்பதற்கிணங்க மூத்தஅண்ணன் கருப்பணசாமி சேலம் அரசினர் கலைக்கல்லூரியில் இரசாயனப் பேராசிரியர். அடுத்த அண்ணன் பொங்கினன் பெங்களூர் பாரத் எலக்ட்ரானிக் லிமிடெட்டில் பொறியாளர். தம்பி பூசப்பன் ஈரோடு உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர். மகிழ்ச்சியான குடும்பம். தனது சகோதரிக்கு அவளது படிப்புக்கு இணையான கணவன் அமைய வேண்டுமென அப்போது உடுமலைப்பேட்டைக்கல்லூரியில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றிய முனியப்பனுக்குத் திருமணம் செய்து கொடுக்க ஏற்பாடுகள் ஆயின.

நாகம்மாள் தனக்கு வரப் போகிற கணவனும், தன்னைப் போலவே கல்லூரியில் பேராசிரியர் என்ற செய்தியறிந்து மகிழ்ந்தாள். ஆனால் பாழும் வரதட்சிணைக் கொடுமையால் திருமணப் பேச்சு தடைப்பட்டது. முனியப்பனின் தாயார் பாவாயம்மாள் நாற்பது பவுன் நகையும், ரூபாய் 20,000 ரொக்கமும் கொடுத்தாலன்றித் திருமணம் நடக்காது என்றார். தனதுமகள் கல்லூரியில் பேராசிரியையாகப் பணியாற்றியும் இந்த நிலையா என மனம் நொந்தும், தனது மகளின் நல்வாழ்வை எண்ணி முப்பது பவுன் நகையும் ரூபாய் 10,000 யும் கொடுப்பதாகக் கூறினார். பேச்சு நின்று போயிற்று.

பின், சுமார் நான்கு மாதங்கள் கழித்து மாப்பிள்ளை வீட்டார் முப்பத்திரண்டு பவுன் நகைகளும், ரூபாய் 12,000 ரொக்கத்திற்கும் தூது விட்டனர். நாகம்மாள் வீட்டார் சம்மதித்தனர். 12-3-76-ல் ஈரோட்டில் கணிதப் பேராசிரியர் முனியப்பன், இரசாயனப் பேராசிரியை நாகம்மாள் இவர்களின் திருமணம் வெகு சிறப்பாய் நடந்தது. தன் கணவரோடு பள்ளிப்பாளையத்தில் குடி புகுந்தார். திருமணமாகி 6 மாதங்கள் ஆவதற்குள் வீட்டில் புயல் வீசத் துவங்கியது. நாகம்மாள் பெற்றோர் வீட்டிலிருந்து, தனிக்குடித்தனம் செல்வதற்கான சாமான்களான கட்டில், பீரோ, இவைகள் வாங்கித் தர வேண்டுமென்று முனியப்பனின் தாயார் பாவாயம்மாள் துவக்கினார். முனியப்பனும் தனது தாயாரின் வழியிலேயே சென்றார்.

நாகம்மாள் தனிமைப்படுத்தப்பட்டது போன்ற நிலை. நாகம்மாள் தனது பெற்றோர் வீட்டிற்கு, தனிக்குடித்தனம் செல்வதற்கான எல்லாச் சாமான்களும் வாங்கி வர அனுப்பி வைக்கப்பட்டார். தந்தை சாமிக் கவுண்டர், 'திருமணத்தின்போது ஏற்பட்ட கடனே இன்னும் தீரவில்லையே, நீ தனிக்குடித்தனம் போகும்போது வாங்கித் தருகிறேன் இப்போது நீங்கள் ஒரே குடும்பமாகத்தானே இருக்கிறீர்கள்' என்று அனுப்பி வைத்தார். ஆனால் ஒரு வாரத்திற்குள் தாலி தவிர மற்ற நகைகள் யாவையும் கழற்றி வாங்கி வைத்துக்கொண்டு நாகம்மாள் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டாள்.

தனிக்குடித்தனச் சாமான்களுடன் திரும்பிவா! இல்லையேல் திரும்ப வீட்டிற்கு வர வேண்டாம் என கேவலமான முறையில் அனுப்பி விட்டனர். நாகம்மாளின் தந்தை பல உறவினர்களிடமும் பெரியவர்களிடமும் முறையிட்டார். முனியப்பன், தன் மனைவி நாகம்மாள் வேலையை ராஜினாமா செய்துவிட்டுத் தன் வீட்டிலிருக்கவேண்டும் என நிபந்தனை விதித்தார். அல்லது விவாகரத்துக்குச் சம்மதம் எழுதிக் கொடுக்கக் கேட்டார். இரண்டுக்குமே நாகம்



மாள் சம்மதிக்கவில்லை. ஆனாலும் பெரியவர்கள் பேசி நாகம்மாளை முனியப்பன் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். ஆனால் மீண்டும் சில தினங்களில் நாகம்மாள் திரும்ப அனுப்பப்பட்டாள்.

நாகம்மாள் திருப்பூர்பெண்கள் கல்லூரி ஹாஸ்டலில் சில காலமும், பேராசிரியை திருமதி வசந்தாமணியுடனும் தங்கி இருந்தார். இதற்கிடையில் முனியப்பன் உடுமலைப்பேட்டை கல்லூரியிலிருந்து திருப்பூர் கல்லூரிக்கு மாற்றலாகி வந்தார். நாகம்மாளுக்கு மீண்டும் தன் கணவனுடன் சேர்ந்து வாழ நல்ல வாய்ப்பு எனக் கருதி மீண்டும் பலரை அணுகி இணைந்து வாழ முயற்சித்தார். மாறாக, விவாகரத்துக்கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது மட்டுமன்றி, நகரில் தன்னைக்காணும் இடத்தில் திட்டுவதும், ஒரு முறை முனியப்பன் நாகம்மாளை அடித்து விட்டதுமான சம்பவங்கள் தொடர்ந்தன. ஆனால் அத்தனைச் சம்பவங்களையும் பொருட்படுத்தாமல் தன் கணவரோடு வாழ வேண்டும் என்ற வைராக்கியத்தோடும், கணவனே கண்கண்ட தெய்வம் என்ற நினைப்போடும் இருந்தார். மனிதர்கள் உதவியையும் நாடினார். கடவுளின் உதவியையும் நாடினார்.

1982-ஆம் ஆண்டு மே மாதக் கோடை விடுமுறையின்போது அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் காரணமாக முனியப்பன் வேறு வழியின்றி நாகம்மாளுடன் இணைந்து வாழச் சம்மதித்தோடு மட்டுமின்றி, திருப்பூரிலேயே தனிக் குடித்தனம் இருக்கவும் ஏற்பாடாயிற்று. இணைந்து தனிக்குடித்தனம் செய்வதற்கான தீர்மானத்தில் முனியப்பன் நாகம்மாளை முடிவு கட்டும் தீர்மானமும் மறைந்திருக்கிறது என்பதை யார்தான் அறிய முடியும்?

28-6-82 அன்று மாலை திருமதி. வசந்தாமணியும், நாகம்மாளும் குடியிருந்த அதே வீட்டில் கணவன் மனைவி குடியிருக்கவும், வசந்தாமணி அதே காம்பவுண்டிலுள்ள மற்றொரு வீட்டில் குடியிருக்கவும் ஏற்பாடாயிற்று. நாகம்மாள் மகிழ்ச்சியின் எல்லையிலிருந்தார்.. பலியிடச் செல்லும் ஆட்டைக் குளிப்பாட்டி, பூவிட்டு, வாசனைப் புகை போட்டு மகிழ்விப்பது எதற்கென ஆடு எங்கே அறியப்போகிறது? தனிக்குடித்தனம் துவங்கிய ஐந்தாவது நாள் இரவு, நாகம்மாள் சமையலறைச் சட்டத்தின் கயிற்றில் தொங்கினார்.!

மாநிலக் குற்றப்பிரிவு, புலனாய்வுத் துறை (சி. ஐ. டி.) இவ்வழக்கை சமுதாயத்திற்கு விடப்பட்டிருக்கும் சவாலாக ஏற்று, விசாரணையைத் தீவிரமாக மேற்கொண்டது. முடிவு, நாகம்மாளின் மரணம் கொலைதான், கொலைக் குற்றத்தை மறைத்து, சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள தற்கொலை போன்ற காட்சி அரங்கேற்றப்பட்டிருக்கிறது என்பதையும், கொலையாளி நாகம்மாளின் கணவன் முனியப்பனே என்பதையும் புலன் விசாரணையிலும், நீதிமன்றத்திலும் நிரூபித்துக் காட்டியது குற்றப்புலனாய்வுத்துறை.



(1) நாகம்மாளின் கழுத்தில், கயிற்றில் தொங்குவதால் ஏற்பட்ட அழுத்தமான காயத்தழும்பு தவிரவும், அதேபோன்ற அழுத்தம் குறைந்த மேலெழுந்தவாரியான வேறு காயத்தழும்பும் காணப்படுவதாகப் பிரேத பரிசோதனை நடத்திய மருத்துவர் விஜயலட்சுமி, பிரேத பரிசோதனை அறிக்கையில் (காயம் எண். 5) குறிப்பிட்டிருந்தாரே! அந்தக் காயம் எப்படி ஏற்பட்டது? இரண்டு வகையான காயத்தழும்பு ஏற்படக் காரணம் என்ன? தூக்கிலிடப்படுவதற்கு முன்பு கழுத்து நெறிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு அது சான்று.

(2) நாகம்மாள் தூக்கில் தொங்கும்போது தூக்குக் கயிற்றின் கழுத்து முடிச்சு, கழுத்தின் வலது பக்கத்தில் காணப்பட்டுள்ளது. அதன் காரணமாக கழுத்து இடது பக்கம் சரிந்த நிலையில் உள்ளது. அப்படியிருக்க, இயற்கைக்கு மாறாக வாயின் வலது கோடியிலிருந்து எச்சில் ஒழுகியதாகக் காணப்படுவதன் காரணம் என்ன? நாகம்மாள் கயிற்றில் தொங்குவதற்கு முன்பே, கழுத்து நெரிக்கப்பட்டு மரணம் சம்பவித்தபோது, வலது பக்கம்கழுத்து சரிந்து, வாயில் வலது கோடியிலிருந்து எச்சில் ஒழுகியிருக்க வேண்டும்.

(3) நாகம்மாள் முகத்தில் முந்திய நாள் இரவு வரை எந்த விதக் காயமும் இல்லை என்பது தெளிவு. அப்படியானால் அவள் முகத்தில் தீயால் சுட்ட காயங்கள் எப்படி ஏற்பட்டன. 'அந்தக் காயங்கள் நாகம்மாள் இறந்த பின்னர் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளது' என டாக்டர் கூறுவதன்பொருள் என்ன? இறந்த பின்னர் அவள் இறந்துவிட்டாளா என்பதை உறுதிப்படுத்த செய்த சோதனையாக இருக்கக்கூடும்.

(4) நாகம்மாளின் கணவர் முனியப்பன், தன் மனைவிக்கு மாதவிடாய் ஏற்படும்போது தாங்கமுடியாத வயிற்றுவலி ஏற்படும் எனப்புகாரில் கூறியுள்ளார். 'ஏன் வெளியே படுத்திருக்கிறீர்கள்?' எனப்பக்கத்து வீட்டுக் கந்தசாமி கேட்டபோது, தன் மனைவி, வீட்டுக்கு விலக்கம் எனக்கூறி காரணத்தை வலுப்படுத்த முயற்சித்துள்ளார். ஆனால் மருத்துவப் பரிசோதனையில் அவருக்கு அன்று மாதவிடாய் ஏற்படவில்லை என்பது தெளிவு. முனியப்பன் இந்தப் பொய்யைக் கூறி கொலையை மறைக்க முயற்சிக்கிறார்.

(5) 'சாவுக்கு நானும், வயிற்று வலியும் காரணம்' - நாகம்மாள், என்று எழுதப்பட்ட தாள் கண்டெடுக்கப்பட்டுள்ளதே? கடைசியாக எழுதப்பட்டதாக் கூறும் அந்தச் செய்தி அப்போதுஎழுதப்பட்டிருந்தால் எழுதிய பேனா சம்பவ இடத்தில் இருந்திருக்க வேண்டுமே, ஏன் சம்பவ இடத்தில் இல்லை? மாநில எழுத்து ஆய்வு நிபுணருக்கு நாகம்மாளின் கையெழுத்துக்களையும், முனியப்பனின் கையெழுத்துக்களையும், நாகம்மாள் கடைசியாக எழுதியதாகக் கூறப்படும் மேற்படி தாளையும் ஆய்வுக்கு அனுப்பியதில் அவை முனியப்பன் எழுதியவை எனக் கண்டுபிடிக்கப்பட்டதன் பொருள் என்ன? கொலையைத் தற்கொலையாக்கும் முயற்சியன்றி வேறு என்ன?

(6) வேறு எந்த வாயிலும் இல்லாத வீட்டில், கதவு உட்பக்கம், பூட்டப்பட்டிருப்பதான ஒரு சூழ்நிலையை உருவாக்கி, கதவை உதைத்துத் தள்ளியபோது இரட்டைக் கதவின் மத்திய கொண்டி தவிர, வேறு எந்தக் கொண்டியும் பூட்டப்பட்டதாகக் காணப்பட்டதன் காரணம்என்ன? இரட்டைக் கதவின் மத்திய கொண்டியை மட்டும் வெளியே இருந்தே பூட்டி, உள்ளே இருந்து பூட்டியதாக ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. கொலையைத் தற்கொலையாக்கும் முயற்சியின்றி வேறு என்ன?

(7) தற்கொலை செய்துகொள்ளும் எந்தப் பெண்ணும் மரணத்திற்குப் பின்னும் தன் மானம் காக்கப்பட, தான் உடுத்தியிருக்கும் உடைகளைச் சரி செய்து கொள்வது இயற்கையாயிருக்க, இவ்விதம் அலங்கோல நிலையில் தொங்குவாளா? நாகம்மாளின் ஜாக்கெட், பிரா திறந்தும், புடவை சரிவர உடுத்தப்படாமல் சுற்றிச் செருகி விடப்பட்டிருப்பதற்கான சூழ்நிலை என்ன? அந்தச் சூழ்நிலையில்தான் நாகம்மாள் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலையை மறைக்க அதே நிலையில் தூக்கிலிடப்பட்டிருக்கிறார்.

மேற்சொன்ன காரணங்கள் சான்றுகளுடன் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டன. சாட்சியங்களை ஏற்று, நாகம்மாள் தற்கொலை செய்து கொள்ளவில்லை. அவனது கணவன் முனியப்பன் அவளைக் 'கொலை' செய்து, கொலைக்குற்றத்தை மறைக்க, தற்கொலை போன்ற தோற்றத்தை முனியப்பன் அரங்கேற்றியுள்ளார் என முடிவு செய்து, கோவை செசன்சு நீதிபதி முனியப்பனுக்கு ஆயுள் தண்டனை விதித்தார்.

வரதட்சிணையில் துவங்கிய கசப்புணர்வு, எத்தனைக் கல்வி அறிவு பெற்றும், கல்லூரிப் பேராசிரியர்கள் தகுதிக்கு வந்த பின்னும் மாறாது, இந்தக் கொடுமையில் முடிந்துள்ளது.

சமுதாயம் கல்வி அறிவு பெற்றுவிட்டால் மாறிவிடும் என்பதை இச்சம்பவம் பொய்ப்பித்துவிட்டது என்பது வருந்துதற்குரியது.

## காவலை வென்ற கவிஞன்

வெளியீடு: ஔவை மன்றம்,
260, யஷ்வந்த் நகர்,
சேலையூர் அஞ்சல்,
சென்னை-600 073.

விலை : ரூ. 8. பக் : 68.

செந்தமிழ் முழக்கமும் சுதந்தர முழக்கமும் செய்த பைந்தமிழ்ப் பாவலர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைக் குறித்த நாடக நூல் இது.



# நூல் நயம்

வரலாற்று ஏட்டில் காணக் கிடைக்கும் செய்திகளை வகைப் படுத்தி, காட்சிகளாக்கி நாடகத் திற்கு விறுவிறுப்பை ஏற்றியிருக் கிறார் நூலாசிரியர். பாரதி யாரின் சீர்திருத்தக் கொள்கை, மனித நேயம், பிற சாதியினரிடம் அன்பு, கவித்திறன், நட்புணர்வு ஆகிய இயல்புகள் தக்க வகையில் உணர்த்தப்பட்டுள்ளன. பாத்தி ரங்களுக்கு ஏற்ற வகையில் உரையாடல்கள் அமைக்கப்பட் டுள்ளன. படிக்கவும் நடிக்கவும் ஏற்ற நூல் இது.

—தமிழ்ப்பித்தன்

## புலமை சுமந்த புயல்

ஆசிரியர் : ய. மணிகண்டன்,

வெளியீடு: மாணவன் பதிப்பகம்,
கோவிலூர், முத்துப் பேட்டை,
தஞ்சை மாவட்டம்.

விலை : ரூ. 3. பக் : 28.

மொழி ஞாயிறு எனப் புகழப் பெற்ற தேவநேயப்பாவாணர் அவர்களைக் குறித்து வெண்பா மலர்களால் சூட்டப்பட்ட மாலை இந்நூல்.

வெண்பாவில் ஓட்டம் இருக் கிறது. நூலாசிரியரின் புலமை தெளிவாகிறது. சொல்லப்பட் டுள்ள செய்திகள் சுவையாக இருக்கின்றன. வெண்பாவைப் புதுக்கவிதை வரிகளைப் போல மூன்று வரிகளாக வெளியிட்டி ருப்பது விகாரமாக இருக்கிறது.

—எம். எஸ். சுந்தரம்

## மின்பொறியியல்

ஆசிரியர்: சொ. குமார்

வெளியீடு: நியூசெஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41, பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-98.

விலை: ரூ. 25.00 பக்கம்:392

தனி மனிதனின் வாழ்க்கையி லும் நாட்டின் பல்வேறு தொழில் துறைகளிலும் மின்சாரம் இன்று பெரும் பங்கு வகிக்கின்றது.

மின் உற்பத்தி, மின்காந்த இயல், மாறுமின் சுற்றுகள் போன்ற பகுதிகளில் பலவிதமான படங்களும் அவற்றுக்கான விளக் கங்களும் மிகத் தெளிவாகவும் சிறப்பாகவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மின் அதிர்ச்சியால் ஏற்படும் விபத்துக்களும் அவற்றுக்கான பாதுகாப்பு முறைகளும் அழகுற எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பகுதியின் இறுதியி லும் பயனுள்ள வினாக்கள் தரப் பட்டுள்ளமை பாராட்டத்தக்கது.

மின் இயல் துறையைச் சேர்ந்த மாணவர்கட்கும் பலதிறப்பட்ட தொழில்துறையைச் சார்ந்தவர் களுக்கும் பெரிதும் பயன்படக் கூடிய அருமையான நூல்.

## மதுரை காந்தி

ஆசிரியர்: பா. சி. சந்திரபாபு,

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்,
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
மதுரை-624 020.

விலை: ரூ. 5.00 பக்கம்: 142

காந்தியடிகளின் கொள்கை களில் ஈடுபாடு கொண்டு இறுதி வரை அந்த வழியிலேயே வாழ்ந்து சிறந்த நா.ம.ரா. சுப்புராமன் என்ற பெரியவரின் வாழ்க்கை வரலாற்று நூல் இது.

இவர் மதுரை நகராண்மைக் கழகத் தலைவராக இருந்த காலகட்டம், மதுரையின் பொற் காலமாகத் திகழ்ந்தமையை நன்கு புலப்படுத்துகின்றது இந் நூல். இதனுள், அவருடைய சாத்வீகப் பண்பும் ஆன்மீக நெறி யும் நிரல்பட எடுத்துக் காட்டப் பட்டுள்ளன.

சாதிமத வேறுபாடற்ற சமு தாயத்தைக் காணவிழைந்த இப் பெரியவரைப் பற்றிய இவ்வரிய நூல், இன்றைய நிலையில் அனை வர்க்கும் வழிகாட்டியாகத் திக ழும் பெற்றியது.

—டாக்டர்
சிவஅரசி முத்துக்காளத்தி

## ஊராட்சி சட்ட விளக்கம்

ஆசிரியர் :
முல்லை பி.எல். முத்தையா

வெளியீடு: நியூ செஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.
41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை : ரூ. 20. பக் : 248

ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய அமைப்பு களுக்கான சட்ட நுணுக்கங்களை விளக்கமாகக் கூறுகிறது இந்நூல்.

ஊராட்சிக் கிராமங்கள், பேரூராட்சி நகரங்கள், ஊராட்சி ஒன்றியங்களை நிறுவுதல் முத லான விவரங்களும், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், அதில் சேர்ப்பதற்கான தகுதிகள், வேட்பாளர்களின் தகுதி-தகுதி யின்மை முதலான தகவல்கள் மற்றும் இவை தொடர்பான சட்ட விளக்கங்களை எளிய தமிழில் தந்திருக்கிறார் ஆசிரி யர். அரசு வெளியீடுகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப் பெற்ற இந்நூலை, அனைவரும் படித்துப் பயன் பெறலாம்.

## பிஸ்கட் பிரெட் கேக்...

ஆசிரியர் : பாக்கியம்மாள்.

வெளியீடு: யமுனா பிரசுரம்.
10, சல்லிவன்ஸ்
கார்டன் லேன்,
சென்னை-600 004.

விலை : ரூ. 7.75. பக்: 96.

பிஸ்கட், பிரெட், கேக் ஆகியவை குழந்தை முதல் பெரியவர் வரை விரும்பி உண்ணப்படுகின்ற தின்பண்டங்களாகும். எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுமாகும் இது. இவற்றின் செய்முறைகளைப் பற்றி விளக்கம் தருகிறது இந்நூல். இல்லத்தரசிக்கும், சுய வேலைவாய்ப்பில் விருப்பமுள்ளவர்க்கும் இது ஒரு சிறந்த கையேடு.

— பி. வி. ஹரி

## தெய்வச் சுடர் ஜகத்குரு

ஆசிரியர்: திருக்கோவிலூர் சிவசக்தி,

வெளியிட்டோர்:
தமிழ்மணி பதிப்பகம்,
107-எ, பெரியார்
பாதை (மேற்கு),
குளைமேடு,
சென்னை-600 094

பக்கம்: 104 விலை: ரூ. 7.50

தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம், நவாப் தோப்பிற்கு அருகே, 'கோவிந்தராயர் வீடு' என்ற இல்லத்தில் சுப்பிரமணிய சாஸ்திரி—மகாலட்சுமி இருவருக்கும் பிறந்த முதல் குழந்தை கணபதி; இரண்டாவது குழந்தை சுவாமிநாதன். இரண்டாமவரே இன்று நாம் போற்றும் ஜகத்குரு சங்கராச்சாரியார்....

—என்று பெரியவரின் வாழ்க்கை வரலாறு, பூர்வீகம், சிறப்பியல்புகள் யாவும் இந்த நூலில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. தற்சமயம் அவர்தம் வாரிசாக 69வது பட்டத்திற்கு உரியவராக உள்ள சுப்பிரமணியம் வரையில் படம் பிடித்துக் காட்டும் இப் புத்தகத்தின் கடைசியில், ஆசார்ய குரு பரம்பரை விவரமும் தரப்பட்டிருக்கிறது.

பக்தர்கள் படித்து மகிழலாம்.

—பி.எல்.ஆர்.

## வாழ்க்கை வெற்றிக்கு வள்ளுவர் காட்டும் வழி

ஆசிரியர் : பி. சி. கணேசன்,

வெளியிட்டோர்:
குமரிப் பதிப்பகம்,
20, பெருமாள்
தெற்கு வீதி,
நாகப்பட்டினம்—
611 001

பக்கம்: 88 விலை: ரூ. 6.00

கடைப்பிடிக்கக் கடினமான விஷயங்கள் உள்ளவையே நீதி நூற்கள் என்பது தவறென்று கூறி. நடைமுறை வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னைகளுக்குத் தீர்வு சொல்லுகின்ற வகையிலேயே திருக்குறள் எழுதப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தி இந்த நூலை உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர். சின்ன அரும்புகள் மனதைச் சிக்கெனப் பற்றும் எளிய-இனிய நடை.

குறளின் கருத்தை மையமாக வைத்துக் கதையாகச் சொல்லும் சிறுவர் நூற்கள் பல வெளிவந்திருக்கின்றன. ஆனால் இது வேறு விதமானது.

நூலாசிரியரே-தனக்கு ஏற்படும் ஐயப்பாடுகள் பற்றித் திருவள்ளுவரிடமே நேரில் உரையாடுவது போலவும், அவர் அதற்கு விளக்கம் அளிப்பது போலவும் அமைந்துள்ள பத்துக்கட்டுரைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

மாணவமணிகள் படித்துப் பயன்பெறலாம்.

—சோழன்

## ஹிட்லரின் கடற்போர் சாகஸங்கள்

ஆசிரியர் : தோராளிசங்கர்
எம்.ஏ., பி.எல்.

வெளியீடு:
தமிழ்க்கடல் பதிப்பகம்,
ஐ-19, டர்ன்புல்ஸ் சாலை,
முதலாவது குறுக்குத் தெரு,
நந்தனம்,
சென்னை-600 035.

பக்.: 600 விலை ரூ. 75.

ஜெர்மானிய எதேச்சாதிகாரியாம் அடால்ஃப் ஹிட்லர், உலகப் பேரரசு காண வெறித்தனமாக வீறுகொண்டு எழுந்ததை நாமறிவோம். வன்முறை நன்முறையல்ல என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்து முடிந்த அவனுடைய நடவடிக்கைகள், வாழ்க்கை முறைகள், போர்க்காலப் போக்குகள், இறுதி முடிவு ஆகியவையெல்லாம் நம்மில் எத்தனைப் பேருக்குத் தெரியும் ?

எல்லார்க்கும் அவன் வாழ்வை வெட்ட வெளிச்சமாக்குவதே இந்த நூல்.

ஹிட்லரின் முக்கிய வாழ்க்கைச் சம்பவங்கள் பற்றிய படங்களும் ஆங்காங்கே இணைக்கப்பட்டிருக்கின்றன.

—இரா. மகேஷ்

> [illegible] மற்றவர்களை [illegible] புரிந்துகொள்ளும்படி செய்ய வல்லவை; அது போலவே; உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும் செய்யும்.
>
> —எட்வர்டு பிரேக்கர்

## கடலோரம்

ஆசிரியர்: மு. மணிமுடி
வெளியீடு: வளர்தமிழ்ப் பதிப்பகம்
5, பி. இரங்கூன் தெரு,
ஆயிரம் விளக்கு
சென்னை-600 006.

விலை ரூ.7.00 பக்கம்: 96

சாடல்களும், மோதல்களும், வேண்டல்களும் (காதலியிடம் தான்) உள்ள கவிதைத்தொகுப்பு.

கவிஞர் பொதுவுடைமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர் எனவே பல கவிதைகள் அக்கருத்துக்களையே வலம் வருகின்றன.

கொலுசொலி, நகரமறுத்த நாழிகை, நெஞ்சு பொறுக்குதில்லையே, வயது போன்ற ரசிக்கத்தக்க கவிதைகளும் உண்டு.

மதம் தந்த பரிசு, எம்.எல்.ஏ., பாரதி, மண்டியிடாது என் கவிதை போன்ற நேரடித் தாக்குதல் கவிதைகளும் உண்டு.

— அ. மருதவிநாயகம்

# பார்த்தோம் படித்தோம்



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் திருவுருவப் படம் தாங்கிய தமிழரசு 'பொங்கல் மலர்' என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. சிந்தையைக் கவரும் சீரிய கவிதைகள், சிறப்பான கட்டுரைகள் படித்தேன். ரசித்தேன்.

—செந்தூர் மணியன்,
திருச்செந்தூர்.

பால் எப்படிப் பொங்கி வழிகிறதோ அதே போல் உள்ளே எல்லாக் கதைகளும் பொங்கி வழிகின்றன. கதையின் கருத்துக்கள் அருமையானது. புதுமையானது. கவிதைகளில் மிகவும் சிறப்பாக இருப்பது கண்ணதாசன் கவிதை. அறிஞர்களின் கருத்துக்களைத் தொகுத்துக் கொடுத்தது மேலும் மலருக்குச் சிறப்புத்தருகிறது. மொத்தத்தில் இந்த ஆண்டு பொங்கல் மலர் மணம் நிறைந்த சர்க்கரைப் பொங்கலாக அமைந்துவிட்டதற்கு என்னுடைய பாராட்டுதல்.

—எஸ். இராமலிங்கம்,
பாதிரிக்குப்பம்.

'பொங்கல் மலர்' சீரும் சிறப்பும் பொலிவும் கொண்டதாய் அமைந்திருந்தது. இலக்கியப் படைப்புகளும், இனிய கவிதைகளும், நல்ல அறிஞர்களது அனுபவச் செய்திகளின் தொகுப்புகளும் வாசகர்களின் சுவையை மிகுவித்தன.

—இடவை செம்பியன்;
சீர்காழி.

பொங்கல் மலரில் தமிழ்ஆண்டு பற்றிய செய்தியை வெளியிட்டதற்கு நன்றி.

மலர், கருத்துக்கருவூலமாகவும் கவர்ச்சியாகவும் சிந்தனைக்கு விருந்தாகவும் அமைந்துள்ளது.

—வ. வேம்பையன்,
கல்பாக்கம்.

'ஏன் உண்மையாய் நடக்க வேண்டும்?' இந்தக் கேள்வி மூலமே இகழ் தேடிவிட்டாய்! 'மனிதனாயிருப்பதால்' என்பதே அதற்கு மறுமொழி.

—ரஸ்கின்

நமக்கு மகிழ்ச்சி அளிக்கக் காரணமாய் இருப்பது எதையும் மாயை என்று கூற நியாயமே கிடையாது.

—கதே

சத்திய நெஞ்சுக்குள்ள ஒரே ஓர் இடையூறு யாதெனில், எளிதாய் நம்பிக்கொள்ளும் தன்மையே.

—பிலிப்ஸிட்னி

உலகத்தார் நாடும் பெருமைகள் வேண்டேன். உண்மை அறிவதொன்றே என் விருப்பம்.

—சாக்ரடீஸ்

முதலில் ஒரு குற்றம் செய்தவன் அதை மறைக்கப் பொய்யுரைக்கும் பொழுது இரண்டு குற்றங்கள் செய்தவனாகிறான்.

—வாட்ஸ்

உண்மை மனிதனுக்குச் சொந்தம். பிழை அவனுடைய காலத்துக்குச் சொந்தம்.

—கதே

நம் பக்கம் உண்மையிருப்பது வேறு—நாம் உண்மையின் பக்கத்தில் இருக்க விரும்புவது வேறு.

—லிட்வா

உண்மையை நேசி, ஆனால் பிழையை மன்னித்துவிடு.

—வால்டேர்

## நன்மொழி கேஷர்

அன்பு சில குறைகளையும் அறிவு சில பிழைகளையும் பொருட்படுத்துவதில்லை. ஆனால், உண்மை எந்த அவமானத்தையும் மன்னிக்காது. எந்தக் குறையையும் பொறுக்காது.

—ரஸ்கின்

பொருள் சேர்ப்பதில் மட்டுமல்ல, புகழ் தேடுவதில்கூட நாம் மாண்டுவிடக்கூடிய மனிதர்கள். ஆனால், உண்மை தேடுவதில் நாம் அழிவில்லாதவர்கள். உண்மை நமக்கு அந்தப் பெருமையைத் தேடித்தரும்.

—தோரோ

தரையோடு தரையாய் நசுக்கப் பட்டாலும் உண்மை மறுபடியும் எழுந்து நிற்கவே செய்யும். அந்த ஆற்றல் உடையதுதான் உண்மை.

—பிரையண்ட்

தீயோர் தம் குற்றங்களைத் தாமே மன்னித்து விடுவர்; நல்லவர்கள் இனிமேல் அத்தகைய குற்றங்களைச் செய்யாதிருப்பர். முதற் குற்றத்தைச் சரியென்று சாதிப்பவன் மூன்றாவது குற்றம் செய்தவனாகிறான்.

—பென்ஜான்சன்

பிறர் குற்றங்களை நம் கண்முன் வைத்துக் கொள்கின்றோம். நம் குற்றங்களை நம் பின்புறம் வைத்துக் கொள்கின்றோம்.

—ஸெனிக்கா

தன்னைக் காண்பதே கடினமான செயல். பிறர் செயல்களில் குற்றம் காண்பது மிகமிக எளிதான செயல்.

—தேல்ஸ்

பிறர் குற்றம் காண்பதும் தன் குற்றம் மறுப்பதுமே மடமையின் முழுமையான அடையாளம்.

—ஸிஸரோ

தொகுப்பு : யுமூலன்






# சுற்றுலாப் பொருட்காட்சியைச் சுற்றிவந்தோம்

"நம்நாட்டில் மக்கள் எல்லாவற்றையும் படித்துத் தெரிந்து கொள்வார்கள் என்றிருந்தால் அது இயலாத காரியம்; கண்ணால் கண்டு, கேள்விகள் கேட்டு விளக்கங்களைப் பெறும் கண்காட்சிகள் மூலம்தான் நம்நாட்டு மக்களுக்கு அறிவுத் தெளிவை ஏற்படுத்த முடியும்'' என்று ஒரு முறை குறிப்பிட்டார் பேரறிஞர் அண்ணா.

கண்காட்சி - பொருட்காட்சி ஆகியவற்றின் அவசியம் குறித்து அண்ணா அவர்கள் கூறிய கருத்தை ஏற்றுச் செயல்படும் வகையில் தமிழக அரசின் சுற்றுலாத்துறை ஆண்டுதோறும் சென்னை தீவுத்திடலில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை நடத்தி வருகிறது.

தொழில்துறை முன்னேற்றம், சமூக-பொருளாதாரத்துறைகளில் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காகக் தமிழக அரசு ஆற்றி வரும் சாதனைகள் ஆகியவற்றைப் பொதுமக்களுக்கு உணர்த்துவதே இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியின் நோக்கம்.

தமிழகத்து மக்கள் மட்டுமின்றி, வெளிமாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் இந்தக் கண்காட்சியை நாடிவருவதன் மூலம்-சுற்றுலாவும் பொருளாதாரமும் வளர்ச்சியுறுகின்றன.

கடந்த 14 ஆண்டுகளாகச் சுற்றுலாப் பொருட்காட்சி சென்னையில் நடத்தப்படுகிறது என்றாலும் சமீப காலத்தில்தான் அதன் மூலம் அரசுக்கு வருவாய் அதிகஅளவில் கிடைத்திருக்கிறது. சென்ற ஆண்டு நூறு நாட்களுக்கு மேல் இந்தப் பொருட்காட்சி நடைபெற்றது. இந்த ஆண்டும் அதைப் போலவே நடைபெறவுள்ளது. ஆண்டுக்கு 50 லட்சம் மக்கள் இந்தப் பொருட்காட்சியைக் கண்டு செல்கிறார்கள். இவர்களில் வெளிமாநிலத்தவர்களும் உண்டு.

தமிழக அரசுத் துறைகள் 24, தமிழக அரசு நிறுவனங்கள் 14, மைய அர்சின் பொறுப்பில் உள்ள நிறுவனங்கள் 4, ஏனைய மாநிலத் துறைகள் 7, கூட்டுறவுச் சங்கங்கள் 4, தனியார் நிறுவனங்கள் 28 ஆகியவற்றைச் சேர்ந்த அரங்குகள் இந்த ஆண்டு பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன. கல்வி கல்லாத கிராமத்து மக்களும் தொழில் வளர்ச்சி, பொறியியல் வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி ஆகியவற்றை எளிதில் அறிந்து கொள்ளும் வ்கையில் அரங்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

போர் நினைவுச் சின்னத்தின் அருகே பொருட்காட்சியின் தலைவாயில் அமைந்துள்ளது. அழகுடன் தோகை விரித்தாடும் மயில் நம்மை வரவேற்கிறது. பொம்மைவடிவில்! அதன் பின்னணியில் குன்று ஒன்று காட்சி தருகிறது; நமக்கு மலைப்பைத் தருகிறது.

உள்ளே நுழைந்ததும் 'சுற்றுலாக்கண்காட்சி உங்களை வரவேற்கிறது' என்ற எழுத்துக்களுடன் ஆகாயத்தில் வட்டமிடும்

## பொருட்காட்சி

**ஆயிரக்கணக்கான புத்தகங்களைப் படித்து, அதன் மூலம் பெறுகின்ற அறிவை, பொருட்காட்சிக்கு ஒருமுறை சென்று வருவதன் மூலமே ஒருவர் எளிதில் பெற்றுவிட முடியும்.**

**—மாண்புமிகு முதல்வர்**
**டாக்டர் எம்.ஜி.ஆர்**

சிவப்பு வண்ண பலூன் நம்மை வரவேற்கிறது. அங்கும் இங்கும் நமது பார்வை ஓடும்போது நமக்கு இரண்டு கண்கள்தானே இருக்கின்றன என்ற ஏக்கம் எழுகிறது. 'காணக் கண் கோடி வேண்டும்' என்ற மதுரை மணி அய்யரின் பாடல் நமக்கு நினைவுக்கு வருகிறது. வண்ண வண்ண விளக்குகள், பெரிய அரங்குகள், சிறுவர் ரயில், நீரூற்றுகள், வண்ணவிளக்குகளில் அமைக்கப் பட்டுள்ள தேர், மாநகராட்சி அரங்கு - அறநிலையத்துறை அரங்கு, செய்தித்துறை அரங்கு, தொழில் துறை அரங்கு இப்படி அநேக அரங்குகள் நுழையும் போதே நம்மை ஈர்க்கின்றன. எந்த அரங்குக்குள் நுழைவது என்ற திகைப்பே நமக்கு ஏற்படுகிறது. என்றாலும் நம்மை அறியாமல் நமது கால்கள் அறநிலையத்துறை அரங்குக்கே அழைத்துச் செல்கின்றன.

அரங்கின் உள்ளே நுழையும் போது 'சங்கர நாராயணன்' நமக்கும் காட்சி தருகிறார். அரங்கில் இடம்பெற்றுள்ள தெய்வங்களின் சித்திரங்கள், ஆலய கோபுரங்களின் புகைப்படங்கள், உற்சவர்கள், உலா செல்லப் பயன்படும் வாகனங்களின் மாதிரி வடிவங்கள், பூஜைக்குரிய சாதனங்கள், தீபாராதனைக் கருவிகள் ஆகியவை தமிழக ஆலயங்களின் புராதனத்தையும் புனிதத்தையும் எடுத்துச் சொல்கின்றன. பழனி தண்டாயுதபாணி ஆலயத்தின் மாதிரி வடிவம் - ராமேஸ்வரம் ராமநாதசுவாமி ஆலயத்தின் மாதிரி வடிவம் ஆகியவை நம்மைக் கவர்கின்றன. ராமநாதசாமி ஆலயத்திற்கு விவேகானந்தர் 27.1.1897ல் வருகை புரிந்த போது பார்வையாளர் பதிவேட்டில் தனது கையொப்பத்துடன் ஆங்கிலத்தில் எழுதிய பாராட்டு வாசகத்தைப் பெரிய அளவில் புகைப்படப் பிரதியாக்கி இந்த அரங்கில் வைத்திருக்கிறார்கள். கார்க்கண்டேயர் வரலாறு, பிருங்கிமுனிவர், சூரசம்ஹாரம் போன்ற பல்வேறு புராண நிகழ்ச்சிகள் 20 நிமிடங்களுக்கு ஒளி - ஒலிக் காட்சியாகக் காட்டப்படுகின்றன.

மாநகராட்சி அரங்கிற்கு வெளியே பாண்டு வாத்தியம் முழங்கிக் கொண்டிருக்கிறது. அரங்கை நாடி வருவோரை வரவேற்பதுபோல இருக்கிறது. இந்த இன்னிசை அரங்குக்குள் நுழைகிறோம்.

'300 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் சென்னை மாநகராட்சி உங்களை வரவேற்று மகிழ்கிறது' என்ற அறிவிப்பு நம்மை வரவேற்கிறது.



## சென்னை மாநகரம்—சில தகவல்கள்

* சென்னையின் முதல் மேயர் நத்தேனியல் இக்கின்ஸன் ஆவார். இவர் 29.9.1688-ல் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்.

* முதல் இந்திய மேயர் குமாரராஜா, எம்.ஏ. முத்தைய செட்டியார் 7.3.1933ல் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்.

* இந்தியாவிலேயே முதல் ஆங்கில வைத்தியமுறை மருத்துவமனை சென்னை நகரில்தான் 1664ஆம் ஆண்டு உருவாகியிருக்கிறது.

* சென்னையில் டிராம் போக்குவரத்து 1895ஆம் ஆண்டு மே மாதத்தில் தொடங்கியிருக்கிறது. இதற்கு 6 ஆண்டுகள் கழித்துத்தான் இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் லண்டன் மாநகரிலும் டிராம் போக்குவரத்துத் தொடங்கியிருக்கிறது.

* ஐஸ் ஹவுஸ் என்று சொல்லப்படும் கட்டடம் 1840ல் உருவாகியது. அமெரிக்காவிலிருந்து கப்பல் மூலமாகக் கொண்டு வரப்பட்ட ஐஸ் கட்டிகள் சேமித்து வைக்கப் பட்ட கிடங்கு இது.

* சென்னை மாநகரில் தெரு விளக்குகள் 1785ல் அறிமுகப் படுத்தப்பட்டன.

* எண்ணெய்விளக்குகள் 1857-ஆம் ஆண்டிலும், மின் விளக்குகள் 1910-ஆம் ஆண்டிலும் பயன்படுத்தப்பட்டன.

* தெருவில் கடிகாரம் கொண்ட மணிக் கூண்டு 1633-34ஆம் ஆண்டில்தான் நிறுவப்பட்டது. 1637ஆம் ஆண்டு மார்ச் 23 வரை 33 மணிக்கூண்டுகள் நிறுவப்பட்டன.

* முதன்முதலாக 1881ல்தான் தொலைபேசி மையம் சென்னையில் நிறுவப்பட்டது. இதற்குப் பின்னர்தான் லண்டனில் நிறுவப்பட்டுள்ளது.

* 1893ஆம் ஆண்டில் 75 தொலைபேசிகள் இயங்கி வந்தன.

* ஆளுநர் சர் சார்லஸ் டிரவல்யனின் நிர்வாகக் காலத்தில் தான் 'மக்கள் பூங்கா' அமைக்கப்பட்டது.

* சென்ட்ரல் ரயில் நிலையம் 1868ல் உருவாக்கப்பட்டது.

* முதல் மோட்டார்கார் 1894ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

* சென்னையின் முதல் பெரிய கட்டடமான உயர்நீதிமன்றக் கட்டடம் 1888ல் உருவாக்கப் பட்டது.

* விடுதலைக்குப் பின்னர் ராஜாஜி மண்டபம் என்று பெயர் சூட்டப்பட்ட மன்றம், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பேங்க்வெட்டிங் ஹால் என்று அழைக்கப்பட்டது. இது 1802ல் கட்டப்பட்டது.

பழைய சென்னை மாநகரின் வடிவத்தைப் பல்வேறு புகைப் படங்களால் அறிந்து கொள்கி றோம். ஆங்கிலேயர்கள் அர சாட்சி செய்த காலத்தை நமக்கு உணர்த்துகின்றன. அந்தப் புகைப் படங்கள். சாரட்டின் மாதிரி வடி வம் இங்கே உள்ளது. சென்னை மாநகரம் வளர்ந்த விவரமும் பல்வேறு தகவல்களும் அறுவை அய்யாசாமி என்ற பாத்திரத்தின் மூலம் பொம்மலாட்டத்தின் வாயி லாகத் தெளிவாக்கப்படுகின்றன.

போக்குவரத்துத் துறையின் அரங்குக்குள்ளே நுழைகிறோம். போக்குவரத்தின் வளர்ச்சியைப் புள்ளி விவரங்களின் மூலம் தெரிந்து கொள்கிறோம். தமிழ கத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் போக்குவரத்துத்துறை யின் உந்துகள் பொது மக்களுக் குப் பயன்படுகின்றன என்பதை அந்த அரங்கு எடுத்துச் சொல் கிறது.

'பழக இனிமை, பணியில் நேர்மை' என்ற அறிவிப்புப் பல கையுடன் நம்மை வரவேற்கிறது காவல்துறை அரங்கு. சமுதா யத்தை ஏமாற்றுகிறவர்களைப் பற்றிய விவரங்களைத் தந்து, பொது மக்களுக்கு விழிப்பூட்டு கிறது இந்த அரங்கு.

போலீஸ்காரரின் பொம்மை ஒன்று காட்சி தருகிறது. அவரி டம் வினா விடுத்தால் அவர் விடை தருகிறார். என்னிடம் பேசுங்கள் என்ற அறிவிப்புப் பலகை அவர் முன்னால் காட்சி தருகிறது. சிறுவர்களும் இளை ஞர்களும் அவரிடம் பேசத் துடிக் கின்றனர்.

''உங்க மீசை ஏன் மேல் நோக்கி இருக்குது?'' பார்வையா ளர் ஒருவர் கேட்கிறார்.

''ஆம்பலையாச்சே; அப்படித் தான் இருக்கும்!'' - பொம்மை போலீஸ் வெடுக்கென்று பதில் சொல்கிறார்.

தடய அறிவியலுக்கு எடுத் துக்காட்டு சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வழக்குரை காதை என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

விரல் பதிவு மூலம் மனிதர் களை அடையாளம் கண்டு பிடிக் கும் முறை உலகிலேயே முதன் முதல் 1895-இல் இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில்தான் அறிமுகம் செய்யப்பட்டிருக் கிறது என்றும் அமெரிக்காவில் இந்த முறை 1901-ஆம் ஆண்டி லும், இங்கிலாந்தில் 1903 ஆம் ஆண்டிலும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது என்ற விவரத்தையும் இந்த அரங்கு தருகிறது.

புலியின் கோரைப்பற்கள் கொண்ட வாயின் உள்ளே மக்கள் நுழைந்து கொண்டிருக் கிறார்கள். வியப்புடன் அருகில் சென்று பார்த்தால் அது வனத் துறையின் அரங்கு என்பது தெளி வாகியது. நாமும் உள்ளே நுழை கிறோம். யானைத் தந்தங்கள் நம்மை வரவேற்கின்றன. பல வகை மரங்களின் மாதிரிகள் இடம் பெற்றுள்ளன. காட் டெருமை, கரடி, புள்ளிமான் முதலை ஆகியவற்றின் தோல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மைய அரசின் தென்னக ரயில்வேதுறை அரங்கு நுழை வாயிலில் ரயில்வே சின்னவுடன் நம்மை அழைக்கிறது. உள்ளே சென்றால் சென்னை மின்ரயில் களின் மாதிரி அமைப்பு - கல் கத்தா அரங்க ரயில் போக்கு வரத்தின் மாதிரி அமைப்பு ஆகியவை ஒய்வு ஒழிவு இன்றி இயங்கியவாறு மக்களுக்கு அரிய காட்சியை வழங்கிக் கொண்டே இருக்கின்றன.

ஊரக வளர்ச்சித்துறை அரங்கு கிராமப்புற மக்களுக்கு அரசு அளித்துவரும் பல்வேறு விதமான உதவிகள் குறித்தும், சாண எரிவாயுக் கலன்களின் அவசியம் குறித்தும் எடுத்துச் சொல்கிறது.

நிறுவன நிதி உதவித்துறை அரங்கு -பால்பண்ணை வைப்ப தற்கு நிதிஉதவி அளிப்பது, கிணறு வெட்டக் கடன் உதவி தருவது ஆகியவற்றைக் குறித்த செய்திகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்கின்றது.

மீன்துறையின் முன்னே ஒரு தண்ணீர்த்தொட்டி, உள்ளே நூற்றுக்கணக்கான தங்கமீன்கள் காதுகளை நீட்டி நீந்திக்கொண் டிருக்கின்றன.

அரங்கின் உள்ளே சென்றால் பல்வகை மீன்களின் புகைப்படங் களும் மாதிரிகளும் காட்சி தரு கின்றன.



மீன்வளர்ச்சியின் அவசியம் குறித்து அங்கே சீனநாட்டுப் பொன்மொழி ஒன்று காணப்படு கிறது. அது வருமாறு:

''ஒருவனுக்கு மீன்கொடுத்தால் அது அவனுடைய ஒருநாள் உண வாகும். ஆனால் மீன் வளர்க்கக் கற்றுக்கொடுத்தால் மீன் அவ னுக்கு வாழ்நாள் முழுதும் உண வளித்து வாழ வழி வகுக்கும்.''

வீட்டுவசதித்துறை அரங்கின் உள்ளே நுழைந்தால் அங்குள்ள தகவல் நம்மைப் பிரமிக்க வைக் கிறது. ஏழை எளிய மக்களுக்கு இல்லங்கள் கிடைப்பதற்குத் தமிழக அரசு ஆற்றிவரும் அரிய பணிகள் இங்கே தொகுத்தளிக் கப்பட்டுள்ளன.

செய்தித்துறை அரங்கின் உள்ளே நுழையும்போது திருக் குறள் தந்த திருவள்ளுவர் நம்மை





வரவேற்கிறார். கன்னியாகுமரிக் கடற் பாறையில் 75 அடி உயரத்தில்சுமார் 4.5கோடி ரூபாய் செலவில் வெண்கலத்தால் அமைக்கப்படவுள்ள திருவள்ளுவர் சிலையின் மாதிரி வடிவம்தான் இங்கே காட்சியளிப்பது. அதைக் காணும் போது மெய் சிலிர்க்கிறது. உலகுக்கு நூல் தந்தவர் அல்லவா வள்ளுவர்? அவருக்குச் சிறப்புச் சேர்ப்பது நியாயந்தானே!

தொடர்ந்து பல்வேறு அரங்குகளுக்குள்ளே செல்கிறோம். அனைத்தும் கண்காட்சியாகத் திகழ்வதுடன் கல்வி வழங்கும் பள்ளிகளாகவும் கல்லூரிகளாகவும் திகழ்கின்றன.

கண்காட்சி பொதுவாக வயது வந்தவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கவே பயன்படும். சிறுவர்களைக் குறித்து கண்காட்சி நடத்துவோர் கவலைப்படுவதே கிடையாது. ஆனால் சுற்றுலாத் துறை நடத்தும் கண்காட்சி அப்படி இல்லை. மழலைகளையும் பிஞ்சுக் குழந்தைகளையும் மகிழ்விக்க 'அன்னை இந்திரா காந்தி சிறுவர் உலகம்' என்ற பகுதியை உருவாக்கி அங்கே மழலைப் பட்டாளங்கள் சிரித்து விளையாட ஏராளமான உபகரணங்களை வைத்திருக்கிறார்கள்.

சின்னஞ்சிறுவர்கள் ஓடியாடி விளையாட வேண்டும். எப்போதும் சுறுசுறுப்புடன் விளங்க வேண்டும் என்ற முறையில் இங்கே பல்வேறு விளையாட்டுக் கருவிகள் இடம் பெற்றுள்ளன. இரும்பு ஊஞ்சல், ஸ்பிரிங்கினால் செய்யப்பட்டுள்ள குதிரைப் பொம்மைகள் ஆகியவை சிறுவர்களைக் கவர்கின்றன.

சறுக்குப் பலகையும் உண்டு; சில பெரியவர்களும் இந்தச் சறுக்குப் பலகையில் விளையாடி தமது பால்யகால உணர்வை 'பிளாஷ்பேக்', செய்து பார்த்துக் கொள்கிறார்கள். இந்தச் சிறுவர் உலகத்தில் கலை நிகழ்ச்சிகளும் உண்டு. குதிரைச் சவாரி-யானை சவாரியும் செய்யலாம்.

ஊனமுற்ற குழந்தைகள் விளையாடி மகிழ்ச்சி பெறுவதற்கும் இங்கு வகைசெய்யப்பட்டுள்ளது. கராத்தே, சிலம்பாட்டம், ஜூடோ ஆகியவை இங்குள்ள திறந்தவெளி மேடையில் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றைப் பார்ப்பதன் வாயிலாகச் சின்னஞ்சிறு உள்ளங்களில் வீர உணர்வு விதைக்கப்படுகிறது.

அன்னத்தின் வயிற்றின் உள்ளே சிறுவர் ரயில் நுழைந்து வரும் காட்சி அற்புதம்!

இந்தச் சிறுவர் உலகத்தில் நுழைய ஒரு ரூபாய் கட்டணம். ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களும் ஊனமுற்றோரும் இலவசமாக அனுமதிக்கப்படுகிறார்கள். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும் இலவசஅனுமதி உண்டு. பள்ளிச் சிறுவர்களுக்குக் கட்டணத்தில் சலுகையும் அளிக்கப்படுகிறது.

அரசுத்துறை அரங்குகளை அடுத்து, பல்வேறு பொருட்களின் விற்பனை நிலையங்கள் பொது மக்களைப் பெருமளவில் கவர்கின்றன.

பிளாஸ்டிக் பொருள் கடைகள், ஜவுளிக்கடைகள் ஏராளம்



ஏராளம். வங்க மாநிலத் துணிக் கடைகள், அரியானா மாநிலத் துணிக்கடைகள் - கேரள மாநிலக் கடைகள் இப்படி ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே வரும்போது, திரைப்பட வரலாற்றைத் தெரிவிக்கும் அரங்கும் நம் கண்களில் படுகிறது. மறைந்த நடிகர்கள் பலர் இங்கே உயிர் பெற்று வந்திருக்கிறார்கள் - புகைப்பட வடிவில்!

ராட்டினங்களில்தான் எத்தனை வகை! கீழிருந்து நேரடியாக உயரச் செல்லும் ராட்டினம்—45 டிகிரியில் உயரச் சென்று லாவகமாகத் திரும்பும் ராட்டினம்—இப்படிப் பலப்பல! அங்கெல்லாம் எந்த நேரத்திலும் பிள்ளைக் கனியமுதுகள் கூட்டமும் பெரியவர்களின் கூட்டமும் தான் காணப்படுகின்றன.

'ஓட்டல் தமிழ்நாடு' என்னும் உணவு விடுதியில் சுவையான உணவுப் பண்டங்கள் மலிவான விலையில் வழங்கப்படுவதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அண்ணா கலையரங்கம், மாதவி கலை அரங்கம் ஆகியவற்றில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள்-இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள் பொது மக்களின் வரவேற்பை அதிக அளவில் பெறுகின்றன.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்களின் அரிய ஆலோசனைகளின் கீழ் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. வெ. பாலகுரு, சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு, இரா. கிருபாகரன் இ.ஆ.ப.. சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சித் தனி அலுவலர் திரு. சோம. துரைராஜ் ஆகியோரின் மேற்பார்வையில் சுற்றுலாப் பொருட்காட்சிபொலிவுபெற்றுத் திகழ்கிறது.

—தமிழ்ப்பித்தன்

# விறகுச் செலவு மிச்சம்



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் வள்ளியூர் வட்டாரம் வடக்கன்குளம் ஊராட்சி புஷ்ப்பபுரத்தைச் சேர்ந்தவர் உழைப்பால் உயர்ந்த சின்ன நாடார்.

சுமார் 25 கால்நடைகள் வைத்துள்ள அவரை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அழைத்து சாண எரிவாயுத் திட்டத்தின் மேன்மைகளை எடுத்துக் கூறினர். தன் மகன்கள் தங்கராஜ், ராஜரத்தினம், ஈசாக்கு, கிறிஸ்துதாஸ், நெல்சன் ஐவரையும் அழைத்து கலந்து பேசினார் அவர். பிறகு ஐந்து பேருக்கும் தனித் தனியாகப் போட்டுத் தர முடியுமா? எனக்கேட்டார். அலுவலர்கள் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டனர்.

ஆரல்வாய்மொழி பாரத ஸ்டேட் வங்கி இவர்களுக்குக் கடன்தர முன் வநதது. மானியத்துடன் தலா ரூ. 6,500 கடன் வழங்கவும் செய்தது. நாகர் கோவில் மத்திய அரசு நிறுவனத்துடன் உள்ள சென்ட்ரல் அப்ரபிரியேட் நிறுவனம் 5 எரிகலங்களையும் நிர்மாணித்துத் தந்தது. இப்போது 5 குடும்பத்தினரும் சாண எரிவாயுக் கலன் மூலம் அடுப்பு எரிப்பதுடன், தலா ஒவ்வொரு விளக்கும் எரிக்கிறார்கள். இதன் மூலம் அவர்களுக்கு மாதா மாதம் விறகு வாங்கும் செலவு ரூ. 50லிருந்து 75 வரை மிச்சமானதுடன், கடனைத் தவணை தவறாது கட்டி வருகிறார்கள். இவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் கூறுவதெல்லாம், ''விறகுக்காக மரங்களை வெட்டத் தேவையில்லை. பச்சைமரங்களை வெட்டுவதும், பச்சைப் பிள்ளையை வெட்டுவதும் ஒன்றுதான். புகையில்லாமல் சமையல் நடத்துகிறோம்.'' என்பது தான்.

இதே வட்டாரத்தைச் சார்ந்த தனக்கர்குளம் ஊராட்சி பெத்தரெங்கபுரத்தில் இருக்கும் சலவைத் தொழில் செய்து வரும் பகவதி சொல்வது: ''எனக்கு மிகக்குறைந்த வருவாய், தோட்டப் புஞ்சை 0.80 சென்ட் மட்டும் உள்ளது. இரண்டு பசுவும், 2 எருமையும், 3 கன்றுகளும் இருக்கிறது. 3 ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் உண்டு. எனக்குச் சலவைத் தொழில், காலை சென்று மாலை வருவது வழக்கம். மாலையில் கஷ்டப்பட்டு வந்த நேரம் எனது இல்லாள் சமையல் வேலையில் விறகு அடுப்புடன் உழன்று புகை மூட்டத்துடன் கஷ்டப்பட்டு வந்தார். சலவைக்குச் சுள்ளி போன்ற விறகு, சமையலுக்கு வேறு விதமான விறகு, இவைகளைச் சேமிக்க ஒரு இடம் வேறு வேண்டும். இதற்கெல்லாம் ஒரு விடிவாக அமைந்தது சாண எரிவாயு திட்டம். எந்த நேரத்திலும் புகையில்லாமலும், பாத்திரம் கரி பிடிக்காமலும் விரைவாகச் சமையல் நடைபெறுகிறது. எங்கள் தொழிலுக்குரிய அடுப்பாகவே அமைக்க வசதி ஏற்படின் இன்னும் எளிதாக இருக்கும். என் குடும்பத்தை ஒளி மயமாக்கிய இந்தத் திட்டம் வளர்க. வெல்க!''



இதே கிராமத்தில் இருக்கும் ஆசிரியர் திரு பால்துரை இத் திட்டத்தினால்புதிதாகச்சேமிப்பு கிடைக்காததைப் பற்றிக் கூறுகிறார்.

''எனக்கு 6.00 ஏக்கர் தோட்டப் புஞ்சை நிலம் உள்ளது. 3 பசுக்கள், 2 எருமை 2 காளை மாடு உண்டு. இதனுடைய சாணத்தில் எரிவாயுத் தன்மையை மட்டும் உபயோகித்து வெளிவரும் சாணக் கலவை மீண்டும் உரத்திற்குப் பயன்பட்டு வருகிறது. களைகள் எதுவும் முளைப்பதில்லை. எனது வீட்டிற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 15-க்கு விறகு தேவைப்பட்டது. இது 3 சி.எம். என்ற அளவில் அமைத்த எனக்கு அரசு மானியம் கிடைத்தது. கட்டுமான செலவில் 50 % சதவிகிதம் மான்யமாக வந்துவிட்டது. இனி எனக்கு விறகைப் பற்றிய சிந்தனையே தேவையில்லை. விறகுக்கு ஆகும் செலவில் இரண்டு வருட தொகையை வைத்துக் கடனாகப் பெற்றுக் கட்டி முடித்துவிட்டேன். சாண எரிவாயுக்கலன் எல்லாத் தரப்பினருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.''

பேட்டி .

**எம். அண்ணாமலை**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருநெல்வேலி மாவட்டம்.**

# குழந்தை இலக்கியம்

சிறுவர்களுக்கான நூல்களை வெளியிடுவதில், சோவியத் நாடு உலகில் முதலிடம் பெற்றுள்ளது. மொத்தம் 600 கோடி பிரதிகளைக் கொண்ட 90,000 பதிப்புகள் வெளிவந்துள்ளன. 70க்கு மேற்பட்ட பதிப்பகங்கள், ஆண்டு தோறும் மொத்தம் 32 கோடி பிரதிகளுக்கு மேல் குழந்தை நூல்களை வெளியிடுகின்றன.

இளைஞர் இதழ்களைத் தவிர, 40க்கு மேற்பட்ட சிறுவர் இதழ்களும் வெளிவருகின்றன. குழந்தைகளுக்காக 30 செய்திப் பத்திரிகைகளும் வெளியிடப்படுகின்றன. குழந்தைகளின் முக்கிய பத்திரிகையான 'பயனிர்ஸ்காயா பிராவ்தா' சுமார் 1 கோடி பிரதிகளும் 'முர்ஜில்கா' என்னும் இதழ் 50 இலட்சம் பிரதிகளும் விற்பனையாகின்றன.

சோவியத் இலக்கியத்தின் தந்தையான மாக்சிம் கார்க்கி, சோவியத் நாட்டில் சிறுவர் இலக்கியத்திற்கு அடிகோலியவர்களில் ஒருவர். குழந்தைகளுக்கு அவர் ஒரு கடிதம் எழுதினார். ''புதிய புத்தகங்களில் எதை நீங்கள் படிக்க விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டார். ''சோவியத் நாட்டின் வீரர்களைப் பற்றிய நூல்களை வெளியிடுங்கள்; அவர்களை நாங்கள் பின்பற்ற விரும்புகிறோம். புதிய தேவதைக் கதைகளும், விஞ்ஞானப் புத்தகங்களும், வேடிக்கைப் பாடல்களும், களிப்பூட்டும் சிறுகதைகளும் எங்களுக்குத் தேவை'' என்று சிறுவர்கள் பதில் அளித்தனர்.



கார்க்கியின் முயற்சியின் பேரில் உலகிலேயே முதன் முதலாக, குழந்தை இலக்கியத்திற்கான அரசாங்கப் பதிப்பகம் சோவியத் நாட்டில் நிறுவப் பெற்றது. நாற்பது ஆண்டுகளாக இயங்கி வரும் இப்பதிப்பகம், ஆண்டுதோறும் 18.5 கோடி புத்தகப் பிரதிகளை வெளியிடுகிறது!

குழந்தைகளுக்குப் புதிய கவிதையை வழங்கியவர்களில் மயாகோவ்ஸ்கியின் பங்கு மகத்தானது. உள்ளத்தைத் தொடுகின்ற எளிய கவிதைகளை அவர் இயற்றியுள்ளார். குழந்தை வளர்ப்பு மற்றும் கல்வி சம்பந்தமான பிரச்சினைகளை அக்கவிதைகள் பிரதிபலிக்கின்றன. ''எது நல்லது, எது கெட்டது?'', ''நான் வளர்ந்த பிறகு, எவ்வாறு இருப்பேன்?'' ஆகிய மயாகோவ்ஸ்கியின் கவிதைகள் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

சோவியத் நாட்டில் ஐம்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் சிறுவர் நூல்கள் வெளியிடப் பெறுகின்றன. பல குழந்தை எழுத்தாளர்களுக்குச் சோவியத் யூனியன் அரசுப் பரிசும், ரஷ்ய சமஷ்டியின் குருப்ஸ்காயா பரிசும் லெனின் கோம்சமால் பரிசும் வழங்கப் பெற்றுள்ளன.

மாணவர் பக்கம்

## பட்டொளிவீசித் திகழ்வீரே!

பள்ளி செல்லும் குழந்தைகளே
அள்ளிச் செல்லும் நெஞ்சங்களே—நீவிர்
எள்ளி நகை யாடிடுங்கள்—உமக்கு
ஏற்றமில்லாக் கொள்கைகளை!

பகுத்தறிவு அறிவியல் விஞ்ஞானம்—இதைத்
தொகுத்து நிதம் படிப்பீர்கள்
வகுத்த முன்னோர் வாசகங்கள்—அதை
வகையாய்க் கற்றுத் தேறிடுங்கள்!

பொன்மனச்செம்மல் சத்துணவை—நிதம்
பசியாற உண்ணும் சிறுவர்களே—நீவிர்
பளிங்குப் பனி நிலவென ஞாயிறென
பட்டொளி வீசித் திகழ்வீரே!

—இராஜதேவன்



## நூல் நிலையம்

—பூங்கோவன்

நல்ல நல்ல நூல்களெல்லாம்
நல்ல நண்பர் போலாகும்
மெல்ல அதனைப் படித்து வந்தால்
மேதையாகும் வாய்ப்புண்டாம்!

தொல்லை யில்லா வாழ்க்கைநெறி
தொடுத்துக் கொடுக்கும் வழிகாட்டி
பொல்லாப் பழக்கம் விட்டொழிக்க
படிக்க வேண்டும் நன் நூல்கள்

கற்க வசதி யற்றோர்க்கு
கண்டு வைத்தார் நூல்நிலையம்
அற்புத மான நூல்களெல்லாம்
அழகாய் அடுக்கி வைத்துள்ளார்

வஞ்சம் இல்லாக் கல்விதனில்
வசிக்கும் அங்கம் நூல்நிலையம்
கொஞ்சம் அதனைப் பயன்படுத்தி
கூர்மை பெற்று வாழ்வீரே!



# குட்டிக் கதைகள்

## அரசர் காட்டிய மரியாதை

ஒரு சமயம் பிரான்சின் அரசராக இருந்த நான்காம் ஹென்றி நகர்வலம் வந்து கொண்டிருந்தார். அவர் குதிரை மேல் அமர்ந்து வந்து கொண்டிருந்தபோது எதிரே வந்த ஒரு பிச்சைக்காரன் தன் தலையிலிருந்த தொப்பியை உடனே எடுத்துவிட்டு அவருக்கு மரியாதை காட்டி வணங்கினான். நான்காம் ஹென்றியும் தமது தலையிலிருந்த தொப்பியைக் கழற்றிவிட்டு பதிலுக்கு வணங்கி மரியாதை செய்தார். இதைக் கண்டதும் அவருடன் வந்து கொண்டிருந்த அரசாங்க அலுவலர்கள் ஆச்சரியத்துடன், 'ஒரு பிச்சைக்காரனுக்கு முன்னால் தாங்கள் குனிந்து மரியாதை செலுத்துவது சரிதானா?' என்று கேட்டனர். உடனே அரசர், 'சரிதான்'..ஏனென்றால் பிரான்சின் அரசன் ஒரு பிச்சைக்காரனை விட மரியாதை குறைந்தவன் என்று என்னைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை' என்றார்.

## மூன்று பொம்மைகள்

ஒருநாள் அக்பர் சக்கரவர்த்தியின் தர்பாருக்கு ஒரு சிற்பி, மூன்று பொம்மைகள் செய்து கொண்டுவந்தான். மூன்றும் ஒரே வடிவமுள்ளவை. மிக அழகுள்ளவையாகவும் அமைந்திருந்தன. எது உயர்ந்தது, எது தாழ்ந்தது? என்று கூறமுடியாது.

'இந்த மூன்று பொம்மைகளில் எது நல்லது?' என்று பீர்பாலைக் கேட்டார் பாதுஷா. பீர்பால் என்ன செய்தார்? ஒரு பொம்மையை எடுத்தார். அதன்காதில் ஒரு சிறிய கல்லைப் போட்டார். அது அடுத்த காதின் வழியாக வந்தது. உடனே அவர், 'பாதுஷாவே! இது நல்ல பொம்மையல்ல. இது ஒரு காது வழியாகக் கேட்டதை மறு காது வழியாக விட்டுவிடும்' என்றார்.

பிறகு, இரண்டாம் பொம்மையை எடுத்தார். அதன் காதில் ஒரு சிறு கல்லைப் போட்டார். அது அதன் வாயின் வழியாக வெளிவந்தது. அதைப்பார்த்து 'பாதுஷாவே! இந்தப் பொம்மையும் நல்ல பொம்மையல்ல. இது காதால் கேட்பதையெல்லாம் வாயால் சொல்லிவிடும்' என்றார்.

பிறகு,மூன்றாம் பொம்மையை எடுத்து அதன் காதில் ஒரு சிறு கல்லைப் போட்டார். அது அதன் வயிற்றுக்குள் போய்விட்டது. உடனே பீர்பால் 'பாதுஷாவே! இந்தப் பொம்மையே எல்லாவற்றிலும் சிறந்த பொம்மை. காதால் கேட்டதை எவரிடமும் சொல்லாது' என்றார்.

பீர்பாலின் அறிவை மெச்சினார் அக்பர் பாதுஷா. அவருக்குப் பல வெகுமதிகளும் கொடுத்தனுப்பினார். பொம்மைக்காரனுக்கும் பல்வேறு வெகுமதிகள் கொடுத்தனுப்பினார்.

## மூன்று கேள்விகள்

ஒரு நாள் பீர்பாலிடம் அக்பர் மூன்று கேள்விகளைக் கேட்டார்.

1. வெற்றிலை ஏன் அழுகியது?

2. குதிரை ஏன் இடக்குச் செய்தது?

3. ரொட்டி ஏன் கருகிவிட்டது?

—இவற்றுக்கு ஒரே வார்த்தையில் விடை வேண்டும் என்றார். பீர்பால் சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொன்னார்: 'திருப்பாமல்' என்று.

உடனே அக்பர் மகிழ்ச்சி அடைந்தார்.

## முதன்மையான பூ எது?

ஒரு நாள் அக்பர் தம் தர்பாரில் உட்கார்ந்துகொண்டு அங்கிருந்தோரைப் பார்த்து 'உலகிலுள்ள பூக்களில் எல்லாம் முதன்மையான பூ எது?' என்று கேட்டார். யாரும் வாயைத் திறக்கவில்லை. இறுதியாக பீர்பாலைப் பார்த்துக் கேட்டார். உடனே பீர்பால்,

'பாதுஷாவே! பூக்களில் எல்லாம் மேலான பூ எதுவென்றால் அது மக்களுக்கு உடை தயாரிக்கப்பயன்படும் பூ-பருத்திச் செடியின் பூவே!' என்றார்.

('ஆதாரம்: ஸையத் இப்ராஹீமின் 'அற்புதக் கதைகள்')

## சண்டை போட்டவர்கள் சாதனை படைத்தார்கள்

முரட்டுப் பையன் ஒருவன் தன்னைக் காட்டிலும் பலவீனாய் இருந்த ஒரு பையனை அடிக்கத் தொடங்கினான். அப்போது மற்றொரு சிறுவன் அந்த வழியாக வந்தான். அவனுக்கு அந்த முரடனைச் சமாளிக்கக் கூடிய அளவுக்குப் பலம் இல்லை. எனினும் முரடன் தன்னைக் காட்டிலும் பலவீனனை அடிக்கிறானே என்று கோபம் கொண்டான். பிறகு கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு அந்தச் சிறுவன் - முரடனிடம் போய், 'எத்தனை அடிகள் அவனுக்குக் கொடுக்கப் போகிறாய்?' என்று



கேட்டான். 'ஏனடா கேட்கிறாய், பயலே?' என்று முரடன் கூச்சலிட்டான். 'அவனுக்கு நீ கொடுக்க விரும்பும் அடிகளில் பாதியை எனக்குக் கொடுக்கலாம் என்பதற்காகத்தான் கேட்கிறேன்' என்றான் அந்தச் சிறுவன். முரடன் வெட்கமுற்றான்.

இப்படிப் பேசி முரடனின் உள்ளத்தை உருகச் செய்த பள்ளிச் சிறுவன்தான் பிற்காலத்தில் இங்கிலாந்தில் பெரிய கவிஞர்களில் ஒருவராய்த் திகழ்ந்த 'பைரன்' ஆவார். அடிபட்ட பள்ளிச் சிறுவனோ பின்னாளில் இங்கிலாந்தில் பிரதம மந்திரியாக விளங்கிய சர் ராபர்ட் பீல்.

த. சீ. பாலு

# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—*வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

TNSC·BANK/166




தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் தமிழ்நாடு பிரிவின் சார்பில் சென்னை சுத்திகரிப்பு ஆலைக்குத் தொழிற்சாலைப் பாதுகாப்புக் கான விருதை, மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள், நிறுவனத் தலைவர் திரு தீனதயாளு அவர்களிடம் 23.2.87 அன்று வழங்கினார்.

# படமும் செய்தியும்




அண்ணா பல்கலைக் கழகத்தின் ஏழாவது பட்டமளிப்பு விழாவில் (24.2.87) ஐக்கிய நாடுகளின் குடியமைப்பு நிறுவன சார்புச் செயலரும், செயல் இயக்குநருமான திரு ஆர்க்காடு இராமச் சந்திரன் அவர்களுக்கு மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கினார்.

செவிலியர் சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்று செவிலியர்க்கு ஊதிய உயர்வு அளித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை, செவிலியர் சங்கத்தினர் 24.2.87 அன்று சந்தித்து நன்றி தெரிவித்தனர்.



# முந்திரி - முறையான சாகுபடி

பிரேசில் நாட்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்ச்சுகீசியர்களால் மண் அரிப்பைத் தடுப்பதற்காக அறிமுகப் படுத்தப்பட்ட முந்திரி இன்று, இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் முக்கியத் தோட்டப்பயிர்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்தியாவைத் தவிர மொசாம்பிக், டான்சானியா, கென்யா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளில் முந்திரி அதிகமாகச் சாகுபடியாகிறது.

உலகின் மொத்த முந்திரி உற்பத்தி 5.87 லட்சம் டன்களாகும். இதில் இந்தியா, மொசாம்பிக், டான்சானியா மற்றும் பிரேசில் நாடுகள் முறையே 42, 34,14, மற்றும் 4.4 சதவீதம் உற்பத்தி செய்கின்றன. கி.பி.1990-ஆம் ஆண்டில் முந்திரியின் உலகத் தேவை அளவானது சுமார் 7,34,000 டன்களாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் 4,51,900 எக்டேர் பரப்பில் பயிர்செய்யப்பட்டு ஆண்டில் 1,37,600 டன் முந்திரிக் கொட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. கேரளா தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஒரிசா மற்றும் கோவா மாநிலங்களில் முந்திரி அதிகம் பயிர்செய்யப்படுகிறது. முந்திரி ஏற்றுமதியின் மூலம் 148 கோடி ரூபாய் அன்னிய செலாவணியாக கிடைக்கிறது. மேலும், 548க்கு மேல் உள்ள பதனிடும் ஆலைகள் மூலமாகக் கிட்டத்தட்ட 2,35,000 மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது.

ஏற்றுமதியில் இந்தியா பிரதான இடத்தை வகித்து வந்த போதிலும் முந்திரிக் கொட்டைகள் உற்பத்தியானது, முந்திரி பதனிடும் ஆலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு இல்லை. ஏனென்றால் கிட்டத்தட்ட 4.5 லட்சம் டன் பதனிடும் கொட்டைகள் ஆலைகளுக்குத் தேவைப்படுகிறது. மீதமுள்ள 3 லட்சம் டன் கொட்டைகளை அதிகமாக கென்யா, டான்சானியா, மற்றும் மொசாம்பிக் போன்ற நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டியுள்ளது.

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளான டான்சானியா, மொசாம்பிக் ஆகிய நாடுகளில், முந்திரி பதனிடும் தொழிற்சாலைகள் அதிக அளவில் பெருகிவிட்டதாலும், புதிதாக சைனா மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் முந்திரி ஏற்றுமதி செய்யும் நாடுகளாக உலக அரங்கில் நுழைந்துவிட்ட காரணத்தினாலும், இந்தியாவின் முந்திரிக் கொட்டைகள் இறக்குமதி மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. எனவே நமக்குத் தேவையான கொட்டைகளை நமக்கு நாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருந்து வருகிறோம். ஆகையினால், குறுகிய காலத்திலேயே முந்திரி உற்பத்தியை முடிந்த அளவிற்கு அதிகரிப்பதற்கான திட்டங்களை உருவாக்குதல் மிகவும் அவசியமாகிறது. அதிகப்படியாக சுமார் 1.71 லட்சம் எக்டேர் நிலத்தை முந்திரி சாகுபடியின் கீழ் கொண்டு வரத்திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முந்திரியானது 97,000 எக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு 11,500 டன் கொட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றில் சுமார் 15 சதவீத உற்பத்தி வனக் காடுகளிலிருந்து கிடைக்கிறது. நாட்டின் முந்திரிச் சாகுபடியில் பரப்பளவு மற்றும் உற்பத்தியில் தமிழ்நாடு முறையே இரண்டாவது மற்றும் நான்காவதுஇடத்தை வகிக்கிறது. தென்னார்க்காடு திருச்சி, தஞ்சாவூர், ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அதிகம் பயிர் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டின் உற்பத்தித்திறன் எக்டேருக்கு 126 கிலோ ஆகும். இது முறையே கேரளம் மற்றும் நாட்டின் உற்பத்தித் திறன் அளவுகளான 1,060 மற்றும் 385 கிலோவை விட மிகவும் குறைவு. தமிழ்நாட்டில் அதிகப்படியான சுமார் 18,000 எக்டேர் நிலங்களை முந்திரிச்சாகுபடியின் கீழ் கொண்டு வர வாய்ப்பு உள்ளது.

**வெ. அசோக் மேத்தா,**

**பா. நயினார்,**

**ஆர். சுந்தரராஜன்,**

**வேளாண் அறிவியல் நிலையம்**
**விருத்தாசலம்.**

### சீதோஷ்ணம்

முந்திரி வெப்ப நாடுகளில் விளையும் பயிராகும். அதிகமான பனி மற்றும் கடுமையான குளிர் தவிர, மற்ற எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் வளரும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 700 மீ.வரை உயரம் உள்ள இடங்களிலும் வளரக் கூடியது. ஆண்டுக்கு 50 செ.மீ. அளவு மழை தேவைப்பட்டாலும், சுமார் 30 செ.மீ. முதல் 40 செ.மீ மழை கிடைக்கக்கூடிய பிரதேசங்களிலும் நன்கு வளர்கிறது.

### மண்வகை

பல தரப்பட்ட மண்வகைகளிலும் முந்திரி வளரக்கூடிய பயிராக இருந்தாலும் செம்மண் பூமியிலும் மற்றும் கடலோர மணற்பாங்கான நிலத்திலும் நன்கு செழித்து வளர்கிறது. அதிக அளவு களிமண் உள்ள பூமி இதற்கு ஏற்றதல்ல.

### மரத்தின் தன்மை மற்றும் அமைப்பு

முந்திரி தாழ்ந்து படர்ந்து வளரக்கூடிய மரமாகும். இதில் இரண்டு வகையான கிளை அமைப்புகள் உள்ளன. ஒன்று தீவிர கிளைத்தன்மை. மற்றொன்று மிதமான கிளைத் தன்மை. இதில் தீவிர கிளைத் தன்மையில், கிளையானது சுமார் 25 முதல் 30 செ.மீ. நீளமிருக்கும். இவை ஒவ்வொன்றுமே ஒரு பூங்கொத்தில் முடிவடையும். அதே நேரத்தில், மூன்று முதல் எட்டு வரையிலான பக்கக் கிளைகள், நுனியிலிருந்து 10 முதல் 15 செ.மீ. தூரத்தில் உருவாகி இவைகளும் ஒரு பூங்கொத்திலேயே முடிவடையும். இப்படியாக, அடுக்கடுக்காக இதே போன்ற கிளைத்தன்மை உருவாகி மரத்திற்கு ஒரு அடர்த்தியான தோற்றத்தைக் கொடுக்கும். இதில் எல்லாக் கிளைகளும் பூங் கொத்துக்களில் முடிவடைவதால். அதிக மான மகசூல் அளிக்கின்ற மரங்களில் ,இந்த வகையான தீவிர கிளை அமைப்பு அதிகம் காணப்படுகிறது.

மிதமான கிளை அமைப்புத் தன்மையில், கிளையானது சுமார் 20 முதல் 30 செ.மீ. நீளம் வளர்ந்து அப்படியே முடிவடைகிறது. அதாவது இந்தக் கிளைகளின் நுனியில் பூங்கொத்துக்கள் தோன்றுவதில்லை. நுனியில் இருந்து 5 முதல் 8 செ.மீ நீளத்திற்குக் கீழ் தோன்றும் பக்கக் கிளைகளும்இதேபோல்வளர்ந்து, பூக்காமல் அப்படியே முடிவடைகிறது.இம்மாதிரி அடுக்கடுக்காகக்



1. மரங்கள் அடர்ந்து, படர்ந்ததாகவும், அதிக அளவு தீவிர கிளையமைப்புத் தன்மை கொண்டதாகவும் இருத்தல்.

2. குறுகிய இளம்பருவம் மற்றும் பூக்கும் காலம்

3. அதிக அளவு இருபால் பூக்கள் மற்றும் அதிக சதவீத கொட்டை பிடிக்கும் தன்மை.

4. கொத்து ஒன்றுக்கு 4 அல்லது 6-க்கு மேற்பட்ட கொட்டைகள். மெல்லிய தோலுடைய கொட்டைகளுடன் இருத்தல்.

5. மரமொன்றுக்கு ஆண்டொன்றுக்கு 15 கிலோ பச்சைக் கொட்டைகளை மகசூலாய்க் கொடுத்தல்.

6. தாய் மர வயது 10 முதல் 25 ஆண்டுகளாக இருத்தல்.

கிளைகள் தோன்றி, இவை அனைத்துமே, பூக்காமல், ஒரு விதமான படர்தன்மையை மட்டும் மரத்திற்குக் கொடுக்கிறது.

இம்மாதிரி, இரண்டு வகையான கிளை அமைப்புகளுமே ஒரே மரத்தில் தென்பட்ட போதிலும், ஏதாவது ஒன்று மற்றொன்றை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதால், அதற்கேற்றாற்போல் மரத்தின் மகசூல் தன்மையும் வேறுபடுகிறது. அதாவது, அதிக மகசூல் தருகின்ற மரத்தில் சுமார் 60 சதவீதம் தீவிர கிளை அமைப்புத் தன்மையும், குறைந்த மகசூலைத் தருகின்ற மரத்தில், 20 சதவீத தீவிர கிளை அமைப்பு தன்மையும் காணப்படுகிறது.

**பூத்தல்**

சாதாரணமாக முந்திரி மரங்கள் 3 ஆண்டுகளில் பூக்க ஆரம்பிக்கிறது. அக்டோபர் மாத மத்தியிலிருந்து மார்ச் மாதம் வரை பூக்கும் பருவம் ஆகும். பூங்கொத்துகளில் இரு வகையான பூக்கள் கானப்படுகின்றன. 14 முதல் 21 செ.மீ நீளம் உள்ள பூக்கொத்துக்களில் 90 சதவீதம் ஆண் பூவும் 10 சதவீதம் இருபால் பூக்களும் உள்ளன. இந்த இருபால் பூக்களிலும், மிகக்குறைவான அளவே, அதாவது 9-10 சதவீதம் மட்டும்தான் கொட்டையாக மாறுகின்றது. மீதி பூக்கள் உதிர்ந்துவிடுகின்றன.

**இரகங்கள் : வி.ஆர்.ஐ-1:**

இந்த ரகம் 1981-ஆம் ஆண்டு, மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலத்திலிருந்து வெளியிடப்பட்டது. கடலூர் வட்டத்திலுள்ள வழிசோதனைப்பாளையம் என்னும் கிராமத்திலிருந்து, தனி ரகத் தேர்வின் மூலம் உருவாக்சப்பட்டது ஆகும். இது 14.6 சதவீதம் இருபால் பூக்களும், 28 சதவீதம் உடைப்புத்திறனும் கொண்டது. நூறு கொட்டைகளின் எடை 500 கிராம் ஆகும். இது மூன்றாண்டுகளில் மகசூலுக்கு வருகிறது. எக்டேருக்கு 1400 கிலோ கொட்டைகளைத் தரவல்லது.

**வி.ஆர்.ஐ.2**

இந்த ரகம் 1985-ஆம் ஆண்டு விருத்தாச்சலம் மண்டல ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டது. இது, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டுப்பள்ளி என்னும் கிராமத்திலிருந்து தனிமரத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ரகமாகும். 9.6 சதவீதம் இருபால் பூக்களையும், 28.5 சதவீதம் உடைப்புத் திறனும் கொண்டது. நூறு கொட்டைகளின் எடை 512 கிராம் ஆகும். இந்த ரகமானது ஓரளவிற்கு வறட்சியையும், தேயிலை கொசுவின் தாக்குதலையும் தாங்கக்கூடியது.

வி.ஆர்.ஐ-1 ரகத்தை விட 14.2 சதவீதம் அதிக மகசூல் தரவல்லது. எக்டேருக்கு 1690 கிலோ கொட்டைகளைக் கொடுக்கும்.

**பயிர்ப் பெருக்கம்:**

1. விதை வழிப் பெருக்கம்:

**தாய்மரத் தேர்வு:**

கீழ்க்கண்ட குணாதிசயங்களுடன் ஆண்டு தோறும் தொடர்ந்து அதிக மகசூல் தரவல்ல தாய் மரங்களிலிருந்து விதைகளைச் சேகரிக்க வேண்டும்.

**விதைகளைச் சேகரித்தல்**

மார்ச் - ஏப்ரல் மாதங்களில் அறுவடை செய்த கொட்டைகளை, அதே ஆண்டு ஜூன் மாதம் விதைப்பிற்குச்சேகரித்துக் கொள்ள வேண்டும். சேகரித்த கொட்டைகளை 2-3 நாட்கள், நன்கு வெய்யிலில் உலர்த்த வேண்டும். பின்னர் கொட்டைகளைச் சுமார் 12 மணிநேரம் ஒரு வாளி தண்ணீரில் ஊறவைத்து. மிதக்கின்ற கொட்டைகளை நீக்கிடவேண்டும். நீரில் அமுங்கும் விதைகளை மட்டும் விதைப்பிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். விதைகள் 6 முதல் 8 மாதங்களில் முளைப்புத் தன்மையை இழந்து விடுவதால், அதற்கு முன்னரே பயன்படுத்த வேண்டும்.

**விதைத்தல்**

ஒரு எக்டேர் நடவு செய்வதற்கு 2 கிலோ கொட்டைகள் தேவைப்படும். பாலிதீன் பைகளில் சம அளவுடன் மக்கியஉரம், மணல், செம்மண் கலவை நிரப்பிக் கொண்டு, கொட்டைகளைக் காம்புப் பகுதி மேல் நோக்கியிருக்கும்படி வைத்து 2.5 செ.மீட்டர் ஆழத்தில் ஊன்ற வேண்டும். விதைப்பதற்கு முன் முளைப்புத் திறனை அதிகரிப்பதற்காக, விதைகளை சாணக்கரைசலில் முந்திய இரவு முழுவதும் ஊற வைத்து நடுவதும் நல்லது. விதைகள் 10-15 நாட்களில் முளைக்கும். 45-60 நாட்களில் நடவு செய்யலாம். ஜூலை - ஆகஸ்ட் மாதங்கள் நடவுக்கு ஏற்ற காலம்.

## விதையில்லாப் பெருக்கம்

விண்பதியன்கள்:

விண்பதியன்கள் தயாரிப்பதற்கு ஜூலை முதல் அக்டோபர் வரையிலான காலம் ஏற்றது. நன்கு காய்க்கும் தன்மையுள்ள தாய் மரங்களின் நுனிக் கிளைகளில், பென்சில், பருமனுள்ள ஓர் ஆண்டு வயதுள்ள குச்சிகளைத் தேர்ந்தெடுத்து 2.5 செ.மீ.நீளத்தில் மேல் பட்டையை வளையமாக வெட்டி எடுத்துவிட்டு, அவ்விடத்தில் மலைப்பாசி, அல்லது மரத்தூள் ஆகியவற்றை வைத்து, பாலிதீன் காகிதத்தால் நன்கு சுற்றி, இரு முனைகளிலும் இறுக்கமாகக் கட்ட வேண்டும். சீதோஷ்ண நிலையைப்பொறுத்து 60-80 நாட்களில் வேர்கள் காயம்பட்ட இடத்திலிருந்து தோன்றும். பதியன்களை 90 நாட்களில் வெட்டி எடுத்து நடலாம். பதியன்களை வெட்டும் போது, வேர்களுக்கு அதிர்ச்சி ஏற்படாமலிருக்க ஒருவார இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று தவணைகளில் சிறிது சிறிதாக வெட்டி, பின்னர் பிரித்து எடுக்க வேண்டும். இலைவழி நீர் இழப்பைக் குறைக்க,பதியன்களில் இலைகளைப் பாதியாக வெட்டி விட வேண்டும். பதியன்களை உடனடியாகக் குழிகளில் நடவு செய்யாமல், 3 வாரம் பாலிதீன் பைகளில் நட்டு வைத்திருந்து பின்னர் குழிகளில் நடலாம்.

## பட்டை ஒட்டுமுறை

ஓராண்டு வயதுள்ள கன்றுகளில், 2 செ.மீ. நீளமும், ஒரு செ.மீ அகலமும் உள்ள நீண்ட சதுர வடிவில் பட்டையை வெட்டியெடுத்துவிட்டு, அதே அளவில், நன்கு காய்க்கும் பண்புடைய மரத்திலிருந்து, குருத்துடன் கூடிய பட்டையை வெட்டிக் கொண்டு வந்து, சேர்த்துக் கட்டிவிட வேண்டும். அந்தப் பட்டைஒட்டிக்கொண்டு, குருத்திலிருந்து வளர்ச்சி தோன்றியவுடன், அடிக்கன்றின் மேல் பாகத்தை இரு தவணைகளில் வெட்டி எடுக்க வேண்டும். இதைச் செய்வதற்குச் சிறந்த காலம் ஜூலை முதல் அக்டோபர் வரையாகும்.

## கன்று ஒட்டுமுறை

10 நாட்கள் வயதுடைய, கொட்டைகள் மூலம் உருவான கன்றுகளில் விதை இலையிலிருந்து 4-5 செ.மீ. மேலே வெட்டி விட வேண்டும். பின்னர், தண்டின் மத்தியிலிருந்து 2-3 செ.மீ. ஆழம் வரை இரண்டாகப் பிளக்குமாறு வெட்ட வேண்டும். 10 செ.மீ. நீளத்தில் நன்கு காய்க்கும் தாய் மரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, 4 மாத வயதுடைய கிளைக் குச்சிகளை இருபுறமும் சாய்வாக, ஈட்டி போல் கூர்மையாகச் சீவி விட வேண்டும். இதை முன்னர் தயார் செய்தகன்றின் பிளவில் சரியாகப் பொருந்துமாறு செருகிவிட்டு, பாலிதீன் இழைகளால் நன்கு கட்டி விட வேண்டும். இந்த ஒட்டுக் கன்றுகளை நிழலில் பாதுகாத்து வரவேண்டும். சுமார் 3 வாரங்களில் நிலையான ஒட்டு ஏற்பட்டவுடன், நுனியிலிருக்கும் குருத்து முளைக்க ஆரம்பிக்கும். இதையும் ஜூலை முதல் அக்டோபர் மாதம் வரை செய்யலாம்.



# தமிழ்நாட்டில் முந்திரி

**முந்திரி தமிழ்நாட்டில் மொத்தம் 24545 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்படுகிறது. முந்திரி விளைச்சல் மூலம் 1985-86 ஆம் ஆண்டில் அரசுக்கு வருவாய் ரூ. 1.55 கோடி கிடைத்துள்ளது. முன்னர் இந்த வருவாய் ரூ. 1.2 கோடியாக இருந்தது.**

## நாற்றங்கால் பராமரிப்பு

நாற்றங்காலில் முந்திரியைத் தாக்கும் நோய்களில், நாற்று அழுகல் நோய் மிகவும் முக்கியமானது ஆகும். இதனைக் கட்டுப்படுத்த பைட்டலான் கரைசல் (2 கிராம் 1 லிட்டர் தண்ணீர்) அல்லது ஒரு சதவீத பேர்டோ கலவை உபயோகப்படுத்தலாம். இலைப்புள்ளிநோய்களுக்கும்,ஒரு சதவீத போர்டோ கலவையை நாற்றங்காலில் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

## நடவு

நிலத்தை நன்கு உழுத பின், 7 மீட்டருக்கு 7 மீட்டர் என்ற இடைவெளியில் 45 x 45 x 45 செ.மீ. அளவுள்ள குழிகளை, நடவு செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே தோண்டி அதில் 15 நாட்கள் கழித்து 10 கிலோ தொழுஉரத்தை மேல் மண்ணுடன் கலந்து நிரப்ப வேண்டும். இக்குழிகளில் நாற்றுக்களை ஆகஸ்டு - செப்டம்பர் மாதங்களில் இடவேண்டும்.

## உரமும் உரமிடுதலும்

நட்ட ஒரு ஆண்டு கழித்து முறையாக ஆரம்பிக்க வேண்டும்.

மரத்தின் வயதிற்கேற்ப உரங்களை மக்கிய தொழுஉரத்துடன் கலந்து அக்டோபர் - நவம்பர் மாதங்களில் இட வேண்டும். மரத்தின் இலைகள் படந்து முடியும் விளிம்புகளுக்கு நேர் கீழே, நிலத்தில் வட்டமாக 15 செ.மீ. ஆழமும், 30 செ.மீ.அகலமும் உள்ள குழிதோண்டி, உரத்தை சீராகத்தூவி,மண்ணால் மூடிவிடவேண்டும்.

## நீர்பாய்ச்சுதல்

முந்திரியை மானாவாரியாகப் பயிர் செய்தாலும் வசதி உள்ள இடங்களில் கோடையில் நீர் பாய்ச்சுதல் நலம்.

## களை எடுத்தல்

பருவமழைக்குப் பின்னர், நிலத்தை உழுதல் அவசியம், மரத்தைச்சுற்றியுள்ளபகுதிகளில் மண்வெட்டி கொண்டு கொத்தி விடுவதால், களைகளைக் கட்டுப்படுத்துவதோடு அறுவடை செய்யும்போது கொட்டைகளைப் பொறுக்குவதற்கு மிகவும் ஏதுவாக இருக்கும்.

## கவாத்து செய்தல்

முந்திரியில் முறையான கவாத்து வேலையில்லையெனினும் அவ்வப்போது, காய்ந்த அல்லது பின்னிப் பிணைந்து செல்லும் கிளைகளை வெட்டி விடுதல் நலம். இதனால் சூரிய வெளிச்சம் மரத்தினூடே ஊடுருவிப் பாய வழி ஏற்படுகிறது.

## அதிகக் காய்பிடிக்க

கொட்டை பிடிக்கும் தன்மையை அதிகரிக்க, 2-4-டி என்னும் பயிர் ஊக்கியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 மி.கிராம் என்ற அளவில் கலந்து, பூக்கும் சமயம் மற்றும் கொட்டைபிடிக்கும் சமயம் ஆகிய இரண்டு கட்டங்களில் தெளித்தல் வேண்டும். இதன் மூலம் மரமொன்றுக்கு சுமார் 3 கிலோ அதிகக் கொட்டைகள் பெற முடியும்.

## ஊடுபயிர்கள்

ஊடுபயிராக மணிலா, தட்டைப் பயிறு, உளுந்து, பாசிப் பயிறு முதலியன பயிர் செய்து கூடுதல்வருவாய் பெறலாம்.



# தமிழறிஞர்

# பெரியசாமித் தூரன்

**—எம். இராசகோபாலன்**

**தமிழறிஞரும், கவிஞருமான திரு ம. ப. பெரியசாமித்தூரன் அவர்கள் தமிழ்க்கலைக் களஞ்சியம், குழந்தைகள் கலைக்களஞ்சியம் ஆகியவற்றின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியவர்.**

**பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் நிறைய நூல்களை எழுதியுள்ளார். தமிழிசை இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட இவர், கீர்த்தனைகள் பலவற்றையும் இயற்றியுள்ளார். 'இசைப் பேரறிஞர்' விருது பெற்றவர். திரைப்படத் தணிக்கைக்குழு, வானொலி ஆலோசனைக்குழு, பாடநூல் தேர்வுக்குழு முதலானவற்றில் அங்கம் வகித்திருக்கிறார். 1968ஆம் ஆண்டு மத்திய அரசு 'பத்மபூஷண்' விருது வழங்கிச் சிறப்பித்தது.**

**பெரியார் மாவட்டம் ஈரோட்டுக்கு அருகில் மஞ்சக்காட்டு வலசு கிராமத்தில் 1908ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் நாள் பிறந்த இவர், 20.1.87இல் காலமானார்.**

**அவரோடு நெருங்கிப் பழகிய அவர் நண்பர் திரு எம். இராசகோபாலன் அவர்கள், அன்னாரைப் பற்றி இங்கே நினைவு கூருகிறார்:**

ஈரோடு மகாசன உயர்நிலைப் பள்ளியில் ம.ப.பெரியசாமித் தூரனும் நானும் ஒன்றாகப் படித்தோம். வகுப்புகளில் முன் பலகையில் நாங்களிருவரும் சேர்ந்து உட்கார்ந்திருப்போம். அக்காலத்தில் தூரன் என்னுடன் நெருங்கிப் பழகுவார்.

தனது அறையில் அம்பாள் படம் வைத்து ஊதுவத்தி கொளுத்தி வைத்து, தியானம் செய்வார். இளமையிலேயே ஆழ்ந்த தெய்வ பக்தியுடையவர். அத்தகைய இறையருளால் பிற்காலத்தில், 'சாம கான ப்ரியே அம்பா! சர்வலோக நாயகியே!' என்ற கீர்த்தனை பாடியுள்ளார்.

எப்பொழுதும் சிந்தனை செய்து கொண்டிருப்பார். தன் சிந்தனைகளில் உதிக்கும் கருத்துக்களை உடனுக்குடன் ஒரு சிறிய தாளில் குறித்து வைத்துக் கொண்டு பிற்பாடு தன் நோட்டுப் புத்தகத்தில் வரிசைப்பட எழுதி வைத்துக் கொள்வார்.

ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் பாடமாக வைத்திருந்த டாக்டர் சரோஜினிதேவியின் (பேலங்குயின் பேரர்ஸ்) அரசு பல்லக்கு சுமப்போர் என்ற கவியைத் தமிழில் மொழிபெயர்த்து, பொருள், சொல், இலக்கணத்துடன் எழுதினார். தமிழ்க் கட்டுரைப் போட்டியில் ஒவ்வொரு ஆண்டும் கலந்து கொண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து முதற் பரிசு பெற்றார். 1926ல் பாரதியார் பற்றிய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்றார். அப்பரிசை சர்.ஆர்.கே.சண்முகம்செட்டியார் வழங்கினார்.

நாங்களிருவரும் கணக்குப் பாடம். விருப்பப் பாடமாக எடுத்திருந்தோம். அதில் எஸ். எஸ். எல். சி. தேர்வில் இருவரும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கிப் பரிசும் பெற்றோம். கல்லூரியிலும் கணக்குத்தான் எங்கள் விருப்பப்பாடம். 1926ல் பல்கலைக் கழகப் படிப்பில் தமிழ் கட்டாயப்பாடமாக்கப்பட்டது. நாங்கள் கல்லூரியில் சேரும் ஆண்டில்தான் தமிழ்க் கட்டாயப் பாடம் பிரிவு இரண்டு என்ஆக்கப்பட்டது தமிழில்ஆர்வம் கொண்ட தூரனுக்குப் பெருமகிழ்ச்சி.

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது மாலை நேரங்களில் நாங்களிருவரும் காவிரிக் கரையோரம் உலாவச் செல்வோம். அப்போது தூரன் கவிதை புனைவார். அவற்றுள் சிறந்தவைகளாக வெளியிடப்பட்டவை. 'காவிரி' 'இளந் தமிழா' என்பவைகள்.

1922ல் தந்தை பெரியாருடன் காங்கிரஸ் தொண்டரானார். காந்திஜி ஈரோடு வந்தபோது அவரை நேரில் கண்டு வணங்கினார். மாலைக் கூட்டத்தில் அந்நியத் துணிகள் எரிப்பில் அந்நியத் துணிகளைத் தூரன் கொண்டு வந்து தீயிலிட்டார். காந்திஜி அன்றே கோவை சென்று விட்டார். தூரன் ரயிலடிக்குச் சென்று கூட்டத்துடன் கலந்து கொண்டு வழியனுப்பி வைத்தார். அன்று முதல் கதராடையே உடுத்தி வந்தார். எப்போதும் வெண்ணிற ஆடையே உடுத்துவார்.

பள்ளியில் பயிலும் போது குடுமி வைத்திருந்தார். பள்ளிக்கு வரும்போது நெற்றியில் திருநீறு அணிந்திருப்பார். எந்த மாணவரிடமும் காட்டாத நட்பை என்னிடம் அதிகமாகக் கொண்டிருந்தார்.

கல்லூரியில் படிக்கும்போது ''பித்தன்'' என்ற மாணவர் பத்திரிகை நடத்தினார். அதன் பிரதிகள் பல இன்றும், நமது முன்னாள் துணைவேந்தர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்களிடமிருப்பதாக எனக்குச் சென்ற ஆண்டு கடிதம் எழுதியிருந்தார்.

அவர் யான், எனது என்ற செருக்கறுத்த செம்மல், மனத்துக்கண் மாசிலன். மஞ்சகாட்டு வலசு பெரியசாமி என அழைப்பர். மஞ்சகாட்டுவலசு ஈரோடு பக்கம் ஓர் சிறிய கிராமம். தூரன் என்பது அவருடைய குடும்பத்தின் பரம்பரைப் பெயர்.

---

**அறமே ஆற்றல் என்று நம்புவோமாக. அந்த நம்பிக்கையுடன் நாம் அறிந்த கடமையை ஆற்றத் துணிவோமாக.**

**—ஆப்ரகாம்லிங்கன்**



# பொறியாளர்க்கு அண்ணா விருது

அரசின் காவல்துறை போன்ற சில துறைகளில் சிறப்பான சேவை செய்தோர்க்குப் பேரறிஞர் அண்ணா விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. அதுபோன்று பொதுப் பணித்துறையில் சிறப்பாகப் பணி புரிந்த 15 பொறியாளர்களுக்கு இவ்வாண்டு முதல் பேரறிஞர் அண்ணா விருது வழங்க முடிவு செய்யப்பட்டது.

இவ்விருது ஒவ்வொருஆண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் அன்று பொது நிகழ்ச்சி ஒன்றில் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கிடையே 1985-86-ஆம் ஆண்டிற்கானபேரறிஞர்அண்ணா விருது வழங்கும் விழா 27-1-'87 அன்று சென்னையில் நடைபெற்றது.

பொதுப்பணித்துறையில் பாசனப்பிரிவு, கட்டடப் பிரிவு, நிலநீர்ப்பிரிவு, ஆய்வுப் பிரிவு, மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் சிறப்பாகப் பணிபுரிந்த செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் 15 பேருக்குப் பேரறிஞர் அண்ணா விருதினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

**விருதுபெற்றோர்**

### திரு எம். பாலகிருஷ்ணன்

இராமநாதபுரம் முப்பிரிவு தனிக் கட்டட கோட்டத்தின் செயற்பொறியாளர் திரு எம். பாலகிருஷ்ணன். இவர்சிவகங்கையில் மாவட்ட அலுவலகங்களைக் கட்டும் பணியில் திறம்படப் பணியாற்றி, விரைந்து கட்டி முடித்து அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு வாடகைப் பணமாகச் செலவாகும் தொகையான ரூ. 3 இலட்சத்தை மிச்சப்படுத்தி உள்ளார். கட்டடப்பொருட்களை சேமிக்கும் திறன், சிக்கனமாகச் செலவிட்டு 20 சதவீத சேமிப்பு காட்டிய திறன், அரசு நிதி ஒதுக்கீடான சுமார் ரூ 1.5 கோடிக்குக் குறைவின்றி செலவு செய்து ஒரே ஆண்டில் அரசுக் கட்டடங்கள் பலவற்றை விரைவில் முடித்தவர்.

### திரு மோ. பால்தாஸ்

கட்டடங்களுக்கு வடிவமைப்புப் பிரிவில் ஆற்றல்மிக்க திரு மோ. பால்தாஸ் சென்னையில், திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்ட உதவி செயற்பொறியாளர். மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது அவருக்காக அமைக்கப்பட்ட குண்டு துளைக்காத, கடைக்கால் இல்லாத மேடைக்கான வடிவமைப்பு, மதுரை மருத்துவக் கல்லூரி வெள்ளி விழா கட்டடத்திற்கான தூண் இல்லாத நீண்ட கூரைக்கான வடிவமைப்புப் போன்றவை இவரின் திறமைக்குச் சான்றாகும். பிரமிடல் கட்டடம், போல் பிளேட் கட்டடம், சேலம் அச்சுக் கட்டடம் இவற்றிற்கு, இவர் சிறப்பு வடிவமைப்புகளைத் தந்துள்ளார். கான்கிரீட் துணை வடிவமைப்புக்குப் புதுமாதிரி வடிவை வரையறுத்துத் தந்துள்ளார்.

### திரு இரா. சுப்பிரமணியன்

சிறப்பாகச் செயலாற்றிக் கட்டட வேலைகளைக் குறித்த காலத்திற்கு முன்னரே கட்டி முடித்து, பிறதுறையினரின் பாராட்டைப் பெற்றவர் திரு இரா. சுப்பிரமணியன். மதுரை சிறப்புக் கட்டட வட்டத்தில் பணிபுரியும் இவரது திறமைக்கு ரூ. 37.51 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றக்கட்டடம், ரூ. 28.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட திண்டுக்கல் கருவூலக் கட்டடம் சான்றுகளாகும். திண்டுக்கல் மாவட்ட ஆயுதப்படைக் காவலருக்கான குடியிருப்புகள் மற்றும் அலுவலகக் கட்டடப் பணிக்கான மதிப்பீட்டை ரூ. 1.65 கோடிக்கு இவர் தயாரித்து அது அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### திரு எம். சேவியர் துரைராஜ்

இந்திய எல்லையைப் பாதுகாக்க சாலைகள் போடும் பணிக்காக இந்தியப் பாதுகாப்புப்பணியில் 1966 முதல் 1970 வரை சிறப்பாகப் பணியாற்றியவர் திரு எம். சேவியர் துரைராஜ். தற்போது காஞ்சீபுரம் கோட்டத்தில் செயற்பொறியாளராகப் பணியாற்றும் இவர் கடந்த ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும் போது 928 ஏரிகளையும் 293 அரசு கட்டடங்களையும் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுத்தார். ஒரு கோட்ட அளவில் ஒரே ஆண்டில் ரூ. 50.16 இலட்சத்திற்குக் கட்டடப் பணிகளையும், ரூ.263.51 இலட்சத்திற்குப் பாசன வேலைகளையும் செம்மையாகச் செயல்படுத்தி நிதி ஒதுக்கீட்டை 100 சதவிதம் எய்தினார்.

மதுராந்தகம் ஏரியினையும் மக்களையும் பாதுகாத்து அந்த ஏரிக்குப் புதிய கலுங்கல் கட்டடத்தை 7 மாதத்திற்குள் கட்டி முடித்துச் சாதனை புரிந்தார்.

### திரு மு. தீனதயாளன்

தலைமைப் பொறியாளர் (பாசனம்) அலுவலகத்தில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசன திட்டங்களின் வடிவமைப்பினை ஆய்வு செய்து பெரியாறு அணை, கொடகனாறு அணை, வைகைக் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டம் ஆணைக் குட்டம், கோல்வார் பட்டி ஆகிய திட்டங்களில் சில சிக்கன நடவடிக்கைக்கு வழி வகுத்தவர் உதவி செயற்பொறியாளர் திரு மு. தீனதயாளன்.

### திரு எஸ். கல்யாணராமன்

இராமநாதபுரம், புதுக் கோட்டை, மதுரை மாவட்டங்

களில் உள்ள கண்மாய்களை ஆய்வு செய்து சீரமைக்கக் கண்மாய்த் தகுதி நிர்ணய கோட்பாடுகள் தயாரிக்கும் பணியினைச் செவ்வனே செய்து முடித்தவர், காரைக்குடி கண்மாய்ச் சீரமைப்புத் திட்டக் கோட்டச் செயற்பொறியாளர் திரு எஸ். கல்யாணராமன். இவர் 1983-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளைச் சிறப்பாகச் செய்துள்ளார். அக்டோபர் 1985 முதல் இக்கோட்டம் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் 10 திட்டங்களை ரூ. 231.26 இலட்சத்திற்கான மதிப்பீடுகளுடன் தயாரித்துள்ளது.

## விருதுநகர் ஆய்வு உட்கோட்டம்

விருதுநகர் ஆய்வு உட்கோட்டம் காமராஜர் மாவட்டத்தில் புதிய கண்மாய்கள் அமைக்கும் திட்டம், அணைக்கட்டுகள் கட்டும் திட்டம், ஐரோப்பியப் பொருளாதாரத் திட்டம் எனப் பல ஆய்வுத் திட்டங்களை ஆய்வு செய்து மதிப்பீடுகள் சுமார் ரூ. 2.75 கோடி அளவுக்கு அளித்துச் சாதனை புரிந்துள்ளது. இந்த உட்கோட்டத்திற்கு ஒரு ஈப்பு கூட இல்லாமல் இருந்தும் சிறப்பாகச் செயலாற்றி இலக்குக்கு அதிகமாகவே மதிப்பீடுகள் கொடுத்துள்ளமையால் இந்த உட்கோட்டத்தின் உதவிச்செயற் பொறியாளருக்கு அண்ணாவிருது வழங்கப்பட்டது. மேலும் இந்த உட்கோட்டத்தின், திருவாளர்கள் சு. இராஜபதி, எம். ரெங்கராஜன், அ. காசி, ஐ. ஐயர்தேவர் ஆகிய இளம்பொறியாளர் நால்வருக்கும் அண்ணா விருது பகிர்ந்தளிக்கப்பட்டது.

## திரு கோ.கணபதி சுப்பிரமணியன்

தரமணி நீர் ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பொறியாளர் திரு. கோ. கணபதி சுப்பிரமணியன். நீரியல், நீர்நிலையியல் ஆகியவை பற்றி 13 ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். பல்வேறு ஆராய்ச்சிக் கருத்தரங்குகளில் பங்குகொண்டுள்ளார். அணைகளில் வண்டல் படியும் அளவையும் அணைகளில் வெள்ளப் போக்கிகள் மூலமாகச் செல்லும் நீரின் மதிப்பையும் குறுகிய காலத்தில் கம்ப்யூட்டரைப் பயன்படுத்திக் கண்டறிந்தார்.

தமிழ்நாடு காவல்துறையின் வரலாற்றில் முதன் முறையாக நீதிமன்றத்தில் நீரின் போக்கு தொடர்பான வழக்கொன்றில் சிற்றுருவில் செய்த ஆராய்ச்சியின் பயனாக, காவல்துறையினர் வழக்கை வெற்றிகரமாக நிருபித்தனர். கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி வடக்கு பக்கிங்காம் கால்வாய் மற்றும் வங்காள விரிகுடா இரண்டையும் இணைக்கும் ஒரு குறுக்கு வழிக்கால்வாயை வடிவமைப்புச் செய்துள்ளார். இத்திறனால் நிலத்தடிநீர், பாசனத்துறையின் நீரியல், நீர்நிலையியல், புவியியல், வேதியியல் விவரங்களை கம்ப்யூட்டரைக் கொண்டு ஓரிடத்திலேயே அவற்றை முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, பத்திரப்படுத்த முயற்சி எடுத்து வெற்றியும் கண்டுள்ளார்.

## திரு எஸ். வாசுதேவன்

தரமணி நீர் நிறுவனத்தின் செயற்பொறியாளர் திரு. எஸ். வாசுதேவன், ஐக்கியநாடுகள் அமைப்பின் உதவியுடன் கொலராடோ பல்கலைக் கழகத்தில் நீர்வள ஆய்வு சம்பந்தமாகப் பயிற்சி பெற அனுப்பப்பட்டார். பயிற்சியின் பொருட்டு இவர் இங்கிலாந்திற்கும் அனுப்பப்பட்டார். இப்பயிற்சியின் பலனாய், தொழிலக நீரியற் கழிவுகளைச் சரிசெய்யும் முறைகள், நிலநீர் ஆய்வு சம்பந்தப்பட்ட வழிமுறைகள், நீர்வள மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தொடர்பற்ற புலனாய்வு வழிமுறைகள், பாசனத்துறை மேலாண்மை முறைகள் போன்றவற்றைக் கற்று அவற்றைப் பொதுப் பணித்துறையில் செயற்படுத்தி அறிக்கைகள் அளித்துள்ளார்.

இந்த ஆய்வு அறிக்கைகளின் முடிவுகள் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தால் ஆராயப்பட்டுத் தமிழ்நாட்டின் நீர்வள மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப் பெரிதும் உதவும். இவரது அறிக்கைகளால் பெறப்பட்ட அடிப்படை விவரங்கள் நிலத்தடி நீர்ப்பிரிவின் கீழ் உள்ள நீர்நிறுவனத்தில் கம்ப்யூட்டரில் நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளன.

## திரு அல்பர்ட் நத்தானியேல் ராஜ்

பெரியார் நீர்ப்பாசனக் குடையின் நீர்ப்போக்கினை அளவிடுதல், பாலாறு அணைக்கட்டுத் திட்ட வாய்க்கால்கள் தூர்ந்து போவதைத் தடுக்கும் வகைகள் முதலிய சிக்கலான பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டவர் திரு அல்பர்ட் நத்தானியேல் ராஜ். இவர் தரமணி நீர் ஆய்வு நிறுவனச் செயற் பொறியாளராவார்.

கூவம் சீரமைப்புத் திட்டம், கடலூர் துறைமுகத் திட்டம், எண்ணூர் அனல் மின் நிலையம் போன்றவற்றில் நீர்ப் போக்குகளைச் செவ்வனே கணக்கிடுதல், நீரினை அளவிட்டுக் கட்டுப்படுத்துதல், கடலோரப் பகுதிகளில் கரை அரிப்பு முதலிய தீராத பெரும் பிரச்னைகட்குத் தீர்வுக்கான நீண்டகால விவரங்கள் சேகரிக்கும் பணியில் 8 ஆண்டுகள் பணிபுரிந்து மிக முக்கிய விவரங்களைச் சேகரித்துக் கொடுத்துள்ளார். இவரின் ஆராய்ச்சிகளின் பயனாக வெள்ளப் போக்கு வழி அமைப்புகளில் நீர்ப்போக்கினை அளவிடுதல், மனப்பாடு கடலரிப்புக்குரிய தீர்வு, கல்லணைக் கால்வாய் தூர்ந்து போவதைத் தடுக்கவழி, புதுக்கட்டளை மேல்நிலை வாய்க்



கால், புள்ளம்பாடி வாய்க்கால் முதலியவற்றுள் மணல் செல்வதைத்தடுக்கசிற்றுரு, மற்றும் ஆராய்ச்சிகள் நடத்தி வழி வகைகள் பரிந்துரை செய்தார்.

### திரு பெ. வெ. சகாதேவன்

பூண்டி நீரியல் நீர் நிலையியல் ஆய்வுக்கழக நீரியல் பிரிவு உதவி செயற் பொறியாளர் திரு பெ. வெ. சகாதேவன், கால்வாய்களின் மணல் போக்குகள், கடல் அரிப்புகள், அணைக்கட்டுகளின் கட்டுமானம் முதலான சிக்கல் மிகுந்த நீரியல் பிரச்னைகளுக்கு தீர்வுகாண சிற்றுருக்கள், ஆய்வுகள் ஆகியவற்றில் ஆர்வத்துடன் செயலாற்றிப் பல பிரச்னைகளுக்குத் தீர்வு கொடுத்துள்ளார்.

இந்த ஆய்வுகள் ஆராய்ச்சிகளின் விளைவாகப் பத்துக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். எக்லிப்ஸ் என்ற முட்டை வடிவ வளைகோட்டுத் தத்துவத்தை இவர் உலகுக்குத் தந்துள்ளார். இதன் பலனாக முட்டை வடிவ மழைக் குடைவுகள் சாக்கடைக் குழாய்கள் மற்றும் இவ்வடிவில் அமையவிருக்கும் திட்டங்கள் இவ்வடிவத்தால் பயனடையலாம். கிரணங்களின் ஒடு பாதையை விவரித்து இந்தப் பல குவிமைய வளைகோடுகள் உதவும்படியாக அமையலாம். இவரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை இந்தியப் பொறியியல் குழுமம்பாராட்டி திறமைச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

—வி. இராவணன்



முன்னாள் முதல்வர் திரு எம்.பக்தவத்சலம் அவர்கள் மறைவுக்கு சட்டமன்றத்தில் இரங்கல் தீர்மானம்

முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானத்தை, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 28.2.87 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் கொண்டு வந்தார்.

தீர்மான விவரம் வருமாறு:-

‘‘தமிழ்நாட்டின் முன்னாள் முதல் அமைச்சரும், இந்திய சுதந்திரப் போரில் பங்குகொண்ட மூத்த முதுபெரும் தலைவர்களில் ஒருவருமான திரு எம். பக்தவத்சலம் அவர்கள் 90ஆவது வயதில் 13.2.'87ஆம் நாளன்று மறைவுற்ற துயரச் செய்தி கேட்டு இப்பேரவை வருந்துகிறது. அவர் 1937ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டு வரை பாராளுமன்றச் செயலாளராகவும், 1946ஆம் ஆண்டில் இருந்து 1952ஆம் ஆண்டு வரையிலும் மீண்டும் 1954ஆம் ஆண்டு முதல் 1963ஆம் ஆண்டு வரையிலும் அமைச்சராகவும், 1963ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டு வரை முதலமைச்சராகவும் தமிழகத்தில் திறமையாகப் பணியாற்றியுள்ளார்.

‘‘அவரது மறைவால் தமிழகம் ஒரு தலைசிறந்த ஆட்சியாளரையும், பாரம்பரியம் மிக்க நாட்டின் தலைவரையும், முதுபெரும் அரசியல்வாதியையும், நல்ல பண்பாளரையும், திடமான மனவுறுதி கொண்டவரையும் இழந்து விட்டது. அவரது மறைவு தமிழக மக்களுக்கும், இந்திய நாட்டிற்கும் பேரிழப்பாகும். அவரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவையும் தெரிவித்துக் கொள்கிறது’’.

## சொந்தக்காலில் நிற்போம்!



கூட்டுறவு ஒரு கொள்கை-
கூட்டுறவு ஒரு தத்துவம்-
கூட்டுறவு ஒரு கோட்பாடு-
கூட்டுறவு ஒரு குறிக்கோள்-
கூட்டுறவு ஒரு ஜனநாயக நெறி-
கூட்டுறவு தனிமனிதன் சுரண்டலைத் தவிர்த்துப் பகிர்ந்தளிக்கும் ஒன்று-இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொண்டிருக்கிற நாடு வாழ்கிறது; வளர்கிறது.

சுவிட்சர்லாந்து, ஸ்வீடன், நார்வே, டென்மார்க், ஜப்பான், பெல்ஜியம் முதலான சிறிய நாடுகள் எல்லாம் முன்னுக்கு வரக் காரணம், கூட்டுறவு இயக்கம் தான்!

1844இல் இங்கிலாந்திலுள்ள லங்-காஷயரில் முதன் முதலாகக் கூட்டுறவு இயக்கம் தோன்றியது. 1905இல் தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் முதன் முதலில் தோன்றியது.



குஞ்சுப் பறவைக்குத் தாய்ப் பறவை எத்தனைக் காலத்துக்குத் தான் ஊட்டிக் கொண்டிருக்க முடியும்?

வாழை மரத்துக்கு எத்தனைக் காலம்தான் முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்க முடியும்?

காட்டில் வாழும் விலங்குகளுக்கு, காக்கை, குருவி முதலான பறவை இனங்களுக்கு, அவற்றின் மூதாதையர்களா சொத்து சேர்த்து வைத்துச் சென்றார்கள்?

நாம் சொந்தக்காலில் நிற்க முயல வேண்டும். இதை உணர்த்துவது தான் கூட்டுறவு இயக்கம்.

*(சென்னை திருவான்மியூரில், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் 42-வது கிளைத் திறப்பு விழாவில் மாண்புமிகு நிதி வருவாய் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து....)*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

